
1

ராஜேஷ்குமார்

# சிவப்பு நிமிஷங்கள்

விவேக் ரூபலா கதைகள்



# மின்னூலாக்கம்

## ராஜமாதங்கி

ராஜேஷ்குமாரின்

# விவேக் - ரூபலா கதைகள்

## வரிசை-1

*ராஜேஷ்குமார்*

**பூம்புகார் பதிப்பகம்**
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை - 600 108.
தொலைபேசி : 044-25267543

**விலை ₹ 80/-**

பூம்புகார் வெளியீட்டு எண் : 1148
முதல் பதிப்பு : பிப்ரவரி, 2017 O. No. : 02901261
உரிமை : ஆசிரியருக்கு
P. C. No. : 9817IY12

அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.

# பதிப்புரை

‘‘**ரா**ஜேஷ்குமார்’’ பெயரைக் கேட்டவுடன் வாசகர் எண்ணத்தில் உதயமாவது ‘‘க்ரைம் கதை’’ எழுத்தாளர் என்றால் அது மிகையாகாது. அவரது பல்வேறு கதைகள் நம் பதிப்பகத்தின் மூலம் வெளியாகி பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் அமோக ஆதரவை பெற்றுள்ளது.

ராஜேஷ்குமாரின் துப்பறிவாளர் விவேக்கையும் அவரது மனைவி ரூபலாவையும் அறியாத அவரது வாசகர்கள் எவரும் இல்லை எனலாம். விவேக் அவர்கள் தனித்தும் தன் மனைவி ரூபலாவுடன் சேர்ந்தும் துப்பறிந்த பல கதைகளைத் தொகுத்து தொடர் வரிசையாக வெளியிட உள்ளோம்.

துப்பறியும் கதைகளின் முக்கியத்துவம் என்னவெனில் அவை வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமன்றி நம் அறிவை, சிந்தனையை தூண்டும் தூண்டுகோலாக விளங்குகின்றன என்றால் அது பொய்யுரையல்ல.

பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்து பாராட்டிய சிறந்த துப்பறியும் கதைகளை தொகுத்து இத்தொடர் வரிசை நூல்களை வெளியிட உள்ளோம். என்றும் போல் இத்தொடர்க்கும் வாசகர்கள் அமோக ஆதரவை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**- பூம்புகார் பதிப்பகத்தார்**

# என்னுரை

நான் எந்த ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றாலும் சரி, என்னிடம் வாசகர்களால் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று தவறாமல் இடம்பிடித்து இருக்கும். அந்தக் கேள்வி இதுதான்.

''ராஜேஷ்குமார் ஸார்...! விவேக்-ரூபலா எப்படியிருக்காங்க?''

''நல்லாயிருக்காங்க...''

''அவங்க ரெண்டுபேரையும் கூட்டிட்டு வந்து இருக்கலாமே?''

''அடுத்ததடவை வரும்போது கண்டிப்பாய் கூட்டிட்டு வர்றேன்!''

மேற்கண்ட உரையாடலிலிருந்து நீங்கள் ஒரு உண்மையைப் புரிந்துகொள்ளலாம். என்னுடைய பெரும்பாலான நாவல்களில் இரு முக்கிய கதாபாத்திரங்களாய் வலம் வரும் கற்பனையான கேரக்டர்களான 'விவேக்-ரூபலா' உண்மையிலேயே இருக்கிறார்கள் என்று வாசகர்களில் பலபேர் நினைத்துக்கொண்டிருப்பதுதான். வாசகர்களின் இந்த இதயபூர்வமான உணர்வை நான் என்னுடைய எழுத்துக்குக் கிடைத்த வெற்றியாக எடுத்துக்கொண்டேன்.

தமிழக அரசின் புலனாய்வுத்துறையில் சிறப்பு அதிகாரியாக பணியாற்றும் விவேக், தான் சந்திக்கும் பல்வேறு சிக்கலான குற்றவியல் வழக்குகளை, குடும்பத் தலைவி ரூபலாவின் உதவியோடும், தன் உதவியாளன் விஷ்ணுவின் உதவியோடும் குற்றவாளிகளை திறமையான முறையில் எப்படி கண்டுபிடிக்கிறார் என்பதே பெரும்பாலான நாவல்களின் மையக் கருவாக இருக்கும்.

தொலைக்காட்சிப் பேட்டிகளிலும், பத்திரிகைப் பேட்டி களிலும் என்னிடம் கேட்கப்படும் இன்னொரு கேள்வி. 'உங்களின் பெரும்பாலான நாவல்களில் இடம் பெறும் புலனாய்வுத்துறை

அதிகாரிக்கு ‘விவேக்’ என்று பெயர் சூட்ட ஏதாவது காரணம் உண்டா என்பதுதான். அந்தக் கேள்விக்கு நான் சொல்லும் பதில் இதுதான்.

சுவாமி விவேகானந்தர் ஒரு துறவியைப்போல் வாழ்ந்தாலும் எஃகு இரும்பைப் போன்ற மன உறுதி கொண்டவர். எந்த ஒரு பிரச்சினையையும் துணிச்சலாய் எதிர் கொண்டவர். அவருடைய மேடைப் பேச்சில் ஆண்மை தெறிக்கும். ‘எனக்கு நூறு இளைஞர்களைக் கொடுங்கள். இந்த இந்தியாவையே மாற்றிக் காட்டுகிறேன்’ என்று முழக்கமிட்டவர். இப்படிப்பட்ட ஒருவர் காவல் துறையில் இருந்தால் எப்படியிருக்கும் என்று நான் யோசித்ததின் விளைவுதான் விவேகானந்தர் விவேக்காய் மாறினார்.

ரூபலா விவேக்கோடு இணைந்தது ஒரு சுவாரஸ்யமான சம்பவம். பொதுவாக பெண்களுக்கு மாலா, மணிமாலா, சுசிலா, அகிலா, விமலா, பரிமளா, கோகிலா என்ற பெயர்கள் இருக்கும். ஆனால் மதுரையில் ஒரு ஹோட்டலில் வரவேற்புப் பெண்ணாக பணியாற்றிய ஒரு இளம் பெண்ணின் பெயர் ரூபலா. நான் மதுரைக்கு ஒரு பணி நிமித்தமாக சென்றபொழுது அந்த ஹோட்டலில் தங்க நேர்ந்தது. நான் எழுத்தாளர் ராஜேஷ்குமார் என்று தெரிந்துகொண்ட அந்தப் பெண் ரூபலா என்னிடம் பேசும்பொழுது ‘‘ஸார்! நான் உங்க வாசகி. என்னோட பேர் ரூபலா. இந்த வித்தியாசமான பெயரை நீங்க ஏதாவது ஒரு நாவலில் உபயோகப்படுத்தினால் ரொம்பவும் சந்தோஷப்படுவேன்’’ என்று சொல்ல நான் ரூபலாவை விவேக்கிற்கு மானசீகமாய் திருமணம் செய்து வைத்தேன். ‘விவேக்-ரூபலா’ திருமணம் உண்மையிலேயே நடந்ததாய் நினைத்துக்கொண்டு மணியார்டரில் மொய்ப் பணம் அனுப்பிவைத்த வாசகர்களும் உண்டு.

க்ரைம் ப்ராஞ்சில் பணியாற்றும் தன் கணவர் விவேக்கிற்கு ரூபலா எப்படி உறுதுணையாய் இருந்து உதவி புரிகிறாள் என்பது நீங்கள் இந்த நாவலைப் படிக்கும்போதே புரிந்துகொள்ள முடியும். ஆரம்பகால நாவல்களில் கோகுல்நாத் விவேக்கிற்கு உதவியாளராய் இருந்தார். இப்போது விஷ்ணு விவேக்கோடு இணைந்து இருக்கிறான்.

விவேக், ரூபலா, கோகுல்நாத், விஷ்ணு இவர்கள் பங்குபெறும் நாவல்கள் இப்போது பெருமை மிகு பூம்புகார் பதிப்பகம் மூலம் அழகிய வடிவமைப்போடு அடக்கமான விலையில் உங்களிடம் வந்து சேர்ந்துள்ளது. ஒவ்வொன்றாக வாங்கிப் படியுங்கள். விவேக்-ரூபலா பங்குபெற்ற ஒவ்வொரு நாவலும் உங்களை பரவசப்படுத்தும்.

என் எழுத்துலக வளர்ச்சியைக் கண்டு பெருமையும் பூரிப்பும் கொள்ளும் தாய்மனம் பூம்புகார் பதிப்பகத்துக்கு என்றுமே உண்டு. 'விவேக்-ரூபலா'வின் மேல் மீண்டும் ஒரு தடவை வெளிச்சம் போட்டுக் காட்டிய பூம்புகார் நிறுவனத்துக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வணக்கம்.

# கதைக்குப் போகும்முன் ஒரு லைட்னிங்கால்

என் ப்ரிய வாசகரே!

என் அன்பான வாசக சகோதரியே!

நாவலுக்குள் மூழ்குமுன் -

கொஞ்சம் நில்லுங்கள்!

இதுவரை வெளிவந்த என் க்ரைம் நாவல்கள் பூமியில் நடைபெறும் குற்றங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. ஆனால், இந்த நாவல் விண்வெளியில் நடைபெற்ற ஒரு குற்றத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

அண்மையில் திருப்பூரில் நடந்த க்ரைம் ஆண்டு விழாவில் - சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் Rm. அருணாசலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க - இந்த SPACE NOVEL ஐ எழுதியுள்ளேன். ஆங்கிலம் தெரியாத வாசகர்களுக்கு இந்த நாவல் சலிப்பை அளித்துவிடக்கூடாதே என்பதற்காக 80% ஆங்கில வார்த்தைகளைத் தமிழ்படுத்தி எழுதியுள்ளேன்.

யாரும் விசிலடித்து விடாதீர்கள். இந்த நாவலில் விவேக் உண்டு. சரியாய்ப் பாதி நாவலுக்கு மேல்தான் விவேக் விஜயம்.

விண்வெளிப் பயணத்தைப் பற்றி எனக்கு ஓரளவு விஷயதானம் தந்த — ENCYCLOPAEDIA BRITANICA - VOLUME 20க்கு என் நன்றியோ நன்றி.

இந்த நாவலைப் படித்துவிட்டு யாரும் ''என்ன ராஜேஷ்குமார் ஸார்! நீங்கள் ராக்கெட்டில் போயிருக்கிறீர்களா?'' என்று கேட்டுவிடாதீர்கள். - பொருட்காட்சி ஜயண்ட் வீல் குடை ராட்டினத்தில் ஏறவே பயப்படும் ஆசாமி நான்.

அப்புறம்?

இந்நாவலை யார்க்காவது சமர்ப்பியுங்கள் என்று என் மனைவி சொன்னாள். உடனே சமர்பித்துவிட்டேன், கீழ்க்கண்ட நபர்க்கு.

ஸ்ரீ ஹரி கோட்டாவில் - ராக்கெட் தளத்தில் புட்டி புட்டியாய்ப் பணப் பால் குடித்து - மில்லிமீட்டர் மில்லிமீட்டராய் வளர்ந்து - ரூ. 28.73 கோடிகளில் உருவாகி - இரண்டு நிமிஷம் நாற்பது விநாடிகள் மட்டுமே உயிர்வாழ்ந்து வங்காளப் பெருங்கடலில் டைவ் அடித்துத் தற்கொலை செய்துகொண்ட - **ASLV** ராக்கெட்டுக்கு இந்நாவல் சமர்ப்பணம்.

இனி நாவலுக்குள் போகலாம்.

ரைட்

*(லைட்னிங்கால் - உடனடித் தொடர்பு)*

# பொருளடக்கம்

பக்கம்

சிவப்பு நிமிஷங்கள் ........................................................ 97

# சிவப்பு நிமிஷங்கள்

(1987)

## 1

லண்டன்.

ஹீத்ரோ ஏர்போர்ட், மெலிதான விடிகாலை. பனி தூவும் ஆகாயம். குளிரை உப்பு மூட்டைத் தூக்கிக்கொண்ட காற்று.

ரன்வேயில் பாய்ந்து வந்த விமானம் மில்லி மீட்டர் மில்லி மீட்டராய் தளர்ந்து - தன் பூதாகரமான உடம்பைத் திருப்பிக் கொண்டு நின்றது. விமானத்தின் இடுப்பில் ஸ்டேர்ஸ் போய் ஒட்டிக்கொள்ள - பயணிகள் இறங்க ஆரம்பித்தனர். தூக்கம் கெட்ட முகங்கள்.

எல்லாமே வெள்ளைத் தோல்கள்.

பழுப்பு முடிகள். பீங்கான் கண்கள். சிவப்புக் கன்னங்கள். ஆங்கிலம் குட்டிக் கர்ணம் போடும் நுனி நாக்குகள். சிலுவை டாலர்கள் ஆடும் கழுத்துக்கள். பெண்களின் பாதி திறந்த மார்புகள். தோளில் தொங்கும் 'டச்சப் கிட்'களின் அசைவுகள்.

இந்த வெளிநாட்டுத்தனங்களுக்கு மத்தியில் - விவேக்கும் ரூபலாவும் தெரிந்தார்கள். ரூபலா பிரமிப்பாய் ஹீத்ரோ விமான நிலையத்தைப் பார்க்க - அவளுடைய விலாவில் ஆட்காட்டி விரலால் குத்தினான் விவேக்.

''ரூபலா... பரக்க... பரக்க... அப்படிப் பார்க்காதே... இதெல்லாம் எனக்கு சகஜம் என்கிற மாதிரி பாரு... மனசுக்குள்ளேயே ஆச்சர்யப்பட்டுக்கோ...''

''அம்மாடி... எவ்வளவு பெரிய ஏர்போர்ட்...?''

''இப்பத்தானே சொன்னேன்...?''

''என்னால ஆச்சர்யப்படாம இருக்க முடியலையே...?'' ரூபலா தன் அழகான கண்களை விரித்து சுற்றும் முற்றும் பார்த்தாள்.

சுற்றிலும் ஏராளமான விமானங்கள். வெளிநாட்டு விமானங்கள், தத்தம் நாட்டு தேசீய முத்திரைகளோடு - வெள்ளி உடம்புகளோடு பளபளத்தன.

ஏர்போர்ட்டுக்கு வெளியே - மழை பெய்கிற மாதிரி லேசான பனி. நிறைய பேர் ஜெர்கின் கோட்டுகளோடு தெரிந்தார்கள். தொலைவில் ஊசி ஊசியாய் கட்டிடங்கள் நின்றிருந்தன.

விவேக் லக்கேஜ்களை ஒரு சிறிய ட்ராலி வண்டியில் ஏற்றித் தள்ளிக்கொண்டு நடந்தான்.

''இப்போ... நாம எங்கே போறோம்...?''

''இமிக்ரேஷனுக்கு போறோம்...''

(பாஸ்போர்ட் என்பது நம்நாடு தரும் அனுமதி. விசா என்பது அந்த நாடு தரும் அனுமதி. அந்த நாட்டுக்குப் போக அனுமதிப்பதும், அனுமதிக்காததும் அந்தந்த இமிக்ரேஷன் (குடிபெயர்ப்பு) பகுதியில் உட்கார்ந்திருக்கும் அதிகாரியைப் பொறுத்தது...)

''இமிக்ரேஷன் இங்கிருந்து எவ்வளவு தூரம்?''

''ரெண்டு கிலோ மீட்டர் போகணும்... ட்ராலியைத் தள்ளு... ரூபலா. இங்கே போர்ட்டர் கிடையாது. நம் கையே நமக்கு உதவி...''

இரண்டு பேரும் சேர்ந்து - அந்த வழுவழுப்பான தரையில் - ட்ராலியை உருட்டிக்கொண்டு போனார்கள்.

இமிக்ரேஷன் பகுதியை நெருங்கியபோது - அந்த உயரமான - சூட் அணிந்த இளைஞன் எதிர்பட்டான். முகத்தில் இந்தியத்தனம். சுத்தமான தாடை. ரோஸ் நிற உதடுகள்.

''வெல்கம் டூ லண்டன்...''

விவேக் நிமிர்ந்தான். அந்த இளைஞன் தொடர்ந்து ஆங்கிலத்தில் கேட்டான்:

''நீங்கள் மிஸ்டர் விவேக்?''

''எஸ்...''

''ஐயாம் மேத்யூ... இண்டியன் எம்பஸியில் செக்யூரிடி கார்டாக இருக்கிறேன். உங்களை ஏர்போர்ட்டிலிருந்து அழைத்துப் போக வேண்டியது என்னுடைய கடமை.''

விவேக் புன்னகைத்தான். ''என்னை எப்படி அடையாளம் கண்டுகொண்டீர்கள்?'' மேத்யூ பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து - விவேக் - ரூபலா போட்டோவை எடுத்துக் காட்டினான். ''எம்பஸியில் நேற்றைக்கு இரவே... என்னிடம் இந்த போட்டோவைக் கொடுத்து விட்டார்கள்... உங்களை வரவேற்று - ஏர்போர்ட்டிலிருந்து அழைத்துப் போய் ஹோட்டலில் தங்க வைக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு...''

''எந்த ஹோட்டலை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?''

''ஹோட்டல் பிக்-பென்''

''அது எந்தப் பகுதியில் இருக்கிறாது.''

''எட்ஜ்வேர்''

''நானும் என் மனைவியும் இமிக்ரேஷனை முடித்துக் கொண்டு வருகிறோம்... அதுவரைக்கும் நீங்கள் காத்துக்கொண்டிருக்க முடியுமா...?''

''ஷ்யூர்... நான் லௌன்ச்சில் ட்யூப் நாற்காலி வரிசையில் காத்திருக்கிறேன்... வாருங்கள்.''

மேத்யூ நகர்ந்து கொள்ள விவேக்கும் ரூபலாவும் இமிக்ரேஷனை நோக்கிப் போனார்கள். ரூபலா சந்தோஷித்தாள்.

''பரவாயில்லையே... நம்ம எம்பஸி... புத்திசாலித்தனமா ஆளை அனுப்பி ரிஸீவ் பண்றாங்களே...''

''ரூபலா... சந்தோஷப்படாதே...''

''ஏன்...?''

''நம்மை... வரவேற்க... வந்திருக்கிற மேத்யூ... எம்பஸியைச் சேர்ந்த ஆள் மாதிரி தெரியலை...''

முகம் மாறினாள் ரூபலா.

''எ... எ... என்ன சொல்றீங்க?''

''அவன் பேசுகிற இங்கிலீஷை கவனிச்சியா...? கனடா அஸ்ஸெண்ட்... இவன் நமக்கு சாதகமானவன் இல்லை... நானும் நீயும் இங்கே வரப்போகிற விஷயம் எம்பஸிக்கு மட்டும்தான் தெரியும்... ஆனா நடுவுல யாரோ மோப்பம் பிடிச்சு... வந்துட்டாங்க... இந்த மேத்யூ நம்ம இண்டியன் எம்பஸி ஆள்தானா இல்லையாங்கிறதை இப்போ கண்டுபிடிச்சுடலாம்...''

''எப்படி...?''

''இமிக்ரேஷன் கௌண்டர்க்கு வா... சொல்றேன்...''

கௌண்டர்க்குள் நுழைந்தார்கள்.

ஸ்கர்ட் அணிந்து கண்களில் கூர்மையோடு உட்கார்ந்திருந்த அந்தப் பெண் இரண்டு பேரின் பாஸ்போர்ட் விசாக்களை பார்த்துவிட்டு நிமிர்ந்தாள். கேட்டாள்.

''பர்ப்பஸ் ஆப் விஸிட்...?''

''ஹனிமூன்...''

அவள் சிரித்தாள்... ''ஹனிமூனுக்கேற்ற அருமையான சீஸன்...'' சொல்லிக் கொண்டே பாஸ்போர்ட் விசாவில் எதையோ எழுதி ரப்பர் ஸ்டாம்ப்பைக் குத்தினாள்.

''மேடம்...'' - விவேக் கூப்பிட்டான்.

''எஸ்...''

''நான் ஒரு டெலிபோன் செய்துக் கொள்ளலாமா...?''

''தாராளமாய்...'' - எதிரேயிருந்த கண்ணாடிக் கூண்டைக் காட்டினாள். ''கையில் சரியான பென்னி வைத்துக்கொள்ளுங்கள்...''

''தாங்க்யூ...'' விவேக் ரூபலாவை அங்கிருந்த நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு டெலிபோனின் கண்ணாடி கூண்டுக்குள் நுழைந்தான். கதவைச் சாத்திக்கொண்டு - தன் பாக்கெட்டில் இருந்த - சின்னஞ்சிறு டயரியை எடுத்து - அம்பாசிடரின் டெலிபோன் நெம்பரை - பால் பாய்ண்ட் பேனாவால் உள்ளங்கையில் குறித்துக் கொண்டு ரிஸீவரை காதுக்கு கொடுத்தான்.

பட்டன் சிஸ்டம் டெலிபோன் எண்களைத் தட்டிவிட்டு - மறுபக்கம் 'இண்டியன் எம்பஸி' என்ற குரல் வந்ததும் பென்னி நாணயங்களை ஸ்லிட்டில் போட்டான்.

லைன் உயிர்ப்புக்கு வந்தது.

''எஸ்... திஸ்... ஈஸ்... இண்டியன் எம்பஸி...''

''ஐயாம் விவேக்... க்ரைம் ப்ராஞ்ச் ப்ரம் இண்டியா...''

தொடர்ந்து குரல் ஆங்கிலத்தில் கேட்டது. ''என்ன வேண்டும் உங்களுக்கு...?''

''அம்பாஸிடரோடு நான் பேச வேண்டும்...''

''என்ன விஷயமாய்...?''

''அதை அவரிடம்தான் சொல்ல வேண்டும்...''

''ஒரு நிமிஷம் லைனில் இருங்கள்...''

இருந்தான் விவேக்.

இரண்டு நிமிஷம் கழித்து அம்பாசிடர் பேசினார். மென்மை யான குரல்.

''யார் நீங்கள்...? என்ன வேண்டும்...?''

''இண்டியன் சி.பி.ஐ.யிலிருந்து உங்களுக்கு தகவல் வந்திருக்கலாம்... நான் விவேக்... அடாமிக் ரிசர்ச் ஸ்காலர் ஆத்மராம் கான்ப்ரன்ஸ் தொடர்பாக வந்திருக்கிறேன்...''

''க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர்?''

''எஸ்...''

''எப்போது வந்தீர்கள்...?''

''இப்போதுதான்...''

''எங்கிருந்து பேசுகிறீர்கள்...?''

''ஹீத்ரோ ஏர்போர்ட்...''

''கஸ்டம்ஸை முடித்துக்கொண்டீர்களா...?''

''இல்லை... இனிமேல்தான்...''

''கஸ்டம்ஸை முடித்துக்கொண்டு - ஏர்போர்ட் கிழக்கு வாசலில் காத்திருங்கள். நான் காரை அனுப்புகிறேன்...''

''ஒரு அதிர்ச்சியான விஷயம்...?'' - விவேக் ஆரம்பித்தான்.

''என்ன...?''

''எம்பஸி செக்யூரிடி கார்ட் என்று ஒருவன் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு எங்களுக்காக காத்துக்கொண்டிருக் கிறான். பெயர் மேத்யூ என்று சொல்கிறான்...''

அம்பாசிடர் மறுமுனையில் அதிர்ந்தார்.

''மேத்யூவா...? அந்தப் பெயரில் யாரும் இங்கே இல்லையே... அவனை உடனடியாய் மடக்கி ஏர்போர்ட் போலீஸிடம் ஒப்படையுங்கள்... நான் ஏர்போர்ட் வரட்டுமா?''

''வேண்டாம்... நானே அவனைக் கவனித்து போலீஸுக்கு தாரை வார்த்து விடுகிறேன்... நீங்கள் ஏர்போர்ட்டின் கிழக்கு வாசலுக்கு காரை அனுப்பி வையுங்கள்...''

''பதினைந்து நிமிஷத்தில் கார் வந்துவிடும்...''

''தாங்க்யூ...''

ரிஸீவரைப் பொருத்திவிட்டு - வெளியே வந்தான் விவேக். இமிக்ரேஷனுக்கு முன்னாலும் - கஸ்டம்ஸின் முன்னாலும் நீளமான க்யூ நின்றிருந்தது. ரூபலா ஒரு ப்ரெஞ்சுக் குழந்தையோடு கன்னம் தட்டி பேசிக் கொண்டிருந்தாள்.

''ரூபலா... கிளம்பு...''

''என்னாச்சு...?''

''வந்திருக்கிற மேத்யூ பெரிய தகல்பாஜி... கஸ்டம்ஸை முடிச்சுகிட்டு அண்ணாச்சி கிட்டே போவோம்...''

க்யூவில் நின்று - கஸ்டம்ஸை முடித்துக்கொண்டு லௌன்ச்சுக்கு திரும்பி ட்யூப் நாற்காலி வரிசைக்கு போனார்கள்.

ஒரு சிப்ஸ் பாக்கெட்டைப் பிரித்து - கொரித்துக் கொண்டிருந்த மேத்யூ இவர்களைப் பார்த்ததும் - அந்தப் பாக்கெட்டை அப்படியே கசக்கி - வேஸ்ட்-பின்னில் எறிந்துவிட்டு எழுந்து வந்தான்.

‘‘கஸ்டம்ஸில் ரொம்பவும் கஷ்டப்படுத்தினார்களா?’’

‘‘நோ... நோ... அதெல்லாம் ஒன்னுமில்லை...’’

‘‘போகலாமா...?’’

‘‘கார் எந்தப் பக்கம் நிற்கிறது...?’’

‘‘மேற்கு வாசலில்...’’

மேத்யூ முன்னால் நடந்து கூட்டிப்போனான். ஏர்போர்ட் டெர்மினலின் கண்ணாடிச் சுவர்களில் வண்ண ப்ளோரஸண்ட் விளம்பரங்கள், பெப்ஸி கோலா, ராயல் விஸ்கி, கண்டேசா கார், ட்ராக்டர், வைட்டமின் மாத்திரைகள், டென்னிஸ் மேட்ச், நைட் கிளப் நடனங்கள், கம்ப்யூட்டர் சாதனங்கள் - எல்லாவற்றுக்குமே விளம்பரங்கள். எல்லா விளம்பரங்களிலும் டாப்லஸ் பெண்கள் தாராளமாக இருந்தார்கள்.

‘‘மாஸ்டர் மாத்யூ...’’

நான்கடி முன்னால் போய்க் கொண்டிருந்தவன் திரும்பினான். நடந்துகொண்டே கேட்டான்.

‘‘ஸார்...’’

‘‘எம்பஸியில் நீங்கள் என்ன வேலை பார்ப்பதாக சொன்னீர்கள்?’’

‘‘செக்யூரிடி கார்ட்...’’

‘‘எத்தனை வருஷமாய்...?’’

‘‘ரெண்டு வருஷமாய்...’’

‘‘ஈஸிட்...? உங்கள் தாயகம்...?’’

‘‘இந்தியா...’’

‘‘தமிழ் தெரியுமா...?’’

''தெரியாது...''

''இந்தி...?''

''சுமாராய் தெரியும்...''

''ஏக் துஜே கேலியே'வுக்கு என்ன இங்கிலீஷ்... சொல்லுங்க பார்க்கலாம்...?''

நடந்து கொண்டிருந்த மாத்யூ சட்டென்று நின்று திரும்பினான்.

மறைவாக - விவேக்கின் கைகளில் அந்த பிஸ்டல் இருந்தது. டெர்மினலில் நடந்து கொண்டிருந்த யார்க்கும் தெரியாமல் அவனையே பார்த்தது. ரன்வேயில் அரேபிய விமானம் ஒன்று வேகம் பிடிப்பதற்காக 'ரொய்ய்ங்'கென்று எஞ்சின்களை அலற விட்டது. குட்டைப் பாவாடையும் - டீ ஷர்ட்டுமாய் இருந்த ஒரு தம்பதி பக்கவாட்டில் அணைத்தபடி முத்தமிட்டுக் கொண்டே போனார்கள். ஏர்போர்ட் ஸ்பீக்கர் ஒரு விமானத்தின் ஜாதகத்தை - சொல்லி அது வர லேட்டாகும் என்று சொல்லிக்கொண்டிருந்தது.

பிஸ்டல் மாத்யூவையே பார்த்தது.

மாத்யூ ஜுரத்தில் இருந்தான். விவேக் மெலிதான குரலில் சொன்னான். ''ஸ்காட்லாண்ட் யார்டுக்கு அடுத்தபடியா... மெட்ராஸ் போலீஸ்... ரொம்பவும் பிரசித்தம். அந்தப் பாசறையில வந்தவன் நான்... நீயாரு... எதுக்காக... இந்த பொய்யான மாத்யூ?''

தெரிந்தும் தெரியாமல் மறைவாய் இருந்த - அந்த பிஸ்டலையே பார்த்தான் மாத்யூ... மேலுதட்டிலும் தாடையிலும் ஆரோக்யமாய் வியர்த்தான்.

''போலீஸ் பாட்ரோல் பூத்... எதிர்திசையில இருக்கு மாத்யூ... அப்படியே பொடி நடையா நடக்கலாமா...? உன்னை போலீஸுக்கு

தாரை வார்த்துட்டு - நாங்க உண்மையான எம்பஸி கார்ல கிளம்பணும்...''

விவேக் பேசிக்கொண்டிருந்த அதே விநாடி -

மாத்யூ குபீரென்று பக்கவாட்டில் சாய்ந்து மலர்க்கொத்து 'பொக்கே'யோடு வந்து கொண்டிருந்த ஒரு பெண்ணை - இழுத்து - தன் நெஞ்சுக்கு முன்னால் நிறுத்திக்கொண்டான். மூச்சிறைக்கிற குரலில் கத்தினான்.

''டோண்ட் மூவ்... விவேக்...''

ஆனால் விவேக் முன்னால் வந்தான்.

அந்த மலர்க்கொத்துப் பெண் திமிறி - வீறிட - ஏர்போர்ட்டின் கவனம் முழுவதும் - கத்தி பாய்ந்த மாதிரி - இவர்கள் பக்கம் பாய்ந்தது.

.....

## 2

விவேக் ஒரு விநாடி கவனம் கலைந்து - பக்கவாட்டில் திரும்பி லௌன்ச்சின் நிலைமையைப் பார்க்க - மாத்யூ அந்த மலர்க்கொத்து பெண்ணை மூர்க்கமாய் விவேக்கை நோக்கித் தள்ளினான்.

வீசியெறியப்பட்ட ஒரு பொருள் மாதிரி - திடும்மென்று அந்தப் பெண் மேலே வந்து விழ - விவேக்கின் கையிலிருந்த பிஸ்டல் - எகிறிப்போய் - ஒரு ஷோ-கேஸ் கண்ணாடிப் பெட்டி அருகேபோய் விழுந்தது. கீழே விழப்போன விவேக் - தன்னை நிலைப்படுத்திக்கொண்டு நிற்பதற்குள் அவன் - மாத்யூ - ஜனங்களுக்கு மத்தியில் புகுந்து ஓட ஆரம்பித்திருந்தான்.

''ரூபலா...''

விவேக் பதட்டமாய் கூப்பிட்டான்.

''ம்...''

''நீ இதே இடத்துல நில்லு... நான் வருகிறவரைக்கும் நகராதே'' - சொல்லிவிட்டு கீழே கிடந்த பிஸ்டலைப் பொறுக்கிக் கொண்டு - கான்வாஸ் ஷூக்கள் சப்திக்க ஓடினான்.

''ச்ச்சப்... ச்ச்சப்...''

எல்லோரும் விவேக்கையே பார்த்தார்கள்.

விவேக் கும்பலுக்கு மத்தியில் அவனைத் தேடினான். மாத்யூ சூட் அணிந்த - கும்பலுக்கு மத்தியில் - ஒரு விநாடி தெரிந்து - மறு விநாடி மறைந்து ஓடினான்.

விவேக் துரத்தினான்.

எதிர்பட்ட ஆண்களை விலக்கிக்கொண்டு -

பெண்களின் மேல் மோதிவிடாமல் ஜாக்கிரதை காத்து - கிடைத்த இடைவெளிகளில் ஓடினான். மாத்யூ திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே - மேற்குபக்க வாசலை நோக்கி ஓடினான். ட்ராலிகளையும் ரோலர் சூட்கேஸ்களையும் உருட்டிக் கொண்டிருந் தவர்கள் நின்று திரும்பிப் பார்த்து குழப்பமானார்கள்.

விவேக் ஓட்டத்தின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

அதே விநாடி -

முன்னால் ஓடிக்கொண்டிருந்த மாத்யூ திடீரென்று குப்புற விழுந்து - டெர்மினலின் வாசலில் மல்லாந்தான்.

வயிற்றில் ஒரு ரத்த பவுண்டன் பீச்சியடித்தது. கைகளும் கால்களும் திசைக்கொன்றாய் துடித்தது.

விவேக் ஓடிவந்து அவனருகே குனிந்தான். சர்ட் பாக்கெட்டிலும் பாண்ட் பாக்கெட்டிலும் கையை நுழைத்து தேடினான்.

ட்யூப்ரயில் டிக்கெட் மட்டும் கிடைத்தது.

சில பென்னிகள்.

'யார் இவனைச் சுட்டார்கள்?'

சுற்றும் முற்றும் பார்த்தான் விவேக்.

கீழே விழுந்து - துடிப்பு அடங்கிக்கொண்டிருந்த மாத்யூவைச் சுற்றி கும்பல் கூட ஆரம்பித்தது. 'இதை உடனே போலீஸுக்கு தெரிவிக்க வேண்டும்...'

யோசித்துக்கொண்டே நிமிர்ந்த - விவேக்கின் தோள்பட்டையில் வெதுவெதுப்பாய் அந்த கரம் விழுந்தது. திரும்பினான்.

அந்த இன்ஸ்பெக்டர் நின்றிருந்தார். முட்டை வடிவ முகம். கோபால்ட் நீலத்தில் கான்டாக்ட் லென்ஸ் பொருத்தின மாதிரி கண்கள். பிரிட்டிஷ்காரர்களுக்கே உரித்தான நீள மூக்கு. செர்ரி பழநிற உதடுகளுக்கு மேலே பழுப்பு நிறத்தில் கம்பி கம்பியாய் மீசை. கருப்பில் நீலநிறம் கலந்த மாதிரியான யூனிபார்மில் திடகாத்திரமாய் தெரிந்தார். யூனிபார்மின் தோள்பட்டைகளிலும், தொப்பியிலும் - நட்சத்திரங்கள் வரிசை கட்டி சிரித்தது. அவரருகே இரண்டு கான்ஸ்டபிள்கள். எலிக்கல் ஷேப்பில் தொப்பி. பச்சை நிறக் கண்கள்.

இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபிள்களிடம் கண்ணைக்காட்ட - அவர்கள் மாத்யூ அருகே மண்டியிட்டு உட்கார்ந்து பார்த்துவிட்டு - ஒரே குரலில் சொன்னார்கள்.

''ஹி... ஈஸ்... டெட்... ஸார்...''

இன்ஸ்பெக்டர் தன் நீலநிறக் கண்களால் விவேக்கை சாய்வாய்ப் பார்த்தார். கொஞ்சம் மரியாதை குறைந்த ஆங்கிலத்தில் கேட்டார்.

''இவனைச் சுட்டது யார்...?''

''தெரியாது...''

இவனை துரத்திக்கொண்டு ஓடிவந்தது நீங்கள்தானே?''

''ஆமாம்...''

''யார் இவன்...?''

''அதுவும் எனக்குத் தெரியாது... மாத்யூ என்று சொல்லிக் கொண்டு என்னை ஏமாற்றப் பார்த்தான். நான் தெரிந்துகொண்டதும் இவன் ஓடப் பார்த்தான். இவனைப் பிடிப்பதற்காக நான் துரத்தினேன். அதற்குள் யாரோ சுட்டுவிட்டார்கள்...''

''நீங்கள் இந்தியாவா...?''

''ஆமாம்...''

''பாஸ்போர்ட்... விசா... எடுங்கள்...''

''விவேக் தன் பாஸ்போர்ட், விசா, உத்யோக அட்டை எல்லாவற்றையும் எடுத்து அந்த இன்ஸ்பெக்டரின் சிவப்பான - பெரிய உள்ளங்கையில் வைத்தான். அவர் பாஸ்போர்ட்டையும் - விசாவையும் புரட்டிவிட்டு - உத்யோக அட்டையை பார்த்ததும் - குபுக்கென்று ஒரு ஆச்சர்யத்தோடு நிமிர்ந்தார்.

''நீங்கள் மெட்ராஸ் க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர்...?''

''எஸ்...''

''நான் இன்ஸ்பெக்டர் கானர்ஸ்... ஏர்போர்ட் விங்...'' கான்ஸ்டபிள்கள் ஸ்ட்ரெச்சர்க்கும் - மற்ற உதவிகளுக்கும் அலைய - இன்ஸ்பெக்டர் கானர்ஸ் விவேக்கை அழைத்துக்கொண்டு - தன்னுடைய ட்யூட்டி ரூமுக்கு திரும்பினார். சின்னதாய் இருந்த கண்ட்ரோல் எந்திரத்தை உசுப்பினார். பேசிவிட்டு விவேக்கின் பக்கம் திரும்பினார்.

''இன்னும் அரைமணி நேரத்தில் சுட்டவனைப் பிடித்து விடுவார்கள்.''

''எப்படி...?''

''அதுதான் ஸ்காட்லாண்ட் யார்ட் மந்திரம்... ஹீத்ரோ ஏர்போர்ட்டைச் சுற்றிலும் கவசம் போட்டாயிற்று. ஆள் நிச்சயமாய் பிடிபட்டுவிடுவான்... அது போகட்டும். உங்களைச் பற்றிச் சொல்லுங்கள். அந்த மாத்யூவைப் பற்றிச் சொல்லுங்கள்...''

விவேக் சொல்லி முடித்தான்.

இன்ஸ்பெக்டர் கானர்ஸ் கேட்டார். ''இதற்கு முன்னால் இந்த மாத்யூவை நீங்கள் பார்த்ததில்லை...''

''பார்த்ததில்லை...''

''இப்போது நீங்கள் எங்கே போக வேண்டும்...?''

''இண்டியன் எம்பஸி...''

''போலீஸ் காரில் எம்பஸிக்கு போய்விடுகிறீர்களா...?''

''வேண்டாம்... எம்பஸி காரே வரும்... இந்த மாத்யூ மரணம் சம்பந்தமாய் என்னை தொடர்புகொள்ள வேண்டுமானால் - எம்பஸிக்கு போன் செய்யுங்கள்.''

விவேக் கானர்ஸின் கையைப் பற்றி குலுக்கிவிட்டு வெளியே வந்தான். ஏர்போர்ட் லௌன்ச் சகஜ நிலைமைக்கு திரும்பியிருந்தது.

மாத்யூ அப்புறப்படுத்தப்பட்டு - அந்த இடம் துப்புரவாய் தெரிந்தது. ஜனங்கள் பழையபடி ரோலர் சூட்கேஸ்களை இழுத்தபடி போய்க்கொண்டிருந்தார்கள். கண்ணாடித் தடுப்புக்கு அப்பால் - மப்பான பனிப் புகையில் ஒரு விமானம் ரன்வேயில் சக்கரம் பதித்துக்கொண்டிருந்தது.

லக்கேஜ்களோடு தனியாய் காத்திருந்த ரூபலா, விவேக்கை தவிப்பாய் எதிர்கொண்டாள்.

''என்னங்க... என்னாச்சு...?''

''ஆள் போயிட்டான்...''

''போயிட்டான்னா...? தப்பிச்சுட்டானா?''

''இல்லே... மேலே போயிட்டான். எவனோ அவனை சுட்டு கொன்னுட்டான்...''

''யாரு...?''

''இன்னும் கொஞ்ச நேரத்துல ஸ்காட் போலீஸ் அவனை அமுக்கிடுவாங்க... வா நாம போகலாம்... இந்நேரம் எம்பஸி கார் வந்திருக்கும்...''

இருவரும் லக்கேஜ்களை சுமந்துகொண்டு - ஏர் போர்ட்டின் கிழக்கு வாசலுக்கு வந்தார்கள். தேசீயக் கொடி பறக்கும் பி.எம்.டபிள்யூ கார் காத்திருக்க - அதனருகே சிவப்பு வெள்ளை யூனிபார்ம் அணிந்த டிரைவர் Mrs. & Mr. VIVEK என்ற அட்டையை உயர்த்தியபடி நின்றிருந்தர்ன். டிரைவர் கொஞ்சம் வயோதிகம் காட்டினான். பழுப்பு முகம். எந்த தேசத்தவன் என்று கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது.

அவனருகே போய் நெருங்கி நின்று - அவன் தோளைத் தொட்டு - ''நான்தான் விவேக்... புறப்படலாமா...?'' என்று கேட்டான்.

டிரைவர் அட்டையை கீழே தாழ்த்தினான். கொஞ்சம் பிசிர் தட்டுகிற ஆங்கிலத்தில் கேட்டான். நான் உங்கள் பாஸ்போர்ட் - விசாவை பார்க்கலாமா...?''

விவேக் எடுத்து நீட்டினான்.

அவன் பார்த்துவிட்டு திரும்பவும் விவேக்கிடம் கொடுத்து விட்டு ''மன்னித்துக்கொள்ளுங்கள். பாஸ்போர்ட்டையும் - விசாவையும் பார்க்கச் சொல்லி - எம்பஸி உத்திரவு...'' என்றான்.

''இனி போகலாமா...?''

''தாராளமாக...'' காரின் பின்சீட்டுக் கதவைத் திறந்துவிட்டான். டிரைவர். புஷ்பக் குவியல் மாதிரி இருந்த - சீட்டில் விவேக்கும் ரூபலாவும் புதைந்தார்கள்.

கார் புறப்பட்டது.

கான்க்ரீட் ரோட்டுக்கு வந்ததும் - டிரைவர் சொன்னான்.

''ஸீட் பெல்ட்டை அணிந்து கொள்ளுங்கள்.''

ரூபலா ஆச்சர்யப்பட்டாள். விவேக்கிடம் கேட்டாள். ''ஸீட் பெல்ட் எதுக்கு...?''

''காரோட வேகம் அப்படி... இங்கே எல்லாமே உச்சபட்ச வேகம். எண்பது மைலுக்கு குறைவாய் காரை யாரும் ஓட்ட மாட்டார்கள்...''

விவேக் சொல்லிக்கொண்டிருந்த - அதே விநாடி -

காரின் வேகம் அதிகரித்தது -

வெளியே மண்டியிருந்த பனிக்காற்றை சீவியது. அந்த காலை நேரத்திலும் அபார போக்குவரத்து. நூற்றுக்கணக்கில் கார்கள். பெரும்பாலும் வண்டு மாதிரியான அமைப்பில் மினி

கார்கள். பூதாகரமான ட்ரக்குகள், மாரிஸ் ஆக்ஸ்போர்டு - ஜெம்தார் வேன்கள் - பென்ஸ் - கறுப்பு - ஆஸ்டின் வாடகைக் கார்கள் - முழுசுமாய் போர்த்தப்பட்ட அலுமினிய உடம்பு லாரிகள். எல்லா வாகனங்களுமே 'ஜிர்ர்ர்' என்ற வேகத்தில் இருந்தன.

டிரைவர் கேட்டான்.

''சங்கீதம் கேட்கிறீர்களா...?''

''ம்...''

அவன் விரலால் ஏதோ பொத்தானை அழுத்தினான். அடுத்த விநாடி கார் முழுவதும் - ஹைபி சங்கீதம் வழிந்தது. குளிர் ஜுரத்தில் பாடினமாதிரி - ஒரு பாப் பாடகி பாட்டு கொஞ்சம் இம்சையாகவும் - இதமாகவும் இருந்தது.

சுத்தமான கான்க்ரீட் ரோட்டில் - கார் - வாய்க்குள் விழுந்த ஐஸ்க்ரீமாய் வழுக்கியது. ரோட்டில் இரண்டு பக்கமும் - கைதேர்ந்த ஓவியன் தீட்டின மாதிரி பசேலென்ற புல்வெளிகள். சில கிலோமீட்டர்களுக்கு பழுப்பு நிற கோரைப் புற்கள். மணல் மேடுகள். திடீரென்று வீடுகள் முளைக்க - அங்கொன்றும் இங்கொன்றுமாக பழைய கட்டிடங்கள்.

நகரின் எல்லைக்குள் நுழைந்ததும் - நாற்பது மாடிக் கட்டிடங்கள் சுலபமாய் தெரிந்தது. எல்லாமே பனியில் நனைந்து தெரியும்போது - மாவில் செய்த மாதிரி இருந்தது.

நகர போக்குவரத்து சிரமமாய் இருந்தாலும் கார் சிக்னல்களில் மாட்டாமல் சுலபமாய் போயிற்று.

சரியாய் பதினைந்தாவது நிமிஷம் -

கார் அம்பாஸிடரின் - அலுவலக கேம்பஸுக்குள் நுழைந்து செக்யூரிடி ஆசாமிகளுக்கு மத்தியில் அணைந்தது.

விவேக்கும் ரூபலாவும் இறங்கினார்கள்.

அலுவலகத்தைச் சுற்றிலும் சுத்தமான புல்தரை. நடுநடுவே மஞ்சளாய் பூத்துக்கொட்டும் ட்யூலிப் மலர்கள். சிவப்பு இலைகளோடு கொடிகள்.

செக்யூரிடி கார்டு முன்னால் நடந்து - அழைத்துப் போக - இருவரும் பின் தொடர்ந்தார்கள். நீலநிற வெல்வெட் மேய்ந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

இந்திய தூதர் ஆர்லேண்டா அகலமான சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து ஒரு ரெடிமேட் புன்னகையோடு காத்திருந்தார். விவேக்கைப் பார்த்ததும் எழுந்தார்.

''வெல்கம்... மிஸ்டர் அண்ட் மிஸஸ் விவேக்...''

விவேக்கிற்கு கைகுலுக்கி - ரூபலாவுக்கு வணக்கம் சொல்லி - எதிரேயிருந்த நாற்காலிகளை காண்பித்த ஆர்லேண்டாவுக்கு ஐம்பது வயதிருக்கலாம். அப்போதுதான் குளித்திருக்க வேண்டும். பிரகாசமாய் தெரிந்தார். பொன்னிற வழுக்கை. இரண்டு காதுகளின் மேற்புறத்திலும் ட்ரிம் பண்ணிய நரை மயிர். மொழுக்கென்ற உருண்டை முகத்தில் - சிறிய - ஆனால் கூர்மையான கண்கள். மூக்குக் கண்ணாடி பளபளப்பாய் மின்னியது. அணிந்திருந்த வெயிஸ்ட் கோட்டில் வெள்ளி பித்தான்கள் பளிச்சிட்டன.

''என்னாயிற்று மிஸ்டர் விவேக்...? அந்த மாத்யூவை போலீஸில் ஹேண்ட் ஓவர் பண்ணீங்களா...?''

விவேக் விபரத்தைச் சொன்னதும் அதிர்ந்தார். மூக்குக் கண்ணாடியை வேகமாய் கழற்றினார். ''அவனை சுட்டுவிட்டார்களா...? யார்...?''

''தெரியவில்லை. ஸ்காட் போலீஸ் முயன்றுகொண்டிருக் கிறார்கள்...''

''மிஸ்டர் விவேக்...! எனக்கு ஒரு விஷயம் மகா ஆச்சர்யம்...''

''என்ன...?''

''நீங்கள் லண்டனுக்கு வருவது எனக்கு மட்டுமே தெரிந்த ஒரு அரசாங்க விஷயம்... ஸீக்ரஸி லெட்டர்ஸ் முழுவதும் லாக்கரில்தான் இருக்கிறது... இந்த விஷயம் வெளியே எப்படி கசிந்திருக்கும்...?

விவேக் புன்னகைத்தான்... ''இந்த ஸீக்ரெட் இங்கே கசிய வில்லை ஸார். நான் டில்லியில் விமானம் ஏறும்போதே கசிந்திருக் கிறது... அடாமிக் ரிசர்ச் ஸ்காலர் ஆத்மராமை தீர்த்துக்கட்ட லண்டனில் சதி நடப்பதாகவும் - அந்த சதியை முறியடித்து - வெற்றிகரமாக அவரைக் காப்பாற்றி மீட்டு வரவும் - இங்கே என்னை அனுப்பிய செய்தி அதி ரகசியமானது. நானும் என் மனைவியும் ஹனிமூனுக்கு போவதாக - எல்லோர்க்கும் பாவ்லா காட்டிவிட்டு வந்திருக்கிறோம்... வந்தால் இங்கே ஒரு சின்ன அதிர்ச்சி. எம்பஸி பெயரை பயன்படுத்தி என்னையும் - என் மனைவியையும் கடத்த திட்டம் போட்டு ஏர்போர்ட்டில் ஒருவன் மாத்யூ என்கிற பெயரில் காத்திருக்கிறான்...''

ஆர்லேண்டா கேட்டார்.

''அந்த மாத்யூ எப்படியிருந்தான்...?''

மாத்யூவின் அனாடமியை விவேக் சொல்லிக்கொண்டிருக்கும் போதே - தூதருக்கு எதிரேயிருந்த - டெலிபோன் அடக்கமாய் சிணுங்கியது.

ரிஸீவரை எடுத்தார் ஆர்லேண்டா. செவி மடுத்துவிட்டு - ரிஸீவரை விவேக்கிடமே நீட்டினார். ''மிஸ்டர் விவேக் திஸ் ஈஸ்... ஃபார் யூ...''

விவேக் ரிஸீவரை வாங்கி ''ஹலோ'' என்றான்.

''ஹலோ... நான் கானர்ஸ்... இன்ஸ்பெக்டர்...''

''என்னவாயிற்று மிஸ்டர் கானர்ஸ்...?''

''மாத்யூவை கொன்ன எக்ஸை மடக்கிவிட்டோம்...''

''அற்புதம்... யாரவன்...?''

''யாரவள் என்று கேளுங்கள்...''

''பெண்ணா...?''

''எஸ்... நீங்கள் உடனே வரவேண்டும்...''

''எங்கே...?''

''பால்ஹாம் போலீஸ் ஸ்டேஷன்...''

''எப்படி வரவேண்டும்... வழி...?''

கானர்ஸ் மார்க்கத்தைச் சொன்னார். விவேக் மனசில் வாங்கிக் கொண்டு ரிஸீவரை கவிழ்த்தான். தூதர் ஆர்லேண்டா கேட்டார்.

''நீங்கள் பால்ஹாம் போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டுமா... மிஸ்டர் விவேக்...?''

''ஆமாம்...''

''உங்கள் மனைவி இங்கேயே இருக்கட்டும்... போய் வாருங்கள்... என் காரை உபயோகப் படுத்திக்கொள்ளுங்கள்...'' சொல்லிவிட்டு எதிரேயிருந்த இண்டர்காமின் பட்டனைத் தட்டினார்.

''ஹெட்டிக்...'' என்றார்.

அடுத்த நிமிஷம் அந்த கார் டிரைவர் உள்ளே வந்தான்.

''இவர் பால்ஹாம் போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டும்... அழைத்துப் போய்விட்டு பத்திரமாக வரவேண்டும்... செக்யூரிடியை கூட்டிக்கொண்டு போ...''

ஹெட்டிக் பவ்யமாய் தலையாட்டி நகர்ந்தான்.

.....

# 3

பால்ஹாம் போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் கானர்ஸ் காத்திருந்தார். காரினின்றும் இறங்கிய விவேக்கை புன்னகையோடு எதிர்கொண்டு அழைத்துப் போனார்.

நம்ம ஊர் ஸ்டேஷன் போலில்லாமல் - பால்ஹாம் போலீஸ் ஸ்டேஷன் ஒரு உயர்தரமான கம்பெனியின் அலுவலகம் மாதிரி இயங்கிக் கொண்டிருந்தது. கருநீல யூனிபார்ம் அணிந்த போலீஸ் ஆபீஸர்கள் ஃபிங்கர் பிரிண்ட்ஸ் செக்ஷனில் எதையோ தேடிக் கொண்டிருந்தார்கள். கான்ஸ்டபிள்கள் பத்திரிகை குறிப்புகளை வெட்டி - நோட்டீஸ் போர்டில் பதித்துக்கொண்டிருந்தார்கள். பக்கத்திலேயே இண்ட்ராகேஷன் அறை. வயர்லெஸ்ஸில் இடைவிடாத கரகரப்பு குரல்.

உள்ளே வரிசையாய் லாக்கப்-ஸெல்கள். எல்லாமே மகா சுத்தம்.

கானர்ஸ் விவேக்கை கூட்டிப்போனார். விவேக் நடந்து கொண்டே கேட்டான்.

''அவளை எப்படி மடக்கினீர்கள் மிஸ்டர் கானர்ஸ்?''

''அதுதான் ஸ்காட் போலீஸ்... மாத்யூ சுடப்பட்ட அந்த விநாடியில் - கார் பார்க்கிங்கிற்கு யார் அவசரமாய் ஓடிவந்து காரைக் கிளப்பினார்கள் என்ற விபரத்தை தெரிந்துகொள்வதற்காக - கார் பார்க்கிங் மெய்ன்டனிங் ஆபீஸரை போலீஸார் நாடியிருக் கிறார்கள். லண்டனில் கார் திருட்டு அதிகம். எனவே... கார் திருடர்களை கண்டுபிடிப்பதற்காக - கார் பார்க்கில் நுழைவு கேட்டில் யார்க்கும் தெரியாமல் ஒரு புதர்க்குப் பின்னால் காமிரா மறைத்து வைக்கப்பட்டிருக்கும். நுழைவு கேட்டைத் தாண்டும் ஒவ்வொரு காரின் நெம்பர் பிளேட்டையும் - டிரைவிங் சீட்டில் இருப்பவர்களையும் அந்த ஆட்டோமேடிக் காமிரா படம் எடுக்கும். மாத்யூ சுடப்பட்ட அந்த விநாடிக்கு - பின் வந்த விநாடிகளில் - பதட்டமாய் கிளம்பின கார் ஒரு ஆஸ்டியா கார். ட்ரைவிங் சீட்டில் இருந்த பெண்ணின் முகத்தில் ஒரு பயம்... வியர்வை... போலீஸுக்கு இது போதாதா...? நகரின் நாலாபக்கங்களிலும் வியூகம் போட்டார்கள்... அவள் மாட்டிக்கொண்டாள். அவள் கையிலிருந்த பிஸ்டலும் - மாத்யூவின் உடம்பில் பாய்ந்த தோட்டாவும் ஒரே ஜாதி... மேடம் இப்போது லாக்-அப்பில் இருக்கிறாள்... சொல்லிவிட்டு சிரித்தார் கானர்ஸ்.

கடைசியாய் தெரிந்த அந்த லாக்கப் ஸெல்லுக்குள் நுழைந் தார்கள். மரப்பெஞ்சு ஒன்றில் உட்கார்ந்து - நெயில் பாலீஷ் விரல்களை - தன் முன் வரிசை பற்களால் சுரண்டிக்கொண்டிருந்த அந்தப் பெண் - இன்ஸ்பெக்டர் கானர்ஸைப் பார்த்தும் - ஒரு திடுக்கிடல் இல்லாமல் - பயம் இல்லாமல் புன்னகைத்துக் கொண்டே எழுந்து நின்றாள்.

செழுமையாய் இருந்தாள். முகத்தின் மினு மினுப்பை வைத்து - இருபத்தைந்து வயது சொல்லலாம். ப்ரெஞ்சுப் பெண். பாப் தலையை பளபளக்கும் பெல்ட்டால் கட்டியிருந்தாள். தேன்

நிறக் கண்களில் அதிகப்படியான கவர்ச்சி தெரிந்தது. குட்டையான ஸ்கர்ட் அணிந்து தொடைகளை வேண்டுமென்றே காட்டியிருந்தாள். 'நீங்கள் என்னைப் பார்த்ததுண்டா?' என்று ஆங்கிலத்தில் கேட்கிற வாசகம் கொண்ட பனியனை உடம்புக்கு கொடுத்திருந்தாள். பனியனின் மேற்பரப்பில் - விளிம்பில் -

''இன்ஸ்பெக்டர்... வந்து விட்டீர்களா...? எனக்கு பசிக்கிறது. நான் இந்நேரத்திற்கெல்லாம் பிரேக்ஃபாஸ்ட் எடுத்துக்கொள்பவள்... நான்கு ஸாண்ட் விச்... ஒரு கோப்பை பால் கலக்காத கறுப்பு காப்பி வேண்டும்...''

''தரச் சொல்கிறேன்... உன் பேரென்ன சொன்னாய்...?''

''கேரன்...''

''இதோ... பார் கேரன்... இவர் யார் என்று தெரிகிறதா...?''

அவள் விவேக்கின் பக்கம் பார்வையை திருப்பினாள். வலது கண்ணை சிமிட்டி புன்னகைத்துக்கொண்டே ''ஆசியாடிக் மேன்... ஹேண்ட்சம்... இவரைத்தான் மாத்யூ போட்டோவில் காட்டினான். மாத்யூவை ஏர்போர்ட்டில் துரத்தியவரும் இவரே... எனக்கு ஸாண்ட்விச் வேண்டும்...''

''தரச் சொல்கிறேன் கேரன்... முதலில் நான் கேட்கிற கேள்விகளுக்கு உண்மையான பதில்களை சொல்ல வேண்டும்...''

''கேளுங்கள் சொல்லப்படும்...''

''மாத்யூ... யார்...?''

''எனக்கு ராத்திரி வாடிக்கையாளர்களை கூட்டி வருகிற பிம்ப்... ஒரு நபருக்கு ஐந்து பவுண்ட் கூலி. நீக்ரோக்களுக்கு அனுமதியில்லை...

"உன்னுடைய தொழில் விதிமுறைகள் எனக்கு வேண்டாம்... மாத்யூவும் நீயும் எதற்காக இவனைக் கடத்த நினைத்தீர்கள்...?"

"நாங்கள் கடத்த நினைக்கவில்லை..."

"பின்னே...?"

"நேற்றைக்கு ராத்திரி ஒரு நிழலான ஆசாமி என்னிடம் வந்தான். மாத்யூ கூட்டிக்கொண்டு வந்த ஆள். நிறைய பணம் தந்தான். இது அட்வான்ஸ் என்றான். அந்த ஆசியாடிக் மேனையும் - அவனுடைய மனைவியையும் கடத்தி ஹவுன்ஸ்லோ ஏர்போர்ட்டுக்கு கொண்டுவரச் சொன்னான். காரியம் வெற்றிகரமாய் முடிந்தால் ஐயாயிரம் பவுண்ட் தருவதாக சொன்னான். நான் அவ்வளவு பணத்தை சம்பாதிக்க வேண்டுமென்றால் - வருஷத்தில் 365 ராத்திரியும் தூங்காமல் உழைக்க வேண்டும். எனவே நானும் மாத்யூவும் ஒப்புக்கொண்டோம்..."

"வந்த அந்த நிழலான ஆசாமி யார்...?"

"தெரியாது..."

"எப்படியிருந்தான்...?"

தலையில் நீளமான தொப்பி - கனமான ஜெர்கின் கோட் - வேண்டுமென்றே பாதி முகத்தை மறைக்கிற கறுப்பு கூலிங்கிளாஸ். உமர்ஷெரிப் மீசை. கைகளில் கனமான தோலுறைகள்.

"வயது...?"

"அனுமானிக்க முடியவில்லை..."

"சரி... சொல்..."

"அட்வான்ஸ் பணத்தைக் கொடுத்துவிட்டு போனவன் - மறுபடியும் ஒருமணி நேரம் கழித்து மாத்யூ இல்லாத நேரமாய்

பார்த்து வந்தான். என் கையில் இன்னும் ஒரு ஆயிரம் பவுண்ட் பணத்தை திணித்து - கூடவே ஒரு சைலன்ஸர் பிஸ்டலையும் வைத்தான். எதற்கு என்று கேட்டேன். வருகிற அந்த விவேக் சாதாரண ஆள் இல்லை... இந்தியாவில் முதல்தர க்ரைம் பிராஞ்ச் ஆசாமி. ஸ்காட்லாண்ட் யார்டில் பயிற்சி பெற்றவன். மாத்யூவை அவன் மோப்பம் பிடித்துவிட்டால் - மறைந்து நிற்கிற நீதான் மாத்யூவை பரமண்டலத்திற்கு அனுப்ப வேண்டும்... நான் முதலில் மறுத்தேன்... மறுபடியும் பணத்தை திணித்தான்... ஒப்புக் கொண்டேன்... மாத்யூ இந்த ஆசியாடிக் மேனிடம் மாட்டிக் கொண்டதும் - சுட்டுவிட்டு காருக்குத் திரும்பினேன். ரீஜண்ட்ஸ் பார்க் அருகே போலீஸ் என்னை மடக்கினார்கள்...''

விவேக் ஆச்சர்யப்பட்டான்.

''என்னைக் கடத்துவதால் யார்க்கு என்ன லாபம்...?''

''லாபமில்லாமலா... இவ்வளவு பெரிய ஏற்பாடு நடந்திருக் கிறது...? கேரன்! அந்த நிழலான ஆசாமியைப் பற்றி இன்னும் தெளிவாய் சொல்ல முடியுமா...? ஐடெண்டி கிட்டில் போட்டு கம்ப்யூட்டரிடம் கொடுத்தால் - துல்லியமாய் அது படம் தரும்...''

''பனி பெய்கிற ராத்திரியில் வந்தான். நீளமான தொப்பி - ஜெர்கின் கோட்டு, உள்ளங்கை அளவு கூலிங்கிளாஸ். உமர்ஷெரிப் மீசை. திரும்பத் திரும்ப என்னால் இதைதான் சொல்ல முடியும் இன்ஸ்பெக்டர்...! பசிக்கிறது. முதலில் கறுப்பு காப்பியாவது கிடைக்குமா...?''

''தரச் சொல்கிறேன்... வந்தவன் என்ன மொழியில் பேசினான்?''

''ஆங்கிலம்.''

''ஆரோக்கியமான ஆங்கிலமா?''

''ஆமாம்...''

''வித்தியாசமான உச்சரிப்பு ஏதாவது...?''

''நான் கவனிக்கவில்லை... என் குறி பூராவும் பணத்தின் மேல் இருந்தது.''

''எனி பெக்குலியாரிடி வித் தட் மேன்?''

கேரன் கண்களில் மலர்ந்தாள்.

''ஆ... ஞாபகம் வருகிறது...''

''என்ன...?''

''பேசும்போது அடிக்கடி... யூ... ஸி... என்று சொல்லி நிறுத்தி - தோலுறை அணிந்த கைகளால் நெற்றியைச் சொறிவான்...''

''குட்... அப்புறம்...?''

''அவ்வளவுதான்...''

''இது போதும்... அவன் கொடுத்த பணம் உன்னிடம் இருக்கிறதா...?''

''இருக்கிறது...''

''உன் வீட்டுக்குப் போகலாமா...?''

''போகலாம்... எனக்கு ஸாண்ட்விச் வேண்டும்... வயிற்றில் பசிப் பிரளயம்... மாத்யூவிடம் அப்போதே சொன்னேன்... சாப்பிட்டுவிட்டு ஏர்போர்ட் போகலாம் என்று... அந்த பன்றி மகன் கேட்கவில்லை...''

தான் செய்த கொலையைப் பற்றி கொஞ்சமும் கவலைப் படாமல் - சாண்ட்விச் சாப்பிட ஆசைப்படும் அந்த கேரனை ஆச்சர்யமாய் பார்த்தான் விவேக்.

.....

# 4

வெய்யில் உறைக்காத மத்தியான நேரம். லண்டனின் நடுவானத்தில் இருந்த சூரியன் மகா சோம்பேறியாய் கதிர் பாய்ச்ச - அடித்த குளிர் காற்று அதை விழுங்கி - ஜனங்களை ஸ்வெட்டர் அணிய வைத்தது. உள்ளங்கைகளை தேய்க்க வைத்தது.

கேம்ப் பிரிட்ஜ் சாலையிலிருந்த 'ராயல் சல்யூட்' ஹோட்டலின் 32-வது மாடியில் - 2030 - நெம்பர் அறையில் - ஹீட்டர் அருகே உட்கார்ந்திருந்தார்கள் விவேக்கும் ரூபலாவும். ரூபலா கன்னத்திற்கு கை கொடுத்திருந்தாள்.

''என்ன லண்டன் வந்து ஒருநாள் கூட ஆகலை... அதுக்குள்ளே சோர்ந்து போய் உட்கார்ந்துட்டே... வெளியே கிளம்பலாமா...? மேடம் துஸ்ஸார்டின் மெழுகு பொம்மை ம்யூஸியம் பார்த்துட்டு வரலாம்... ஒவ்வொரு மெழுகு சிலையும் அவ்வளவு தத்ரூபம்... தூங்குகிற மெழுகுப் பெண் மூச்சுவிடற அதிசயத்தை நீ பார்த்திருக்கியா ரூபலா... அதி அற்புதம்...''

ரூபலா ஒரு பெருமூச்சு விட்டபடி விவேக்கைப் பார்த்தாள். ''உங்களுக்கு கொஞ்சம் கூட பயமாவே இல்லையா...?''

''எதுக்கு பயம்...?''

''லண்டன் வந்தும் வராததுமா ஒரு ஆபத்து...''

''நான் எதிர்பார்த்த ஆபத்து...''

''எனக்கு பயமாயிருக்கு...''

விவேக் சிரித்தான்.

''நீ லண்டன் வந்ததும் - ஒரு சராசரி இந்தியப் பெண் ஆயிட்டே...''

''இது அந்நிய தேசம்... அதான் பயப்படறேன்... அடாமிக் ரிசர்ச் ஸ்காலர் ஆத்மராமுக்கு எந்த ஆபத்தும் வராமல் - பாதுகாக்கவும் - அவர்க்கு எதிரா செயல்படற சக்திகளை கண்டுபிடிக்கவும் நீங்க இங்கே வந்திருக்கீங்க... வாஸ்தவந்தான்... ஆனால்... இப்ப உங்களையே நீங்க காப்பாத்திக்கணும் போலிருக்கே...

''ரூபலா... இது லண்டன். கம்ப்யூட்டர்களும் - அதி உன்னதமான மனித மூளைகளும் இணைந்து செயல்படுகிற ஸ்காட்லாண்ட் யார்டு இருக்கிற நகரம். கண்களைப் பார்த்தே இவன் கொலைகாரன். இவன் கிட்நாப்பர், இவன் பிக்பாக்கெட் பேர்வழி என்று இனம் பிரித்து மடக்குகிற ரகம்... மாத்யூ-கேரன் இரண்டு பேர்களின் - தாத்தன் முப்பாட்டன்கள் யார் என்று இந்நேரம் ஸ்காட்லாண்ட் போலீஸ் - மும்முரமா கிளறிட்டிருக்கும்...''

டெலிபோன் மணி அடித்தது.

ரிஸீவரை எடுத்தான் விவேக்.

''ஹலோ...''

''குட் ஆப்டர்நூன் மிஸ்டர் விவேக்... நான் இன்ஸ்பெக்டர் கானர்ஸ்...''

''குட் ஆப்டர்நூன் இன்ஸ்பெக்டர்...''

''ஹோட்டல் சௌகரியமாய் இருக்கிறதா...?''

''அற்புதமாக உள்ளது.''

''தற்போது ஓய்வாய் இருக்கிறீர்களா?''

''ஏன்... என்ன விஷயம்...?''

''எங்கள் க்ரைம்பிராஞ்ச் டிடெக்டிவ் சூப்பரின்டெண்ட்டண்ட் மிஸ்டர் ஆர்தர் உங்களிடம் பேச விரும்புகிறார். வர முடியுமா...?''

''வருகிறேன்...''

''கார் அனுப்புகிறேன். தயாராக இருங்கள்...''

''தாங்க்யூ...'' ரிஸீவரை கவிழ்த்தான் விவேக். ரூபலா ஒரு சின்ன முறைப்போடு கேட்டாள்.

''வெளியே புறப்படறீங்களா...?''

''ஸ்காட்லாண்ட் யார்ட் டிடெக்டிவ் சூப்ரின்டெண்டண்ட்... என்னோடு பேச விரும்புகிறாராம்... போய்ட்டு வந்துடறேன்...''

''வெளியே ஆபத்து இருக்குன்னு தெரிஞ்சும் போறீங்களே...?''

''நடந்தா போகப் போறேன்... மெட்ரோபாலிடன் போலீஸ் கார் வரும். போலீஸ் பாதுகாப்போடுதான் போகப் போறேன்...''

''எம் மனசு பூராவும் 'திகீல்னு இருக்கு... நானும் உங்க கூட வர்றேனே... ஹோட்டல் ரூம்ல உட்கார்ந்துகிட்டு என்ன பண்ணப் போறேன்...''

''நோ... இது அஃபிஷியல்... நீ தூங்கு... நான் போய்ட்டு ஒரு மணி நேரத்துல வந்துடறேன்...''

''மைகாட்... ஒரு மணி நேரமாகுமா...?''

''சரி... உனக்காக அம்பத்தி அஞ்சு நிமிஷத்துல வந்துடறேன்... போதுமா?'' விவேக் சொல்லிக்கொண்டே ஹீட்டர் கணப்பினின்றும்

எழுந்து - ஹேங்கரில் கனமாய் தொங்கிக்கொண்டிருந்த உல்லன் ஸ்வெட்டர் எடுத்து தோளில் போட்டுக்கொண்டான். வாஷ்பேசின் கண்ணாடியில் முகம் பார்த்து தலை சீவிக் கொண்டான்.

ரூபலா பின்னால் வந்து நின்னு - விவேக்கை அணைத்தாள்.

''என்னங்க...?''

''ம்...''

''நமக்கு இந்த லண்டன் வேண்டாங்க...''

''டோண்ட்... பி... சில்லி... ரூபலா... என்னோட ஜாதகப்படி - எனக்கு தொன்னூத்தி எட்டு வயசு... கண்டங்களே இல்லாத ஜாதகம்...! நீ என்ன பண்றே... டி.வி.யில எய்த் சேனலைத் தட்டு... மிக்கி மவுஸ் கார்ட்டூன் படம் வரும்... பார்த்துட்டே யிருந்தா பொழுது சுலபமா போயிடும்...''

விவேக் ஷூவுக்குள் கால்களை நுழைத்து - நிமிர்ந்தபோது டெலிபோன் கூப்பிட்டது. ரிஸீவரை எடுத்தான்.

ஹோட்டல் வரவேற்புப் பெண் பேசினாள்.

''போலீஸ் பேட்ரோல் கார்... உங்களுக்காக ஹோட்டல் வாசலில் காத்திருக்கிறது, வருகிறீர்களா மிஸ்டர் விவேக்...?''

''வருகிறேன்...''

ரிஸீவரை வைத்துவிட்டு ''அதற்குள் வந்துவிட்டார்கள். இந்த சுறுசுறுப்புதான் ஸ்காட்லாண்ட் யார்டுக்கு ஒரு ப்ளஸ் பாயிண்ட்...''

ரூபலா ஜன்னலுக்கு வெளியே - பார்த்தாள்.

''ரூமை நல்லா லாக் பண்ணிக்க ரூபலா... கதவை யார் தட்டினாலும் திறக்காதே... அம்பாசிடர் போன் பண்ணுவார்... சாயந்தரம் வர்றேன்னு சொல்லு...''

''ம்...''

விவேக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். 32-வது மாடியின் கண்ணாடி ஜன்னல்களுக்கு அப்பால் லண்டன் - வெய்யிலில் பளீரென்று தெரிந்தது. டவர் ஆப் லண்டன் கூர் பென்சில் மாதிரி தேம்ஸ் நதிக்கரையோரமாய் நின்றிருந்தது.

விவேக் லிப்டில் - அரை நிமிஷம் பயணம் செய்து வரவேற்பறைக்கு வந்தான். வெளியே போர்டிகோவில் - நீலநிறத்தில் போலீஸ் ஏரியா கார் நின்றிருந்தது. டிரைவர் இருட்டுப் பச்சை யூனிபார்மில் - விறைப்பாய் நின்று - சல்யூட் போட்டு - காரின் பின் கதவைத் திறந்துவிட்டான். விவேக் உள்ளே போனதும் - கதவைச் சாத்தினான். முன் சீட்டுக்கு வந்து - ஸ்டீரியங்கைத் தொட்டதும் கார் புறப்பட்டது. ஹோட்டலைத் தாண்டியதும் வேகம் எடுத்தது.

அபார வேகம்.

ஃபிட்ஸ்ராய் சதுக்கத்தில் கார் திரும்பியது. டாட்டன் ஹாம் ரோட்டின் கான்க்ரீட் உடம்பில் வழுக்கலாய் பாய்ந்து - ஏழாவது நிமிஷத்தின் முடிவில் - விக்டோரியா ஸ்ட்ரீட்டில் நுழைந்தது.

NEW SCOTLAND YARD

பிரதானமாய் எழுத்துக்கள் தெரிந்த கட்டிடத்தின் முன்னால் நின்றது. நிறைய மாடிகளோடு பெரிய கட்டிடம். மாடிகளில் கண்ணாடி ஜன்னல்கள் இளநீல நிறத்தில் தெரிந்தது. அதில் மத்தியான சூரியனின் ப்ளாஷ். போலீஸ் வாசனையே இல்லாத கட்டிடம். ஒரு பெரிய மாளிகையின் முகப்பு போன்ற அமைப்பு. கண்ணாடிச் சுவர்கள். முகப்பில் ஒரு கான்ஸ்டபிள் எந்திர துப்பாக்கியோடு பொம்மை மாதிரி நிற்க - விவேக் இறங்கி உள்ளே

போனான். மாடிகளில் என்னென்ன டிபார்ட்மெண்ட் இயங்குகிறது என்பதை கம்ப்யூட்டர் எழுத்துக்கள் ஒளிர்ந்து காட்டின.

''சூப்ரின்டெண்ட்டண்ட் எங்கேயிருக்கிறார்...?'' - விவேக் தன்னோடு இணைந்து வந்த கார் டிரைவரிடம் கேட்டான்.

''க்ரிமினல் இன்வெஸ்டிகேஷன்... சி.ஜே. செக்ஷன்...''

லிப்ட் வழிகாட்டி சி.ஜே. செக்ஷனில் - விவேக்கை உதிர்க்க - இன்ஸ்பெக்டர் கானர்ஸ் உதட்டில் பைப்பைக் கடித்தபடி தெரிந்தார். விவேக்கைப் பார்த்ததும் - பைப்பை இடது கைக்கு மாற்றிக்கொண்டு - அவன் கரத்தைப் பற்றி குலுக்கினார். சூடான வெண்ணெய்யை அள்ளுகிற மாதிரி வெதுவெதென்றிருந்தது அவருடைய கை.

''மிஸ்டர் ஆர்தர் உங்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.''

இருவரும் பளிங்குக் கல் வராந்தாவில் நடந்தார்கள். வராந்தா சின்னச் சின்ன அறைகளாக பிரிக்கப்பட்டு - க்ரிமினல் ரிக்கார்ட்ஸ் ரூம், பாரன்சிக் லாப், ந்யூஸ் ரூம், ட்ராபிக் கண்ட்ரோல் ரூம்... கம்ப்யூட்டர் ரூம்... என்று விதவிதமாய் தெரிந்தது.

கானர்ஸைத் தொடர்ந்து - அந்த கண்ணாடி அறைக்குள் நுழைந்தான் விவேக். மெலிதான பச்சைநிற கூலிங்கிளாஸ் அணிந்து - வழுக்கையோடு மஞ்சள் பற்களை காட்டி சிரித்த ஆர்தர்க்கு நாற்பதைத் தாண்டிய ஒரு வயது. குங்கும நிறம். இடதுபக்க நெற்றியின் உச்சியில் ஒரு கறுப்பு மரு. அதைச் சுற்றிலும் பழுப்பு நிறத்தில் பொடி ரோமங்கள்.

''குட் ஆப்டர்நூன் ஸார்...''

''குட் ஆப்டர்நூன்... மிஸ்டர் விவேக்... வெல்கம்...''

ஆர்தர் நாற்காலியைக் காட்டினார். விவேக் உட்கார்ந்தான்.

''உங்களுக்கு இன்று காலையில் நேர்ந்த மோசமான சம்பவத்திற்காக வருந்துகிறேன். மிஸ்டர் விவேக்... ஆட்களை நிச்சயம் அமுக்கி விடுவோம்...''

''தாங்க்யூ ஸார்...''

''உங்களிடம் ஒரு கேள்வியைக் கேக்கலாமா... விவேக்...?''

''எஸ்... ப்ளீஸ்...''

''லண்டனுக்கு எதற்காக வந்தீர்கள்?''

''ஹனிமூன்...''

''பொய்... உங்களுக்குக் கல்யாணமாகி ஒரு வருடம் ஆன பின்பா... ஹனிமூன் வருவீர்கள்? அதுவும் ஒரு க்ரைம் ப்ராஞ்ச் ஆபீசர் செலவு பண்ணிக்கொண்டு லண்டன் வர - அவர்க்கு பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும்... உண்மையான காரணத்தை நீங்கள் சொல்ல வேண்டாம்... நாங்களே கண்டுபிடித்து விட்டோம்... கானர்ஸ் சொல்லுங்கள்...''

நின்று கொண்டிருந்த கானர்ஸ் புன்னகைத்தார். ''மிஸ்டர் விவேக் உங்கள் நாட்டு அடாமிக் ரிசர்ச் ஸ்காலர் ஆத்மராம் ஒரு வார காலம் லண்டனில் சுற்றுப்பயணம் செய்து - மொத்தம் ஆறு செமினார்களில் பேச இருக்கிறார். அணு பிளப்பில் அவர் கண்டுபிடித்திருக்கும் புதிய அணுகுமுறைகளின் சூட்சுமம் அவர்க்கு மட்டுமே தெரிந்த ஒன்று... லண்டனில் அவருடைய உயிர்க்கு ஆபத்து ஏற்படுமென்று உங்கள் நாட்டு அரசாங்கம் கருதுகிறது. அவர்க்கு எந்தவிதமான ஆபத்தும் உண்டாகாமல் இருக்கவும் - அவர்க்கு எதிராக கிளம்பும் சதிகளை முறியடிக்கவும் - 'ஹனிமூன்' என்ற போர்வையில் லண்டன் வந்திருக்கிறீர்கள்...''

விவேக் ஆச்சர்யப்பட்டான்.

''உங்களுக்கு எப்படி தெரியும்...?''

''உங்கள் இந்தியர்கள் ஓட்டை வாயர்கள்... டெல்லி பாலம் விமான நிலையத்திலேயே... எங்கள் 'எய்ட்'டுக்கு விஷயம் கிடைத்துவிட்டது... ஆமாம்... அடாமிக் ரிசர்ச் ஸ்காலர் ஆத்மராமுக்கு உண்மையிலேயே இங்கு ஆபத்து இருக்கிறதா...?''

''இருக்கிறது என்கிறது எங்கள் பாதுகாப்பு அமைச்சகம்...''

''பின் ஏன் ஸ்காலர் ஆத்மராமை லண்டனுக்கு வரவிட்டீர்கள்...?''

''ஒரு துணிச்சல்தான்...''

''ஆத்மராம்... பெரிய ஸ்காலர், புரபசர், விஞ்ஞானி - அணு ஆராய்ச்சி கழகத்தின் தலைவர்... அவர் மூளையின் மதிப்பு ஒரு கோடி பவுண்ட்ஸ்களுக்கு சமம்... என்றெல்லாம் சொல்வது வாஸ்தவம்தானா...?''

''வாஸ்தவம்தான்...''

''அவர்க்கு என்ன வகையான ஆபத்து வரும் என்று நினைக்கிறீர்கள்?''

''சுடப்படலாம்... இல்லையேல் கடத்தப்படலாம்...''

''இரண்டுமே நடக்கப் போவதில்லை... ஆத்மராம் ஆரோக் கியமாக சிகரெட் பிடித்துக்கொண்டே இந்தியா போய் சேருவார்...''

''எனக்கு அந்த நம்பிக்கையில்லை...''

''ஏன் அப்படி சொல்கிறீர்கள்...?''

''இன்று காலை லண்டன் வந்து இறங்கிய என்னையே கடத்திப் போக - ஒரு கோஷ்டி முயற்சி செய்து தோற்றிருக்கிறது.

யோசித்துப் பாருங்கள். ஆத்மராமின் பாதுகாப்புக்காக வந்த என்னை யார்க்கோ பிடிக்காமல் போயிருக்கிறது...''

''ஆத்மராம் ஸீஷெல்ஸ் ஹோட்டலில் தானே தங்கியிருக் கிறார்...?''

''ஆமாம்...''

''போய் பார்த்தீர்களா...?''

''செமினார் பேச்சுகளை தயாரிப்பதில் அவரும். அவருடைய உதவியாளரும் ஈடுபட்டிருக்கிறார்கள்... நாளைக்கு காலை பதினோரு மணி வரைக்கும் அவரை சந்திக்க யார்க்கும் அனுமதி கிடையாது...''

''செக்யூரிடி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா...?''

''நிரம்ப...''

''நாளைக்கு ஆத்மராம் எந்த செமினாரில் பேசப்போகிறார்?''

''புஷ்ஹெரின் ஹால் செமினார்...''

''செமினார் எத்தனை மணிக்கு...?''

''நாளை பகல் பதினொன்று முப்பதுக்கு...''

''பார்வையாளர்கள் மொத்தம் எத்தனை பேர்...?''

''நூற்றிநாற்பது பேர்... எல்லோருமே லண்டனைச் சேர்ந்த அணு ஆராய்ச்சி வல்லுநர்கள். பசி, தாகம், கோபம், செக்ஸ் எல்லாம் மறந்து - ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று எந்திரமானவர்கள். பெரும்பாலோர்க்கு பிஸ்டலைப் பிடிக்கவே தெரியாது...''

''பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படுகிறார்களா...?''

''நோ...''

''டி.வி...?''

''காமிராமேன்... அவருடைய அஸிஸ்டெண்ட் அந்த இரண்டு பேர்க்கு மட்டுமே அனுமதி உண்டு...''

''மேடையில் மொத்தம் எத்தனை பேர் இருப்பார்கள்...?''

''பத்து பேர்...''

ஆர்தர் சிரித்தார். ''மிஸ்டர் விவேக்... எல்லா புள்ளி விவரங்களோடு இந்தியாவிலிருந்து வந்திருக்கும் உங்களைப் பாராட்டுகிறேன்... ஆனால் இது தேவையில்லாத பயம். ஆத்மராமை கலவரப் படுத்தி - நீங்களும் கலவரப்பட்டுப் போயிருக்கிறீர்கள்... நாளைக்கு நானும் அந்த செமினார் ஹாலுக்கு வரப் போகிறேன்... எந்த அசம்பாவிதமும் நடக்காமல் செமினார் நடக்கத்தான் போகிறது. அதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்...''

ஆர்தரின் அவ்வளவு பெரிய நம்பிக்கை -

மறுநாள் காலை 11.30க்கு - சின்னச் சின்ன துகள்களாக சிதறப் போகிறது என்று அவருக்குத் தெரியாது...

.....

# 5

**கா**லை பத்து மணி.

ஹோட்டல் ஸீஷெல்ஸ்.

ஹோட்டலைச் சுற்றிலும் ஆயுதம் தரித்த போலீஸார்.

ரிசப்ஷனில் மெட்டல் டிடெக்டர் வைக்கப்பட்டு - உள்ளே நுழைகிற ஒவ்வொரு பத்திரிகையாளரையும் பாதாதிகேசமாய் வருடினார்கள். உள்ளே போகச் சொன்னார்கள். கொஞ்சம் சந்தேகப் பட்டாலும் கேட்டை நோக்கி விரட்டப்பட்டார்கள்.

ஹோட்டல் கான்ப்ரன்ஸ் ஹாலின் மத்தியில் - ஆத்மராமும் அவருடைய உதவியாளர் இருபது வயது செப்புச் சிலை ஏஞ்சலாவும் தெரிந்தார்கள்.

ஆத்மராம் காராசேவு மாதிரி ஓடிசலாய் ஆறடி உயரம் இருந்தார். மாநிறம். எலும்பு தட்டின முகம். கொஞ்சம் பெரிய சைஸ் முட்டைக் கண்கள். பழைய எகிப்து பிரதமர் நாஸரின் மூக்கு. அறுபது வயதை அனுமானிக்கலாம் போன்ற உடல்வாகு. கண்களில் கண்ணாடி. தலையில் கறுப்பான இந்திய முடி. அதையும் சீப்பு காட்டாமல் அலட்சியம் பண்ணியிருந்தார். சிமெண்ட் நிற ஃபுல்சூட். அதே நிற டை.

அருகே நின்றிருந்த ஏஞ்சலா சிவப்புப் பூக்கள் தெளித்த - வெள்ளை சால்வார் கம்மீஸில் - பைல்களை மார்போடு அணைத்த படி தெரிந்தாள். கேள்வி கேட்ட பத்திரிகை நிருபர்களிடம் அவர் பதில் பேச திணறியபோது - வார்த்தைகளை எடுத்துக்கொடுத்தாள்.

ஆத்மராம் லண்டன் டைம் பத்திரிகைக்கு - அதன் நிருபரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

''நான் முன்பே சொன்ன மாதிரி இந்தியா சமாதானத்தை விரும்புகிற நாடு. எங்கள் நாட்டு மக்கள் அணு ஆயுதங்களை விரும்புவதில்லை... நாங்கள் இந்த அணு சூட்சுமத்தை தொழில் வளர்ச்சிக்காகத்தான் பயன்படுத்திக் கொள்ளப்போகிறோம்...''

இன்னொரு பெண் நிருபர் குறுக்கிட்டுக் கேட்டாள்.

''அணு குண்டுகளை தயாரிக்காதா...?''

''ஒருபோதும் தயாரிக்காது...''

''பகை நாடுகளான - அண்டைய நாடுகள் அணு குண்டு களை தயாரிக்கும்போது நீங்கள் தயாரிக்காமல் இருப்பது உங்கள் பாதுகாப்பை பலவீனப் படுத்தாதா...?''

''எங்களது பெரிய பலம் சமாதானம்...''

நிருபர்கள் எல்லோரும் கைதட்டினார்கள்.

''உங்கள் உயிர்க்கு ஆபத்து ஏற்படும் என்று ஒரு புரளி கிளம்பியிருக்கிறதே, இதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்...?''

''அறுபது வயது வரை வாழ்ந்தாயிற்று... இனிமேல் நான் செத்துப் போனால்தான் என்ன... என் நாட்டிற்கு நான் வேண்டிய அளவு உழைத்துவிட்டேன்...''

''இன்றைய செமினாரில் என்ன பேசப்போகிறீர்கள்?''

''டி.வி.யைப் பாருங்கள்...''

''செமினார் அரங்கில் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து?''

''அது போலீஸாரின் பாதுகாப்பு ஏற்பாடுகள்...''

ஆத்மராம்க்கு கொஞ்சம் தள்ளி - ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த விவேக் எழுந்தான். அவரிடமிருந்த உருண்டை மைக்கை வாங்கி பேசினான்.

''ஸ்காலர் ஆத்மராம் அறையில் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு - செமினார்க்கு கிளம்பி போக வேண்டும்... உங்கள் கேள்விகளை நாளை வைத்துக்கொள்ளுங்கள்...''

''நாளை என்றால் எப்போது...?''

''நாளை மதியம் மூன்று மணிக்கு...''

பத்திரிகை நிருபர்கள் கலைந்தார்கள். ஒரு மூலையில் நின்று - தன் பச்சை நிறக் கண்களால் - பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த சூப்பரின்டெண்ட்டண்ட் ஆர்தர் விவேக்கை நோக்கி வந்தார்.

''மிஸ்டர் விவேக்... நாம் செமினார் ஹாலுக்கு போவோம்... அங்கே போய் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிப்போம்... இன்ஸ்பெக்டர் கானர்ஸ் ஏற்கெனவே அங்கிருக்கிறார்...''

ஆத்மராமும், ஏஞ்சலாவும் ஒரு சின்ன போலீஸ் வளையத்துக்குள் பத்திரமாய் அறையை நோக்கிப் போய்க் கொண்டிருக்க - விவேக் இந்திய தூதரிடம் சொல்லிக் கொண்டு ஆர்தரோடு நடந்தான்.

ரிசப்ஷன் கௌண்ட்டரை நெருங்கியபோது - டென்னீஸ் வீராங்கனை நவரத்திலோவாவைப் போல் தோற்றம் காட்டிய அந்த ரிசப்ஷனிஸ்ட் கேர்ள் ''எக்ஸ்க்யூஸ்மீ ஸார்'' என்று சொல்லி நிறுத்தி ரிஸீவரை நீட்டினாள்.

''திஸ்... ஈஸ்... ஃபார் யூ...''

ஆர்தர் ரிஸீவரை வாங்கினார்.

''ஹலோ...''

மறுமுனையில் இன்ஸ்பெக்டர் கானர்ஸ் பேசினார்.

''ஸார்... ஒரு அவசர செய்தி...''

''என்ன...?''

''புஷ்ஹெரின் செமினார் ஹால் மேடைக்கு பக்கவாட்டில் ஒரு பலகை கீழ் - ஒரு பவர்ஃபுல் டைனமைட் பதுக்கி வைத்திருந்ததை எடுத்து விட்டோம்... அது வெடித்திருந்தால் நிச்சயம் ஹாலில் இருந்த அத்தனை பேரும் கருகியிருப்பார்கள்...''

''வெடிகுண்டு எந்த வகை...?''

''நிபுணர்களை வரவழைத்துள்ளேன்... பார்த்துக்கொண்டிருக் கிறார்கள்...''

''யாரையாவது கைது செய்தீர்களா...?''

''மேடை பொறுப்பாளர் தாம்ஸனை விசாரித்துக்கொண் டிருக்கிறேன்...''

''பிரஸ்ஸுக்கு செய்தி அனுப்பவில்லையே...?''

''இன்னும் இல்லை...''

''அனுப்ப வேண்டாம்... நானும் மிஸ்டர் விவேக்கும் இப்போது அங்கே வருகிறோம்...''

ரிஸீவரை வைத்துவிட்டு விவேக்கிடம் திரும்பினார் ஆர்தர். நெற்றியில் ஆரஞ்சுபழத் தோலாய் சுருக்கம். கண்களில் கொஞ்சமாய் பதட்டம். கவலை.

''மிஸ்டர் விவேக்... நீங்கள் சொன்னது சரி... ஸ்காலர் ஆத்மராமை காப்பாற்ற நாம் கடினமாக கஷ்டப்பட வேண்டி யிருக்கும்... அவர் லண்டனில் இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் சிவப்பு நிமிஷம்... ஹி ஈஸ் இன் த ரெட் மினிட்ஸ்...''

.....

# 6

புஷ்ஹெரின் செமினார் ஹால் அதி நவீனமாய் இருந்தது. சுவர் பரப்பு முழுவதும் சலவைக் கற்கள். அதில் வர்ணமாய் சில வேலைப்பாடுகள். ஆங்காங்கே இரும்புச் சேனல்களில் குளிரை விரட்டுகிற ஹீட்டர் ஆரஞ்சு நிறமாய் ஒளிர்ந்தது. கிட்டத்தட்ட

ஐநூறுபேர் அமரக்கூடிய ஹால். கறுப்பு குஷன் வைத்த நாற்காலிகள் அரைவட்டமாய் தெரிந்தது.

செமினார் மேடையை மறைத்தபடி - மஞ்சள் வெல்வெட் திரை தொங்கியது. மெட்டல் டிடெக்ரால் அழுத்தமாய் வருடப்பட்டு - ஒவ்வொருவராய் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். பெரும்பாலும் கிழங்கள். பிரெஞ்சு மொழி பேசும் ஆராய்ச்சி யாளர்கள்.

முதல் ஐந்து வரிசை வேக வேகமாய் நிரம்பிக்கொண் டிருந்தது. லண்டன் டெலிவிஷனிலிருந்து காமிரா யூனிட் ஒன்று - வந்து - இரண்டு காமிராமேன்கள் மட்டும் உள்ளே போனார்கள்.

இன்ஸ்பெக்டர் கானர்ஸ் வெளியே நின்றுகொள்ள - ஆர்தரும் விவேக்கும் அரங்கின் உள்ளே வந்தார்கள். உட்கார்ந் திருந்த எல்லோரும் நிசப்தம் காத்து மேடைத் திரையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

''விவேக்...!'' ஆர்தர் கூப்பிட்டார்.

''ஸார்...''

''ஆத்மராம் மேடையின் பின்பக்க அறையில்தானே இருக்கிறார்... ?''

''ஆமாம்...''

''வாருங்கள், அவருடன் பேசிவிட்டு வருவோம்...''

செக்யூரிட்டிகளின் விறைப்பான சல்யூட்டுகளை வாங்கிக் கொண்டு - நான்கைந்து கண்ணாடிக் கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே போனார்கள்.

ஆத்மராம் சிகரெட் பிடித்தபடி - டைப் அடித்த பேப்பர் களைப் பார்த்துக்கொண்டிருக்க - அருகே ஏஞ்சலா ஒரு பைலை

பிரித்து வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். ஆர்தரையும், விவேக்கையும் பார்த்ததும் ஆத்மராம் சிகரெட்டை ஆஷ்ட்ரேயிலிட்டு நசுக்கிவிட்டு - சிரித்தார்.

''திருமதி தாட்சர்க்குக்கூட இவ்வளவு பாதுகாப்பு தரமாட்டீர்கள் போலிருக்கிறதே...?''

''நிலைமை அவ்வாறு உள்ளது...''

''எனக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது...''

ஆர்தர் சொன்னார்: ''உங்களுக்கு பாதுகாப்பை தரவேண்டியது ஸ்காட்லாண்ட் யார்டு கடமை... நீங்கள் பத்திரமாய் இந்தியா போய்ச் சேர வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு விரும்புகிறது. உங்களைப் போன்ற ஸ்காலர்கள் உலகம் பூராவும் பெருக வேண்டும்...''

ஆர்தர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே -

ஸெல்த்ரோ அடாமிக் ரிசர்ச் சென்டர் சேர்மன் கோர்கின் தன் பருத்த உடம்போடு உள்ளே வந்தார். ''மன்னிக்க வேண்டும். செமினாரை துவக்க வேண்டிய தருணம்... மேடைக்குப் போகலாமா...?''

ஆத்மராம் எழுந்தார்.

விவேக்கும், ஆர்தரும் வெளியே வந்தார்கள். மறுபடியும் அரங்கிற்குள் நுழைந்து சுவரோரமாய் நின்றுகொண்டார்கள். பார்வை நான்கு பக்கமும் அலைந்தது.

வந்திருந்த 140 பார்வையாளர்களும் - தாழ்ந்த சம்பாஷனைகளோடு மேடைத் திரையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சரியாய் 11.30 ஆனபோது -

செமினார் மேடையின் மஞ்சள் வெல்வெட் திரை - கொஞ்சம் கொஞ்சமாய் தூக்கப்பட்டது. ஹாலில் லேசாய் கையொலி பிறந்தது.

மேடையில் அரை வெளிச்சம்.

போடப்பட்டிருந்த பத்து நாற்காலிகளில் ஐந்தாவதாய் ஆத்மராம் தெரிந்தார். அவர்க்கு இடதிலும் வலதிலும் - பளபளப்பான பிரிட்டிஷ் முகங்கள். நேர் பார்வைகள்.

மைக்கின் முன்னால் நின்றிருந்த ஒருவர் பிரெஞ்ச் மொழியில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இருந்து வந்த இந்தியா இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானத்தில் அபார சாதனையைப் புரிந்துள்ளது. அடாமிக் ரிசர்ச் ஸ்காலர் ஆத்மராம் அணு சோதனை களில் புதிய மாற்று பார்முலாக்களை கண்டுபிடித்துள்ளார். அதைப் பற்றிய சொற்பொழிவு ஒன்றை நாம் இப்போது செவிமடுக்கப் போகிறோம்... நம் நாட்டிற்கு வந்துள்ள அவரை அணு ஆராய்ச்சி கழகத்தின் சார்பாகவும் - உங்கள் சார்பாகவும் வரவேற்கிறேன்...''

கைத்தட்டல் பிறந்த அதே நேரம் -

'க்க்க்க்... வ்வ்வ்விக்... வீக்க்க்க்' - என்று, ஏதோ சத்தம்.

அம்பு புறப்பட்டுப் போன மாதிரி.

எந்த திசையிலிருந்து...?

ஆர்தர் மேடையை நோக்கித் தபதபவென்று ஓடினார். வலது கையில் பிஸ்டல் உயர்ந்து வானத்தைப் பார்த்தது. ஹால் முழுவதும் பதட்டம்.

ஆர்தர் மேடையில் பாய்ந்து ஏறினார். ஆத்மராமை நோக்கி ஓடினார்.

ஆத்மராமின் தலை சிதறிப் போயிருந்தது.

உடம்பு ஒரு பக்கமாய் - நாற்காலியினின்றும் சரிந்து கிடந்தது.

.....

## 7

பார்வையாளர்கள் பதட்டப்பட்டுக் கொண்டு ஓட - ஹாலின் முன்பக்க வாசலில் இருந்த இன்ஸ்பெக்டர் கானர்ஸ் துப்பாக்கி தோட்டாவாய் பறந்து வந்தார்.

தட்... தட்... என்று எல்லா கண்ணாடிக் கதவுகளும் சாத்தப்பட்டன. கான்ஸ்டபிள்கள் மேடையைச் சுற்றி ஒரு அவசர வியூகம் போட்டார்கள்.

தலை தெரித்து - உடம்பு சரிந்து கிடந்த ஆத்மராம் அருகே - குனிந்தார் ஆர்தர். அடுத்த விநாடியே முகம் மாறினார்.

ஆத்மராமின் உடம்பிலிருந்து ஒரு பொட்டு ரத்தம் வழிய வில்லை. தெரித்த முகத்திற்குள் ப்ளாஸ்டர் ஆப் பாரிஸ் துண்டுகள். சிந்தெடிக் ஜெல்லால் ஆன முகம் சில்லுச் சில்லாய் தெறித்து - உள்ளேயிருந்த நார்ப் பொருள்களைக் காட்டியது. ஆத்மராமின் பொம்மை முகம்.

மெல்ல நடந்து வந்த விவேக் - ஆத்மராமின் பொம்மைத் தலையைப் பற்றி தூக்கினான். சிரித்தான். ''ஸாரி... ஸார்... இது என்னுடைய ஏற்பாடுதான்... உயிருள்ள நிஜமான ஸ்காலர் ஆத்மராம் இந்நேரம் - இந்திய தூதர் வீட்டுக்குப் போய்க்கொண் டிருப்பார்.''

ஆர்தர் ஆச்சர்யமாய் நிமிர்ந்தார்.

''மிஸ்டர் விவேக் என்ன சொல்லுகிறீர்கள்?''

''ஏற்கனவே ஸெல்த்ரோ அடாமிக் ரிசர்ச் அதாரிட்டியோடு கலந்து பேசி ஆத்மராமின் எதிரியைக் கண்டுபிடிப்பதற்காக - விலாஸ்மிர் என்ற கைவினைப் பொருள் நிபுணரிடம் - ஆர்டர் கொடுத்து செய்த டம்மி இது...''

ஆர்தர் விவேக்கின் தோள்பட்டையை இறுக்கிப் பிடித்தார்.

''ரியலி இட் ஈஸ் க்ரேட்...''

''சுட்டது யார்...?'' இன்ஸ்பெக்டர் கானர்ஸ் படபடத்தார்.

''அதை இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டும்...''

விவேக் மேடையினின்றும் பார்வையை திருப்பி - பார்வை யாளர்கள் மத்தியில் போட்டான். எல்லோரும் உறைந்துபோய் நின்றிருந்தார்கள்.

''தோட்டா எந்தத் திசையிலிருந்து பாய்ந்திருக்கிறது என்று பாருங்கள் கானர்ஸ்... ஆசாமி இன்னமும் உள்ளேதான் இருக் கிறான்...''

கானர்ஸ் பொம்மை ஆத்மராம் சிதறியிருந்த விதம் பார்த்து ''நார்த் ஈஸ்ட்டிலிருந்து பாய்ந்திருக்கிறது ஸார்...''

''நார்த் ஈஸ்ட்...''

விவேக்கும் ஆர்தரும் பார்வையை - அந்த திசைக்குக் கொண்டு போனார்கள். டெலிவிஷன் காமிராவும் - அதனருகே நின்றிருந்த இளைஞனும் தெரிந்தார்கள்.

பிரிட்டிஷ் இளைஞன். அடர்த்தியான பழுப்பு நிற கேசம். சிவப்பு உல்லன் ஸ்வெட்டர். அலட்சியமாய் நின்றிருந்தான்.

ஆர்தர் அவனை நோக்கிப் போனார். பின்தொடர்ந்த கானர்ஸிடம் கேட்டார். ''டெலிவிஷன் காமிராவை சோதனை போட்டீர்களா...?''

''போடவில்லை...''

''சில்லி... சில்லி... விபரீதமே அங்குதான் இருக்கிறது... காமிராவை சோதனை போடுங்கள்...''

கானர்ஸ் முன்னதாக ஓடிப்போய் - காமிராவை கைப்பற்றிப் பார்த்தார். ஒவ்வொரு பாகமாய் சுழற்றினார்.

ஆர்தர் அந்த இளைஞனை விசாரித்தார்.

''பெயர்...?''

''ரோஜர்ஸ்... எட்வின்.''

''சுட்டது நீதானே...?''

''நல்ல வேடிக்கை... நான் எதற்காக சுடவேண்டும்? நான் டி.வி. யூனிட் காமிராமேன்...'' அவன் அலட்சியமாய் தோள்களைக் குலுக்கிக்கொண்டு சிரித்தபடியே சொல்ல - கானர்ஸ் டி.வி. காமிரா வின் உள்பாகங்களை குடைந்து - அந்த பிஸ்டல் இன்ஜெக்டர் போர்ஷனைக் கொண்டுவந்தார்.

''இதற்கென்ன சொல்லுகிறாய்?''

''எஸ். யூ.ஆர். கரெக்ட்... போலீஸ் ஜெண்டில்மென்... நான்தான் சுட்டேன்...''

''எதற்காக சுட்டாய்...?''

''ஸாரி... நான் சொல்வதற்கில்லை...''

''மாத்யூவையும் கேரனையும் நீதான் ஏர்போர்ட்டுக்கு அனுப்பினாயா?''

''ஸாரி. சொல்வதற்கில்லை...''

ஆர்தர் அவன் தலைமுடியை எட்டிப் பிடித்தார். பிரெஞ்சில் ஒரு கெட்ட வார்த்தையை கோபமாய் உபயோகப்படுத்தி - செவிட்டில் அறைவதற்காக கையை ஓங்கினார்.

அவன் அவர் கையை துணிச்சலாய் பற்றி நிறுத்தினான். ''ஸாரி... சூப்ரின்டெண்ட்டன்ட்... என்னிடமிருந்து நீங்கள் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாது... நான் உங்களுக்கு உபயோகப்பட மாட்டேன்... என்னுடைய திட்டம் தோல்வி என்று தெரிந்ததும் - நான் சயனைட் மாத்திரையை விழுங்கிவிட்டேன்...''

பேசும்போதே உதட்டோரத்தில் கோடு மாதிரி ரத்தம் வழிந்தது. லேசாய் தள்ளாடி கண்கள் சொருகி - மரணச் சிரிப்பு சிரித்தான்.

இன்ஸ்பெக்டர் கானர்ஸ் அவனைப்பற்றி சுவரோரமாய் உட்கார வைத்து - சர்ட் பாக்கெட்டுகளிலும் - பேண்ட் பாக்கெட்டுகளிலும் கையை நுழைத்து தேடினார்.

''ஒரு சின்ன துண்டு பேப்பர்கூட இல்லை...''

''ஸாரி... இன்ஸ்பெக்டர்... ஐயாம் க்ளீன்... என்கிட்டே எதுவும் கிடையாது. நான் எய்யப்பட்ட அம்பு. வில்லை நீங்கள் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்... அந்த இண்டியன் ஸ்காலர் சாவது சர்வ நிச்சயம்... ம்... ம்... ம்... ம்...''

அவன் கண்கள் சட்டென்று நிலைகுத்த -

தலை ஒரு பக்கமாய் சாய்ந்து தோள் மேல் உட்கார்ந்தது. ஆர்தர் தொப்பியைக் கழற்றிக்கொண்டு ''ப்ச்'' என்றார். அருகே

வந்து நின்ற விவேக்கைப் பார்த்து ''விவேக். ஆத்மராம் உயிரைக் காப்பாற்றிவிட்டோம்... ஆனால் இவன் விஷயத்தில் கோட்டை விட்டுவிட்டோம்...''

''பிரிட்டிஷ் டி.வி.யில் இவனைப்பற்றி விசாரித்தால் ஏதாவது தகவல் கிடைக்காமல் போகாது...''

''இவன் மரணத்துக்குத் துணிந்தவன்... சகல விதமான ஏற்பாடுகளுக்குப் பின்தான் வந்திருக்கிறான்...''

''ஆத்மராமின் உயிர்க்கு ஆபத்து என்பதை இப்போதாவது ஒப்புக்கொள்கிறீர்களா... ஸார்...?''

''நிச்சயமாய்... ஆத்மராமுக்கு செக்யூரிட்டியை அதிகப் படுத்த வேண்டும். அவரை அந்த ஹோட்டலிலிருந்து வேறு பத்திரமான இடத்துக்கு மாற்ற வேண்டும்...''

கானர்ஸ் குறுக்கே வந்தார்.

''மார்ச்சுவரி வேனுக்கு சொல்ல வேண்டும்... கொடிய விஷ மாத்திரை... உடம்பு பூராவும் பச்சை நிறம் பரவுகிறது...''

''ஏற்பாடு செய்யுங்கள் கானர்ஸ்... உடம்பை மார்ச்சுவரிக்கு அனுப்பிவிட்டு - பிரிட்டிஷ் டி.வி. ஸ்டேஷனுக்கு சென்று இறந்த ரோஜரைப் பற்றி விசாரியுங்கள்... நானும் விவேக்கும் இந்திய தூதர் இல்லத்திற்கு போய் - ஸ்காலர் ஆத்மராமை சந்தித்து பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றிப் பேசிவிட்டு வருகிறோம்...''

கானர்ஸ் தள்ளி நின்று சல்யூட் பண்ண - ஆர்தர் அதை தலையசைப்பில் ஏற்று - விவேக்கோடு வெளியே வந்தார்.

ஹாலுக்கு வெளியே ரோட்டில் நின்றிருந்த - நீலநிற போலீஸ் கார் ஆர்தரைப் பார்த்ததும் - விசுவாசமாய் ஊர்ந்து வந்தது.

காரின் பின் கதவைத் திறந்துகொண்டு - இருவரும் உள்ளே போய் சீட்டுகளில் புதைந்தார்கள். டிரைவர் திரும்பிப் பார்க்க ஆர்தர் சொன்னார்.

''இண்டியன் அம்பாசிடர் ஹவுஸ்...''

திடும்மென்று கார் வேகம் எடுத்தது.

''விவேக் நீங்கள் செய்த ஒரு புத்திசாலித்தனமான காரியத்திற்கு என்னுடைய பாராட்டுக்கள். ஆனால் இந்த பொம்மை திட்டத்தைப் பற்றி என்கிட்டே நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம்...''

''ஸாரி...''

''ஸோ... வாட்... ஆத்மராம் எந்த காரில் கிளம்பி இந்திய தூதர் வீட்டுக்குப் போனார்...?''

''ஏற்கனவே இந்திய தூதர் தன்னுடைய காரை இங்கே அனுப்பி வைத்திருந்தார்... அந்த காரில்தான் புறப்பட்டு போனார்...''

''டிரைவர்...?''

''இந்திய தூதரின் வழக்கமான டிரைவர் ஹெட்டிக்தான்...''

கார் லண்டனின் நெரிசலில் ஊர்ந்து - கம்ப்யூட்டர் சிக்னல் களில் திணறி - இந்திய தூதரின் வீட்டைத் தொட்டபோது - மணி பன்னிரெண்டு.

இந்திய தூதர் - பங்களா போர்டிகோ போன்ற அமைப்பில் வாயில் பைப்பை கடித்தபடி - பதட்ட நடை போட்டுக்கொண் டிருந்தார். போலீஸ் காரைப் பார்த்ததும் படியிறங்கி ஓடிவந்தார்.

''மிஸ்டர் விவேக்... ஸ்காலர் ஆத்மராம் எங்கே...? ஹாலில் எந்த விதமான அசம்பாவிதமும் நடக்கவில்லையா...?''

காரைவிட்டு இறங்கின ஆர்தரும் விவேக்கும் ஒருத்தரை யொருத்தர் பயப் பார்வை பார்த்துக்கொண்டார்கள். விவேக் சொன்னான்.

''அரைமணி நேரத்திற்கு முன்பே அவர்கள் உங்கள் காரில் புறப்பட்டு வந்தார்களே... இன்னுமா வரவில்லை...?''

''இல்லையே... நான் ஆத்மராமுக்காகத்தானே காத்துக் கொண்டிருக்கிறேன்...''

ஆர்தர் தாடையைத் தேய்த்தார்.

''போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொண்டிருப்பார் களோ...?''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை... நாமும் அதே மார்க்கமாகத்தானே வந்தோம்... மேலும் அவர்கள் புறப்பட்டு அரைமணி நேரமாயிற்று...''

''வழியில் ஏதாவது... கார் ரிப்பேராகி...?''

''அப்படியிருந்தால் கார் டிரைவர் ஹேட்டிக் எங்கிருந்தாவது டெலிபோன் செய்து எனக்கு தகவல் தெரிவித்திருப்பான்...''

ஆர்தர் மறுபடியும் போலீஸ் கார்க்குள் நுழைந்து - வயர்லெஸ்ஸை உசுப்பினார். கரகரத்தார். ''பி. டிபார்ட்மெண்ட்... ஜே.டி. செக்ஷன்... ஸ்பாட் அவுட் அண்ட் ட்ரேஸ் த இண்டியன் எம்பஸி கார்... ரோஜர்...''

எல்லாரும் கவலையாய் காத்திருக்க -

பதினைந்து நிமிஷ அவகாசத்தில்...

பர்மிங் ஹாமிலிருந்து - ஒரு ட்ராபிக் கான்ஸ்டபிள் மூலமாக அந்த செய்தி கிடைத்தது.

பர்மிங் ஹாமின் மரங்கள் அடர்ந்த பகுதியில் - இந்திய தூதரின் கார் நின்றிருக்கிறது... காரில் யாரும் இல்லை...''

.....

# 8

ஆம்புலன்ஸ் கொண்டையில் நீல விளக்கு சுழன்றது. சைரன் உச்ச ஸ்தாயிலும் தாழ்ந்த ஸ்தாயிலும் 'ரொய்ங்க் ரொய்ங்க்' என்று அலறியது.

உச்சபட்ச வேகம் எண்பது கிலோ மீட்டர்.

ஆம்புலன்ஸ் வேனுக்குப் பின்னால் - போலீஸ் கார் அதே வேகத்தில் பறந்தது. காரின் வேகம் விவேக்கின் வயிற்றை ஜிவ்வென்று இழுத்தது. பீறிட்ட காற்றை சுவாசிக்கத் திணறி - காரின் கண்ணாடிக் கதவுகளை ஏற்றினான்.

ஆர்தர் சலனம் காட்டாமல் நேர் பார்வை பார்த்தார். நிமிஷத்திற் கொருதரம் உதடுகளுக்குள் முனகிக்கொண்டார். ''ஏதோ ஒரு மோசமான சம்பவம் நடந்திருக்கிறது... காரில் யாரும் இல்லையென்றால் அதுதான் அர்த்தம்...''

பர்மிங் ஹாம் நெருங்கிக் கொண்டிருப்பதற்கு அடையாளமாக - ரோட்டின் இரண்டு பக்கத்திலும் வெளிர் பச்சையில் புல்வெளிகள் தெரிய ஆரம்பித்தன. புல்வெளிக்கு நடுவே சர்க்கிள். சரிவாய் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள். நீலநிறச் சாயத்தை கரைத்துவிட்ட மாதிரி ஏரிகள்...

விவேக் கேட்டான்.

''இந்திய தூதர் வீட்டுக்கு போக வேண்டிய கார் பர்மிங் ஹாமுக்கு எப்படி வந்தது...?''

''ஆச்சர்யம்...''

''என்ன நடந்திருக்கும்...?''

''நிச்சயமாய் ஒரு மோசமான சம்பவம்...''

திடீரென்று காரின் வேகம் குறைந்தது.

விவேக் தலையை உயர்த்தினான்.

ரோட்டின் குறுக்கே எமகிங்கர பைக்கோடு ஒரு கான்ஸ்டபிள் நின்று கையை ஆட்ட - கார் நிதானமாகி - அவரருகே போய் நின்றது.

ஆர்தர் தலை நீட்டினார்.

''தகவல் தந்தது நீதானா...?''

அட்டென்ஷனுக்கு வந்த கான்ஸ்டபிள் தலையாட்டினார்.

''கார் எந்தப் பக்கம் நிற்கிறது...?''

கான்ஸ்டபிள் மரங்கள் அடர்ந்த - அந்த இடது பகுதியை நோக்கி கையைக் காட்டினார். ஆர்தரும் விவேக்கும் பார்வையை அங்கே போட்டார்கள்.

மரங்களின் கரும்பச்சை இலைகளுக்கு மத்தியில் காரின் மண்டை சிவப்பாய் தெரிந்தது. ஆர்தர் கண்ணைக் காட்ட - போலீஸ் கார் - ரோட்டினின்றும் கீழே இறங்கி - அந்த புல்வெளியில் திரும்பியது.

மேட்டிலும் பள்ளத்திலும் தத்தித் தத்தி ஏறி இறங்கி - மரங்களுக்கு மத்தியிலிருந்த அந்த காரை நோக்கிப் போனது. பக்கத்தில் நெருங்க நெருங்கவே புரிந்தது.

அது இந்தியத் தூதரின் கார்தான்.

விவேக்கும், ஆர்தரும் போலீஸ் காரினின்றும் - இறங்கி தூதரின் காரை நெருங்கினார்கள். காரில் யாருமில்லை. சுற்றுப்புறம் பூராவும் கொடுமையான நிசப்தம். தூரத்து புல்வெளியில் ஒரு சர்ச் மட்டும் அழுக்கு வெள்ளையில் தெரிந்தது.

விவேக் தன் கர்ச்சீப்பை கைகளில் சுற்றிக்கொண்டு - காரின் பின் சீட்டுக் கைப்பிடியை பற்றி இழுத்தான். அது திறந்துகொள்ள - உள்ளே எட்டிப்பார்த்தான்.

சீட்டுக்குக் கீழே -

சிவப்பு ரோஜா இதழ்களை உதிர்த்துவிட்ட மாதிரி - ரத்தத் துளிகள். விவேக்கின் முதுகுக்குப் பின்னால் எட்டிப் பார்த்த ஆர்தர் அதிர்ச்சியோடு சொன்னார்.

''ப்ளட் ஸ்ட்ரெய்ன்...''

விவேக் காரைச் சுற்றிக்கொண்டு மறுபக்க கதவுக்குப் போனான். கதவுக்கு வெளியே மணலில் உறைந்து போன ரத்தத் துளிகள்.

தொடர்ந்து ரத்தத் துளிகள் சொட்டிக்கொண்டே - மரங்களுக்கு மத்தியில் போயிருந்தது. ஆர்தரும் விவேக்கும் ரத்தத் துளிகளை அடியொற்றி நடந்தார்கள்.

இருபதடி தூரம் நடந்தார்கள்.

அந்த மரத்தருகே வந்ததும் சட்டென்று நின்றார்கள்.

சிவப்பு வெள்ளை யூனிபார்ம் அணிந்த - டிரைவர் ஹெட்டிக் கைகளை முன்னோக்கி பரத்திக்கொண்டு - விழுந்து கிடந்தான். முழங்கையிலும் - தலையிலும் அழுத்தமான மணல் தீற்றல்கள். வலது கால் 'இசட்' வடிவத்தில் மடங்கிக் கிடந்தது.

விவேக் குனிந்து - ஹெட்டிக்கைப் புரட்டினான்.

முகம் பூராவும் மண்.

லேசான சுவாசத்தில் இருந்தான்.

விவேக் அவன் கன்னத்தைத் தட்டினான். ''ஹெட்டிக்... ஹெட்டிக்...'' ஆர்தர் முழந்தாளிட்டு உட்கார்ந்து - ஹெட்டிக்கின் முதுகுக்கு கை கொடுத்து தூக்கினார். மரத்திண்டுக்கு சாய்வாய் உட்கார வைத்தார். அவன் கண்களை மலர்த்தினான். வரண்டு போன உதடுகளை நாக்கால் நீவிக்கொண்டு - ஆர்தரை மூச்சிரைக்கப் பார்த்தான்.

''ஹெட்டிக்... வாட் ஹேப்பண்ட்...?''

ஹெட்டிக் பிரெஞ்ச் மொழியில் முனகினான்.

''ஆத்மராமைக் காப்பாற்றுங்கள்... அவர் கடத்தப்பட்டு விட்டார்...''

''ஆர்தர் பரபரத்தார். ''யாரால்...?''

''நா... நான்குபேர்... ட்ரை வீலர் டயோட்டா வேனில் வந்தார்கள். காரை மடக்கி பர்மிங் ஹாமுக்கு ஓட்டச் சொன்னார்கள். இங்கே வந்ததும் - என்னையும் ஏஞ்சலாவையும் தாக்க ஆரம்பித்தார்கள். நானும் அவளும் கீழே இறங்கி ஓடினோம்...''

''ஏஞ்சலா... எங்கே?''

''எனக்குத் தெரியவில்லை...''

''வேன் நெம்பர்...?''

''பர்மிங் ஹாம் வருவதற்குள் நான்கு நெம்பர் பிளேட்டுகளை மாற்றினார்கள். அதில் எதுவுமே உண்மையில்லை என்று கூறி சிரித்தார்கள்...''

டிரைவர் ஹெட்டிக்கிற்கு மறுபடியும் மயக்கம் வரும் போலிருந்தது... கண்களை சொருகிக்கொண்டு மூச்சிரைத்தான்.

'ஏஞ்சலா என்ன ஆனாள்...?' - விவேக் யோசித்துக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான். மரங்களுக்கு மத்தியில் அந்த பாதை போயிற்று.

நடந்தான்.

''எங்கே போகிறீர்கள் விவேக்...?'' ஆர்தர் கேட்டார்.

''ஏஞ்சலாவைத் தேட வேண்டாமா...?''

''தேடுங்கள்... நான்... மெட்ரோபாலிடன் போலீஸ் ஹெட் குவார்டர்ஸுக்கு தகவல் கொடுத்துவிட்டு வருகிறேன்... ட்ரை வீலர் டயோட்டா வேன்... இன்னமும் லண்டனின் எல்லைக்குள்தான் இருக்கும்... எப்படியும் மடக்கிவிடலாம்...''

ஆர்தர் போலீஸ் காரில் இருந்த ஒயர்லெஸ்ஸை நோக்கிப் போக - விவேக் எதிரே தெரிந்த அந்த பாதையில் நடந்தான்.

குளிர்ச்சியான இடம்.

திரும்பின பக்கமெல்லாம் கண்களில் பசுமையடித்தது. பிரும்மாண்டமாய் வளர்ந்திருந்த ஓக் மரங்கள் - பூமியில் கெட்டியாய் நிழலைக் கொட்டியிருந்தது.

விவேக் நடந்தான்.

நடக்க நடக்கவே - மறுபடியும் அவனுக்கு பரிச்சயமான ரத்தத் துளிகள் அங்கொன்றும் - இங்கொன்றுமாய் சொட்டிக் கொண்டே போயிருந்தது.

ரத்தச் சொட்டுகளுக்குப் பின்னால் நடந்தான்.

அது ஒரு புதரின் மறைவுக்கு கொண்டுபோக -

விவேக் தடக்... தடக்... என்கிற இருதயத்தோடு - அந்தப் புதரை நெருங்கினான். சாங்கோ எனப்படும் அந்த ஒருவகை பழுப்பு கோரைப்புல் புதருக்குப் பின்னால் -

ஏஞ்சலா மல்லாந்து கிடந்தாள்.

(ஆண் வாசகர்களே! கண்களை மூடிக்கொள்ளுங்கள்)

ஏஞ்சலா நூறு சதவீதம் - நிர்வாணமாய் - ரத்தமாய் - அடி வயிற்றில் குத்திட்டு நின்ற கத்தியோடு - பயத்தில் பிளந்த வாயோடு - மூக்கு துவாரங்களில் மொய்த்த ஈக்களோடு - பயம் நிரம்பிய கண்களோடு - செத்துக் கிடந்தாள்.

விவேக் -

ஏஞ்சலாவை - இம்சை செய்கிற வயிறோடு நெருங்கி - எதையும் தொட்டு விடாமல் ஜாக்ரதையாய் உட்கார்ந்தான்.

.....

# 9

"ஏஞ்சலா ஒரு அவசர கற்பழிப்புக்கு உள்ளாகியிருக் கிறாள். ஏறக்குறைய ஐம்பது அடி தூரம் ரத்தம் சொட்ட சொட்ட காரிலிருந்து இழுத்து வரப்பட்டிருக்கிறாள். தலையின் பின்

பக்கத்தில் ரத்த காயம் உண்டாக்கி - பிறகு கத்தியால் வயிற்றில் குத்தி கொன்றிருக்கிறார்கள்... மிக மிகக் கொடுமையான மரணம்...''

ஸ்பாட் விசிட் செய்த டாக்டர் ஹோமர்ஸன் சொன்னதைக் கேட்டு ஆர்தரும் விவேக்கும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

ஏஞ்சலா ஒரு வெள்ளை விரிப்பில் - மானம் காக்கப்பட்டு - மரத்தடியில் நீளமாய் படுத்திருக்க - வயர்லெஸ் மூலமாய் வரவழைக்கப்பட்ட மர்டர் ஸ்குவாட், சீன்ஸ் ஆப் க்ரைம் டிபார்ட் மெண்ட் ஆசாமிகள் - சின்னச் சின்ன தோலுறை பெட்டிகளோடு - பரவலாய் தெரிந்தார்கள். ஏஞ்சலாவின் உடம்பிலிருந்த ரத்தத்தையும் - வெளியே மணலோடு மணலாய் உறைந்து போயிருந்த ரத்தத்தையும் சின்னச் சின்ன டெஸ்ட் ட்யூப்புகளில் - ஒரு 'கலைப்பொருள்' மாதிரி சேகரித்துக்கொண்டார்கள். எத்தனை பேர்களால் கற்பழிக்கப்பட்டாள் என்பதை தெரிந்து கொள்வதற்காக - ஏஞ்சலாவின் தொடை மேல் சிதறியிருந்த திரவக் கறைகளை - உலோகத் தகட்டால் சுரண்டி - எதிலேயோ ஜாக்ரதை காத்தார்கள். இந்திய தூதரின் காரை சிலிகேட் பௌடரால் குளிப்பாட்டி - பூதாகரமான லென்ஸுகளால் கைரேகைகளைத் தேடிக்கொண்டிருந் தார்கள். காலடித் தடங்களைக் கண்டுபிடிப்பதற்காக - ஒரு கம்ப்யூட்டர் சாதனத்தை ட்ராலியில் வைத்து - பூமியின் எல்லா பக்கமும் உழுது கொண்டே போனார்கள்.

கார் டிரைவர் ஹெட்டிக் - நீரால் நனைக்கப்பட்டு - க்ளூகோஸ் வாட்டர் புகட்டப்பட்டு - நார்மல் நிலைக்கு வந்து கொண்டிருந்தான். அடிபட்டதில் உதடு மட்டும் வீங்கி - காய்ந்து ரத்தமாய் தொங்கியது. கன்னத்தில் ரத்தம் கட்டிப்போயிருந்தது.

விவேக் ஹெட்டிக்கிடம் வந்தான்.

''ட்ரை வீலர் வேனில் வந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்று சொன்னீர்கள் ஹெட்டிக்...?''

''நான்கு பேர்...''

''என்ன பாஷை பேசிக்கொண்டார்கள்...?''

''பிரெஞ்ச்...''

''வந்தவர்கள் எப்படியிருந்தார்கள்...? அடையாளம் ஏதாவது...?''

''முகங்களைக் கறுப்புத் துணியால் மூடிக்கொண்டிருந் தார்கள்... கண்ணிமைக்கிற நேரத்தில் எல்லாம் நடந்துவிட்டது.''

''உங்கள் காரை எங்கே மடக்கினார்கள்...?''

''கவெண்ட்ரி ரோட்டின் - ஆள் நடமாட்டம் அற்ற பகுதியில், கார் போய்க்கொண்டிருந்தபோது - டயோட்டா வேனைக் கொண்டுவந்து மறித்தார்கள். நான் காரை நிறுத்தினதும் - நான்கு பேரில் ஒருவன் - வேகமாய் ஓடி வந்து - காரில் ஏறினான். கையில் மெஷின்கன்னை வைத்துக்கொண்டு - பர்மிங் ஹாமுக்கு ஓட்டச் சொன்னான்...''

''இன்னொரு தரம் குரலைக் கேட்டால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமா?''

''முடியும்...''

ஆர்தர் இந்திய தூதரின் கார் அருகே வந்தார். மர்டர் ஸ்குவாட் ஸ்பெஷல் ஆபீஸர் ஆண்டர்ஸன் தோளைத் தொட்டார்.

''எனி... ஃபிங்கர் பிரிண்ட்ஸ்...?''

''வீ... ஆர் ட்ரையிங்... ஸார்...'' விறைத்து நின்று பதில் சொன்னார்.

''கால் தடங்கள் ஏதும் கிடைத்ததா?''

''கிடைக்கவில்லை...''

''குற்றவாளிகள் மொத்தம் நான்கு பேர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். காலடித் தடங்களும் கைரேகைப் பதிவுகளும் நிச்சயமாய் கிடைக்கும். மர்டர் நடந்த இந்த பரப்பை துல்லியமாய் அலசுங்கள்...''

ஆண்டர்ஸன் சொன்னார். ''ஸார்... இது முன்கூட்டியே திட்டமிட்ட சம்பவம். எதிரிகள் ஜாக்கிரதையாய் இருந்திருக்கிறார்கள். கைரேகை பதிவுகளோ - கால் தட பதிவுகளோ பட்டுவிடாமல் கவனம் காத்திருக்கிறார்கள். இந்த சம்பவத்தில் நமக்கு கிடைத்திருக்கக்கூடிய ஒரே ஒரு க்ளூ... செண்ட் வாசனைதான்...''

''செண்ட் வாசனையா...?''

''எஸ்... ஸார்... கற்பழிக்கப்பட்ட பெண்ணின் உடம்பிலிருந்து அந்த செண்ட் வாசம் அடிக்கிறது.அது ஆண்கள் உபயோகிக்கும் இண்டாக்ஸிகேட் செண்ட். அவளைக் கற்பழித்த பேர்வழியின் உடம்பிலிருந்து - அந்த வாசனை பெண்ணின் உடம்புக்கு பரவியிருக்க வேண்டும்...''

''ஸோ... கொலையாளிகளில் ஒருவன் இண்டாக்ஸிகேட் செண்ட் உபயோகிக்கிற பேர்வழி...?''

''ஆமாம்... ஸார்...''

ஆர்தரின் மனசில் துளியூண்டு உற்சாகம் தொற்றிக்கொண்டது.

.....

# 10

இன்ஸ்பெக்டர் கானர்ஸ் - பிரிட்டிஷ் டெலிவிஷனில் - ரோஜர் எட்விட்டின் முகவரியை பொறுக்கிக்கொண்டு - ஹூல்பர் ஹாம்டனிலிருந்த அவனுடைய வீட்டுக் கதவைத் தட்டும்போது - மதியம் ஒரு மணி.

ரோஜர் எட்விட்டின் வீடு - நெரிசலான வெஸ்டர் ரோட்டின் - மூன்றாவது இலக்கமிட்ட மாடியில் இருந்தது. சுற்றுப்புறத்தில் சுகாதாரம் தவறியிருந்தது. கீழே இருந்த மாடித்தள ஆபீஸ்களில் டைப்ரைட்டர்கள் தடதடத்துக்கொண்டிருந்தன.

கதவுக்குப் பின்னாலிருந்து குரல் வந்தது. பெண்குரல்.

''யாரது...?''

''போலீஸ்...''

கதவு திறந்தது.

பூமத்திய ரேகை போல - கழுத்திலிருந்து பாதம் வரை நீளமான ஜிப் தெரிய - இறுக்கமான ஒரு கவுனுக்குள் சிக்கியிருந்தாள் அந்தப் பெண். பௌடர் நிறம். உதட்டில் கனமான லிப்ஸ்டிக் பூச்சு. கழுத்தில் ஒரு வெள்ளிச் சங்கிலி. அதில் ஒரு டாலர்.

''உங்களுக்கு என்ன வேண்டும்?'' அவள் கேட்க - கானர்ஸ் அவளை கூர்மையாய் பார்த்துக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

''இது ரோஜர் எட்வின் வீடுதானே?''

''ஆமாம்...''

''அவர் எங்கே...?''

''டி.வி. ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறார்... அங்கே அவர் காமிராமேன்...''

''அவர்க்கு நீ என்ன ஆக வேண்டும்...?''

''மனைவி...''

''அவருடைய அறை எது...?''

''எதற்காக கேட்கிறீர்கள்...?''

''சோதனை போட வேண்டும்...''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்...''

''ரோஜர் எட்வின் இறந்துவிட்டார். ஐ... மீன் ஒரு கொலை பண்ண முயற்சித்து விட்டு - தானும் தற்கொலை செய்துகொண்டார்... பேரியம் சயனைட் டேப்ளட்... உடம்பு முழுவதும் பச்சையாகி மார்ச்சுவரியில் கிடக்கிறார்...''

அவள் புருவம் சுருக்கினாள்.

''ரோஜர் இறந்து விட்டாரா...?'' அவள் தளர்ந்து போய் சோபாவில் உட்கார்வதை பொருட்படுத்தாமல் - கானர்ஸ் கேட்டார்.

''அவருடைய அறை எது...?''

அவள் மௌனமாய் - திரைச்சீலை அசைந்த ஒரு அறையைக் காட்டினாள். கானர்ஸ் அந்த அறைக்குள் நுழைந்தார். ரோட்டைப் பார்த்த மாதிரி இருந்த அறையில் வெளிச்சம் பளீரென்று விழுந்திருந்தது. சுவரில் நிறைய போர்ட்ராய்ட்கள்.

அறைக்குள் நுழைந்த கானர்ஸ் - சட்டென்று திரைச்சீலை ஓரமாய் ஒதுங்கி - தலையை லேசாய் நீட்டி - சோபாவில் உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தார்.

அவள் தன் கழுத்திலிருந்த - வெள்ளிச் சங்கிலியின் டாலரை இடது கையால் பற்றிக்கொண்டு வலது கை விரல்களால் - திருகிக் கொண்டிருந்தாள்.

கண்கள் கானர்ஸ் போன அறை பக்கமே சுழன்றன.

''மிஸஸ் ரோஜர் எட்வின்...''

கானர்ஸ் அறைக்குள்ளிலிருந்து குரல் கொடுத்தார். அவள் டாலர் திருகுகிற முயற்சியை கைவிட்டு விட்டு - வேகமாய் வந்தாள்.

''தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டும்... ரோஜரின் மேஜையறை சாவி வேண்டும்...''

''அது என்னிடமில்லை... அவரிடம்தான் இருக்கும்...''

''அவரை முழுசுமாய் அலசிப் போட்டாயிற்று... அவரிடம் ஒரு குண்டூசி கூட இல்லை... சாவியைத் தருகிறீர்களா?'' கேட்டுக் கொண்டே அவளை நெருங்கிய கானர்ஸ் - அவளே எதிர்பார்க்காத விநாடியில் - அவள் கழுத்திலிருந்த வெள்ளிச் சங்கிலியையும் - டாலரையும் பறித்தார். அவள் வீறிட்டுக் கத்துவதற்காக வாயைத் திறந்த போது - ''ஷட் யுவர் மவுத்'' என்று சொல்லி - பிஸ்டலைக் காட்டினார்.

அவள் ரத்தச் சாயம் போய் - சுவரோடு ஒண்டினாள்.

கானர்ஸ் - சுண்ணாம்பு டப்பி சைஸில் இருந்த அந்த டாலரின் மேல் மூடியை நகத்தால் கெல்லி எம்பினார். மூடி கொஞ்சம் சிரமமாய் திறந்துகொள்ள -

உள்ளே கறுப்பு உடம்போடு - சின்னதாய் -

ஒரு மைக்ரோ ரிஸீவர்.

கானர்ஸ் உதட்டைக் குவித்து உற்சாகமாய் விசில் அடித்தார். மிஸஸ் ரோஜர் எட்வின் ஒரு வேகமான வியர்வையில் அரும்பிக் கொண்டிருந்தாள்.

.....

# 11

லிவர்பூல் ரோட்டில் போலீஸ் கார் வீறிக்கொண்டிருக்க - காரின் முன் சீட்டில் உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் கானர்ஸ் உற்சாகமான குரலில் - பின்சீட்டில் இருந்த ஆர்தரிடமும் - விவேக்கிடமும் சொல்லிக்கொண்டிருந்தார்.

''மிஸஸ் ரோஜரிடமிருந்து அந்த மைக்ரோ ரிஸீவரைப் பார்த்ததும் - என்னுடைய சந்தேகம் அதிகமாயிற்று. பிஸ்டலின் முனையில் நிறுத்தி அதட்டிக் கேட்டேன். அவள் மசியவில்லை. லிவர்பூல் போலீஸ் நிலையத்திற்கு கொண்டுவந்து - பெண் போலீஸிடம் ஒப்படைத்தேன். அவர்கள் ரெட் ரூமில் வைத்து விசாரிக்க - உண்மைகளை உமிழ ஆரம்பித்தாள். அவள் சொன்ன முகவரிக்கு போய் - மூன்று நபர்களை தள்ளிக்கொண்டு வந்தேன்... அதில் ஒருவன் சிலோனைச் சேர்ந்தவன். மற்ற இரண்டு பேரும் பிரெஞ்சு ஆசாமிகள்... மூவரையும் கொண்டுவந்து லிவர்பூல் லாக்கப்பில் சேர்த்திருக்கிறேன்...''

''மிஸ்டர் கானர்ஸ்... உங்கள் பணி அற்புதமான பணி...'' - விவேக் பாராட்டிக் கொண்டிருக்கும்போதே - போலீஸ் கார் லிவர்பூல் போலீஸ் ஸ்டேஷன் வாசலில் போய் நின்றது.

மூன்று பேரும் இறங்கி உள்ளே போனார்கள்.

லிவர்பூல் போலீஸ் ஸ்டேஷன், லண்டன் போலீஸ் ஸ்டேஷன்களில் கொஞ்சம் வித்தியாசமாய் தெரிந்தது. பழைய கோட்டை ஒன்றை - செப்பனிட்டு - பெயிண்ட் அடித்து மாற்ற முயற்சித்திருந்தார்கள். தோற்றிருந்தார்கள்.

பெண் போலீஸ் அதிகாரியும் - பெண் கான்ஸ்டபிள்களும் ஆர்தரைப் பார்த்ததும் - அட்டென்ஷனுக்கு வந்து - நெற்றியில் கை பதித்தார்கள்.

சீரான பூட்ஸ் சத்தத்தோடு - இன்ஸ்பெக்டர் கானர்ஸ் உள்ளே கூட்டிக்கொண்டு போய் - அந்த லாக்-அப்பின் முன்னால் நிறுத்தினார்.

மிஸஸ் ரோஜர் எட்வின் கம்பிகளுக்குள்ளே கவலையாய் தெரிய - ஆர்தர் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார். பெண் போலீஸிடம் அடிபட்டதில் முகம் வீங்கியிருந்தது. ஆர்தர் கேட்டார்.

''உன் பெயர் என்ன...?''

''மா... மார்ஜியானா...'' அடி விழுமோ என்கிற பயத்தில் பின்னுக்கு நகர்ந்தாள் அவள்.

''உன்னுடைய கோஷ்டியில் மொத்தம் எத்தனை பேர்?''

''எ... என் கணவர்க்கும் அந்த கோஷ்டிக்கும்தான் பரிச்சயம்... எனக்கு யாரையும் தெரியாது...?''

''உனக்கு யாரையும் தெரியாதென்றால் உன்னுடைய செயின் டாலரில் எதுக்காக மைக்கோ ரிஸீவர்...?''

''என் கணவர் வீட்டில் இல்லாத நேரங்களில்... சில சமயம் அந்த கோஷ்டியிலிருந்து தகவல் வரும்... என் கணவரின் கட்டாயத்துக்காகத்தான் அதை அணிந்திருந்தேன்.''

''அந்த கோஷ்டியின் குறிக்கோள் என்ன...?''

''இண்டியன் ஸ்காலர் ஆத்மராமை... கொலை செய்வது...''

''என்ன காரணம்...''

''எனக்குத் தெரியாது...''

ஆர்தர் திரும்பி கானர்ஸைப் பார்த்தார். ''அந்த மூன்று பேர்களையும் இங்கே கூட்டிக்கொண்டுவாருங்கள் கானர்ஸ்...''

கானர்ஸ் நகர்ந்து போய் - இரண்டு நிமிஷ நேரத்திற்குப் பிறகு - உராயும் சங்கிலி சத்தங்களோடு அந்த மூன்று பேர்களையும் கூப்பிட்டு வந்தார்.

மூன்று பேரும் ஒரே அளவில் தாடி வைத்திருந்தார்கள். சிலோன் ஆசாமி நிறத்திலேயே தன்னைக் காட்டிக்கொடுத்தான்... சின்னச் சின்ன கண்கள். மூன்று பேரும் பார்வையை எங்கெங்கோ போட்டு - பின் தலை குனிந்தார்கள்.

ஆர்தர் மூன்று பேரையும் மாறி - மாறி பார்த்தபடி கேட்டார்.

''ஆத்மராமை கடத்திக்கொண்டு போய் எங்கே வைத்திருக் கிறீர்கள்?''

அவர்கள் தலைகளை உயர்த்தி ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள். முதல் பேர்வழி சொன்னான். ''அவரை நாங்கள் கடத்தவில்லை... ரோஜர் எட்வின் மூலமாக அவரை சுட்டுக்கொல்ல முயன்றோம். அந்த முயற்சியில் தோல்வி அடைந்தோம்... அடுத்தத் திட்டத்தைப்பற்றி யோசிப்பதற்குள் போலீஸ் எங்களை வளைத்துவிட்டார்கள்.''

''ஸ்காட் போலீஸிடம் பொய் உதவாது குற்றவாளி நண்பர்களே...!''

ஒருவன் தீர்க்கமாய் மறுத்தான்.

''இல்லை... நாங்கள் சொல்வது நிஜம்... ஒரு வெளிநாட்டு சக்தி எங்களுக்கு ஏராளமான பணம் கொடுத்து - ஆத்மராமை தீர்த்துக் கட்டும்படி சொன்னது... நாங்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம்... ஆத்மராமுக்கு போலீஸ்காவல் அதிகமாய் இருந்தது. பல வழிகளில் முயன்றும் - முடியாததால் - கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தோம். ரோஜர் எட்வின் ஒரு ரத்தப் புற்று நோயாளி. இன்னும் ஆறு மாதக் காலத்தில் சாகப்போகிறவன்... ஆறு மாதம் கழித்து வெறுமனே சாகப் போகிறவன் - ஆத்மராமை தீர்த்துக்கட்டிவிட்டு - அதே இடத்தில் - விஷ மாத்திரையை மென்று செத்துப் போனால் என்ன? அதற்காக ரோஜர் எட்வினுக்கு இருபதாயிரம் பவுண்ட்ஸ் விலையாக பேசப்பட்டது... டெலிவிஷன் காமிராவில் பிஸ்டலை பொருத்தி - ஆத்மராமை சுட்ட கையோடு - ரோஜர் எட்வின் சயனைட் மாத்திரையை சாப்பிட்டு போலீஸ் கையில் சிக்காதபடிக்கு தன்னை அழித்துக்கொள்ள வேண்டும்... இந்த ஏற்பாட்டுக்கு ரோஜரின் மனைவி மார்ஜியானாவும் ஒப்புக் கொண்டு - பணத்தை வாங்கிக்கொண்டாள்...''

ஆர்தர் புன்னகைத்தார்.

''அருமையான கதை... இந்தக் கதையை கொலம்பியா பிக்சர்ஸிடம் போய் சொல்லுங்கள்... எழுபது எம்.எம்.மில் படம் எடுப்பார்கள்...''

''நாங்கள் சொல்வது உண்மை...''

''பொய்... உங்கள் மூன்று பேரில் ஏஞ்சலாவை கொலை செய்தது யார்...?''

''எங்களில் யாருமே கிடையாது...''

ஆர்தர் அந்த சிலோன் பேர்வழியின் தேங்காய் நார் கிராப்பை கப்பென்று பற்றி உலுக்கினார்.

''நீதானே...?''

''நான் இல்லை...''

நெக்கென்று லாக்-அப் சுவரில் இடித்தார் அவன் தலையை.

அதே விநாடி -

அந்த பெண் போலீஸ் அதிகாரி பரபரப்பாய் உள்ளே நுழைந் தாள். ஆர்தரை ஏறிட்டாள். ''ஸார்... உங்களுக்கு டெலிபோன்...''

''டெலிபோனில் யார்...''

''தெரியவில்லை... உங்களோடு பேச வேண்டுமாம்...''

ஆர்தர் ஷூ சப்திக்க - வராந்தாவில் நடந்து போய் - முன்னறையின் மேஜையிலிருந்த ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...''

''போலீஸ் சூப்ரின்டெண்ட் ஆர்தர்...?''

''எஸ்... ஹோல்டிங்...''

''ஆத்மராம்... உங்களுக்கு முழுதாக - சேதமில்லாமல் வேண்டுமா?''

''யார்... நீ...?''

''ஏஞ்சலாவைக் கொன்னு - அவனைக் கொல்வதற்கு முன்னால் கற்பழித்து - ஆத்மராமை கீறல் இல்லாமல் கடத்திக் கொண்டுபோன நான்கு பேரில் ஒருவன்...''

''ஆத்மராம் இப்போது எங்கே...?'' - ஆர்தர் பேசிக் கொண்டே சற்றுத் தொலைவில் நின்றிருந்த விவேக்கை கை

யசைத்து கூப்பிட்டு - ஜாடையிலேயே - பேசிக்கொண்டிருக்கிறவன் எந்த டெலிபோன் பூத்திலிருந்து பேசுகிறான் என்பதை கண்டு பிடிக்கச் சொன்னார்.

விவேக் இன்னொரு டெலிபோனுக்கு ஓடினான்.

''ஆத்மராம் இப்போது ஒரு சின்ன - தற்காலிக மயக்கத்தில் இருக்கிறார். ஒரு மணி நேரம் கழித்துதான் நினைவுக்கு வருவார்.''

''அவரை எதற்காக கடத்திக்கொண்டு போயிருக்கிறீர்கள்?''

''பிசினஸ்...''

''பிசினஸா...?''

''எஸ்... அதை டெலிபோனில் சொல்லிட்டிருக்க முடியாது... உங்களுடைய டிபார்ட்மெண்டைப் பற்றி எனக்குத் தெரியும்... இந்நேரம் டெலிபோன் எக்ஸ்சேஞ்சோடு தொடர்பு கொண்டு நான் எந்த டெலிபோன் பூத்திலிருந்து பேசிக்கொண்டிருக்கிறேன் என்று மோப்பம் பிடிக்க ஆரம்பித்திருப்பீர்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் - ஏதாவது ஒரு ரூபத்தில் உங்களோடு பேசுவேன். ரிஸீவரை வைத்து விடுகிறேன்...'' டொக்.

ரிஸீவர் சாத்தப்பட்டது.

ஆர்தர் ஹலோ... ஹலோ... என்று பட்டனைத் தட்டினார். மறுமுனை குறட்டை விட்டது. விவேக்கும் கானர்ஸும் ஓடி வந்தார்கள். சொன்னார்கள்.

''டெலிபோன் எக்சேஞ்சிலிருந்து தகவல் வருவதற்குள் அவன் ரிஸீவரை சாத்திவிட்டான்...''

ஆர்தர் விவேக்கிடம் சொன்னார். அவர் முகம் கவலையில் இருந்தது.

''விவேக்... இந்த கேஸில் ஒரு புதுத் திருப்பம்...''

''என்ன...?''

''ஆத்மராமை கொலை செய்ய முயன்ற கும்பலை கண்டுபிடித்து உள்ளே கொண்டுவந்து விட்டோம்... ஆனால் அவரை பணயமாக வைத்து - பிசினஸ் பேசுவதற்காக - வேறொரு கோஷ்டி - அவரைக் கடத்திக்கொண்டு போயிருக்கிறது. இன்னும் ஒரு மணி நேரத்தில் தொடர்பு கொள்கிற அதே நிமிடம் அவனை மடக்க வேண்டும்...''

.....

# 12

லிவர்பூல் போலீஸ் ஸ்டேஷனில் அசாத்திய நிசப்தத்தோடு எல்லோரும் காத்திருந்தார்கள். ஆர்தர் வயர்லெஸ் மூலமாய் எல்லா போலீஸ் ஸ்டேஷன்களையும் உசுப்பி - நகரில் இருந்த அத்தனை பப்ளிக் டெலிபோன் பூத்துகளையும் கண்காணிக்கச் சொல்லி யிருந்தார். சிகரெட்டை பற்ற வைத்து - இரண்டு தடவை இழுத்ததும் - பொறுமையில்லாமல் - முழு சிகரெட்டையும் ஆஸ்ட்ரேயில் இட்டு நசுக்கிவிட்டு ''பாஸ்டர்ட்... பாஸ்டர்ட்'' என்று சொல்லி - உள்ளங்கைகளில் மாறி மாறி குத்திக்கொண்டு - பிரசவ வேதனை நடைபோட்டார்.

''கானர்ஸ்...''

''ஸார்...''

''லண்டன் புறநகர் பகுதிகளான பர்மிங் ஹாம், வெஸ்டர், லிவாஸ், ஹெர்போர்ட், ஹூல்பர் ஹாம்டன் - இந்த போலீஸ்

ஸ்டேஷன்களை உஷார் நிலையில் இருக்கச் சொல்லுங்கள்... எந்த ட்ரை லீவர் வாகனமும் நகர எல்லையைக் கடக்க முயற்சி பண்ணினால் - அதை நிறுத்தி வைக்கச் சொல்லுங்கள்...''

''எஸ்... ஸார்...''

''அப்புறம் டெலிபோனில் ஒலித்த ஆசாமியின் குரலைக் கேட்டீர்களா...?''

''கேட்டேன்...''

''அந்தக் குரலைப் பற்றி உங்க கணிப்பு என்ன...?''

''பிரெஞ்ச் அஸண்ட்...''

''குட்... எந்த பழைய குற்றவாளியின் குரலாவது மனசை நெருடுகிறதா?''

''இல்லை... ஸார்... இது புதுக் குரல்...''

''பழைய குற்றவாளி குரலை மாற்றிப் பேசியிருக்க லாமே...?''

''பேசியிருக்கலாம்... ஆனால் டெலிபோனில் ஒலித்த குரல் அதுமாதிரி தெரியவில்லை... ஸார்... அது அவனுடைய இயல்பான குரல்தான்...''

''எதற்கும் நீங்கள் நாம் பதிவு செய்து வைத்திருக்கிற - பழைய குற்றவாளிகளின் கேஸட்டுகளை டேப்பில் போட்டுக் கேளுங்கள். கொஞ்சம் சிமிலாரிடி தெரிந்தாலும் - ஆளைக் கொண்டுவந்து - தட்டி விசாரியுங்கள்...''

''எஸ்... ஸார்...''

கானர்ஸ் வேக வேகமாய் நகர்ந்தார். ஆர்தர் விவேக்கின் பக்கம் திரும்பினார்.

''நடந்த சம்பவங்களைப் பற்றி உங்கள் கணிப்பு என்ன விவேக்...?''

''எல்லாமே அவர்கள் போட்ட திட்டப்படி துல்லியமாய் நடந்திருக்கின்றன. போன நிமிஷம் வரைக்கும் - ரோஜர் எட்வின் கோஷ்டி மட்டும்தான் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று நினைத்தோம்... ஆனால்... அந்த ரோஜர் கோஷ்டிக்கும் தெரியாமல் - போலீஸுக்கும் தெரியாமல் ஏதோ ஒரு திசையிலிருந்து - இரண்டாவது கோஷ்டி ஆத்மராமை குறிவைத்து தகர்த்திருக்கிறது. முதல் கோஷ்டியின் திட்டம் ஆத்மராமை தீர்த்துக் கட்டுவது. இரண்டாவது கோஷ்டியின் திட்டம் அவரைக் கடத்தி பணயப் பொருளாக வைத்துக்கொள்வது... என்னை ஏர்போர்ட்டில் கடத்த நினைத்த மாத்யூவும், கேரனும் இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்பது - மார்ஜியானாவின் ஸ்டேட்மெண்டில் தெரிகிறது. ஒரு கோஷ்டியை வெற்றிகரமாய் மடக்கிவிட்ட அதே நேரத்தில் - புதிதாய் இந்த இரண்டாவது கோஷ்டி முளைத்திருக் கிறது... இவ்வளவு பெரிய லண்டனில் அந்த கோஷ்டியை எந்த வகையில் அணுகப் போகிறோம். பிரமிப்பாய் இருக்கிறது...''

ஆர்தர் புன்னகைத்தார். ''ஸ்காட்லாண்ட் யார்ட் இது வரைக்கும் எந்த கேஸையும் கண்டுபிடிக்காமல் விட்டதில்லை... இந்த நிமிஷம் ஸ்காட்லாண்ட் யார்டின் சகலவிதமான விங்குகளும் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருக்கும்... ஆத்மராமை கடத்திக் கொண்டு - போனவர்கள் நிச்சயமாய் அவரைக் கொல்லமாட்டார்கள். அவரை ஒரு பணயப் பொருளாக வைத்து எதையாவது கேட்பார்கள்... அவர்கள் கேட்பதை தருவதாக சொல்லிக்கொண்டே - ஆசாமிகளுக்கு வலை விரித்து விடலாம்... மேலும்...''

மேஜையிலிருந்த டெலிபோன் ஒலித்தது.

ஆர்தர் லேசாய் பதட்டப்பட்டு ரிஸீவரை எடுத்து பேச்சை கேட்கும்படி சொன்னார். விவேக் அடுத்த மேஜைக்குப் போய் ரிஸீவரை எடுத்துக்கொண்டதும் - ஆர்தர் பேச ஆரம்பித்தார்.

''ஹலோ...''

மறுமுனையில் - கட்டையாய் ஒரு ஆங்கில குரல் கேட்டது.

''லிவர்பூல் போலீஸ் ஸ்டேஷன்...?''

''எஸ்...''

''மிஸ்டர் ஆர்தர்...?''

''எஸ்...''

''நான் மிட்லண்ட்ஸ்லிருந்து பேசுகிறேன். என் பெயர் ஷெப்பார்ட்... ஆணி, தகடு தயாரிக்கும் பாக்டரி வைத்திருக்கிறேன்... இரண்டு நிமிஷங்களுக்கு முன்னால் எனக்கு ஒரு போன் கால் வந்தது. போன் செய்த பேர்வழி என்னை மிரட்டி - உங்கள் போன் நெம்பரைக் கொடுத்து - அந்த நெம்பர்க்கு போன் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தி - உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு தகவலையும் சொன்னார். சொல்லாவிட்டால் என்னைக் கொன்றுவிடுவதாக மிரட்டினான்...''

''பயப்படாதீர்கள் மிஸ்டர் ஷெப்பார்ட்... அவன் என்ன தகவல் சொன்னான்?''

ஷெப்பார்ட் தொடர்ந்தார். ''போலீஸ் சூப்ரின்டெண்ட்டண்ட் ஆர்தரை பக்கத்திலிருக்கும் லிவர்பூல் போஸ்ட் ஆபீசுக்குப் போகச் சொல்லுங்கள். அங்கேயிருக்கும் தபால் பெட்டியில் ஆர்தர்க்காக ஒரு கடிதம் போஸ்ட் செய்திருக்கிறேன்... அதில் தபால் தலை இருக்காது... ஆர்தர் செய்ய வேண்டியது இதுதான்.. உடனடியாக அவர் அந்த தபாலாபீஸுக்கு போக வேண்டும்... அங்கிருக்கும்

தபால் அதிகாரியிடம் பேசி - அந்த கடிதத்தை அவர் வாங்கிக் கொள்ள வேண்டும்... அந்தக் கடிதத்தை அவர் படித்து - அதன்படி அவர் நடந்துகொள்ள வேண்டும்...''

''தகவல் இவ்வளவுதானா...?''

''ஆமாம்...''

''தாங்க்யூ மிஸ்டர் ஷெப்பார்ட்... நான் அந்த கடிதத்தை வாங்கிக்கொள்கிறேன்...'' ரிஸீவரை வைத்தார் ஆர்தர்.

'எதிரி புத்திசாலியானவன்... சாதாரண மானவன் இல்லை' என்கிற எண்ணம்... முதன் முதலாய் ஆர்தரின் மனசில் அழுத்தமாய் வந்து உட்கார்ந்தது. நிரம்ப நாட்களுக்கு முன்னால் வரை காணாமல் போயிருந்த பயம் - இப்போது லேசாய் எட்டிப் பார்த்தது. எதிரியின் 'மூவ்'க்கு தகுந்தபடி காயை நகர்த்த வேண்டும். எப்படி...?

.....

# 13

விவேக்கும் ஆர்தரும் பக்கத்திலிருந்த லிவர்பூல் தபாலாபீஸிற்கு சென்றபோது - மதியம் 1.30 மணி. சிறிய தபாலாபீஸ். தபால்தலைகளையும் கவர்களையும் விநியோகிக்க - கௌண்டர்களில் கம்ப்யூட்டர்கள் உயிரோடு இருந்தன. இன்னொரு பக்கம் வெள்ளை நிற பிளாஸ்டிக் பைகளில் கடிதங்கள் அடைபட்டு - டெலிவரி வேனுக்குள் புக காத்துக் கொண்டிருந்தன.

சார்ட்டிங் பாரங்களில் கையெழுத்தைப் போட்டுக்கொண் டிருந்த - தபால் அதிகாரி - ஆர்தரின் யூனிபார்முக்கு மரியாதை கொடுத்து எழுந்தார்.

''வெல்கம் ஸார்...''

''வேலை நேரத்தில் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும்...''

''பரவாயில்லை, ஏதாவது உதவி வேண்டுமா?''

எதிர்பார்த்து வந்த உதவியைச் சொன்னார் ஆர்தர். தபால் அதிகாரி நெற்றியைச் சுருக்கினார். ''உங்களுக்கு டெலிபோன் எப்போது வந்தது...?''

''ஐந்து நிமிஷங்களுக்கு முன்னால்...''

''அப்படியானால் டெலிபோன் செய்தவன்... இப்போதுதான் கடிதத்தைப் போட்டிருக்க வேண்டும்...''

''ஆமாம்...''

''ஒரு நிமிஷம்...'' என்று சொல்லி எழுந்த தபால் அதிகாரி மேஜை மேலிருந்த சாவியை எடுத்துக்கொண்டு - தபால் ஆபீஸுக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த - போஸ்ட் பாக்ஸை நோக்கிப் போனார். பாக்ஸின் லாக்கரை விடுவித்து - உள்ளே யிருந்த கடிதங்களை அள்ளிக்கொண்டு வந்தார். மேஜையின் மேல் பரவலாய் கொட்டினார்.

''பெயர் என்ன சொன்னீர்கள்... ஆர்தரா...?''

''ஆமாம்...''

சொல்லிக் கொண்டிருந்தபோதே அந்த நீளமான கவர் கிடைத்தது. கவரின் மேல் சிவப்பு மையில் ஆர்தர், க்ரைம் போலீஸ் சூப்ரின்டெண்ட்டண்ட்... என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப் பட்டிருந்தது. கவரின் வாயை ஸ்டேப்லரால் பின் அடித்திருந்தார்கள்.

ஆர்தர் அந்த கவரை வாங்கிக்கொண்டு எழுந்தார். ''தாங்க்யூ வெரிமச்...'' விவேக்கோடு காருக்கு வந்து பின் சீட்டில் அடைந்ததும் - டிரைவர் காரை கிளப்பினார்.

கார் நகர்ந்ததுமே - கவரின் வாயைக் கிழித்தார். உள்ளே நான்காய் மடித்திருந்த அந்த கடிதத்தை உருவினார். பிரித்தார்.

கடிதம் ப்ரெஞ்ச் மொழியில் டைப் செய்யப்பட்டிருந்தது.

''மேன்மை தாங்கிய போலீஸ் சூப்ரின்டெண்டண்ட் ஆர்தர் அவர்களுக்கு. இந்த நகரின் நான்கு குடிமகன்கள் எழுதிக் கொண்டது.

இந்தியாவைச் சேர்ந்த அடாமிக் ரிசர்ச் ஸ்காலர் ஆத்மராம் எங்கள் பாதுகாப்பில் பத்திரமாக இருக்கிறார். அவர் உங்களுக்கு முழுசாய் சேதமில்லாமல் கிடைக்க வேண்டுமென்றால் - நாங்கள் சொல்கிறபடி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும்.

சென்ற மாதம் லண்டன் விஜிலென்ஸ் ஆபீஸர்களும் கஸ்டம்ஸ் ஆபீஸர்களும் ஃபாரெஸ்ட்டர்ஹாம் செக் போஸ்டில் இருபது கிலோ எடை மதிப்புள்ள தங்க பிஸ்கெட்டுகளை கைப்பற்றினார்கள். அந்த தங்கம் எங்களுக்கு சேர வேண்டியது. தங்க பிஸ்கெட்டுகளை கோட்டை விட்டு விட்டு - அவர்களுக்கு சிக்காமல் ஓடிவந்த எங்கள் ஆட்கள் இரண்டுபேரை நாங்கள் சுட்டுக் கொல்ல வேண்டியதாயிற்று... சரி, விஷயத்திற்கு வருவோம்.

ஆத்மராம் உங்களுக்கு உயிரோடு வேண்டுமென்றால் - எங்களுக்கு இந்த இருபது கிலோ தங்க பிஸ்கெட்டுகள் வேண்டும். தங்க பிஸ்கெட்டுகளை ஒரு சூட்கேஸில் அடுக்கி - உங்களால் கைதுசெய்யப்பட்டு - பால்ஹாம் போலீஸ் ஸ்டேஷனில் லாக்-அப்பில் வைக்கப்பட்டிருக்கும் கேரனிடம் கொடுத்து அனுப்ப

வேண்டும். கேரனுக்கு சொந்தக் கார் உள்ளது... கேரனும், மாத்யூவும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

கேரனிடம் தங்கத்தை ஒப்படைத்து விடுவதோடு உங்கள் வேலை முடிந்தது. அவள் காரில் எங்களிடம் வந்துவிடுவாள். உங்கள் போலீஸ் உத்திகளை கையாண்டு - அவளுடைய காரை தொடர முயற்சி பண்ணினாலோ... அல்லது எங்களுக்கு பாதகம் ஏற்படக்கூடிய - விஷயங்களை மேற்கொண்டாலோ - ஆத்மராம் இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு - தேம்ஸ் நதியில் மிதப்பார். ஆகவே புத்திசாலித்தனமாய் நடந்து ஆத்மராமுக்கு ஆயுளை அதிகரியுங்கள். நாங்கள் குறிப்பிட்டிருக்கும் இந்த திட்டத்திற்கு - எட்டு மணி நேரம் அவகாசம் தருகிறோம். சரியாய் இன்று இரவு பத்து மணிக்கு தங்கத்தோடு கேரனை அனுப்பிவிட வேண்டும். இந்திய க்ரைம் புலி விவேக்கோடு சேர்ந்து - எங்களை ஏமாற்ற நினைத்தால் நீங்கள் ஏமாந்து போவீர்கள். நாங்கள் பாவங்களுக்கோ - மரணங்களுக்கோ அஞ்சுவதில்லை.''

- கடிதம் மொட்டையாய் முடிந்திருந்தது.

ஆர்தர் விவேக்கிடம் அந்த கடித வாசகங்களைச் சொன்னார்.

விவேக் கேட்டான்.

''ஸார்... நான் அந்த கடிதத்தைப் பார்க்கலாமா...?''

''தாராளமாக...'' ஆர்தர் கடிதத்தை நீட்ட அதை வாங்கிப் பார்த்தான் விவேக். சுத்தமான வெள்ளைத்தாள். தாளின் மேற்புறம் சீராக வெட்டப்படாமல் கொஞ்சம் பிசிறடித்தது. ஓரத்தில் துளியூண்டு சிவப்புக் கோடு தெரிந்தது.

''ஸார்...''

''எஸ்...''

''இது ஒரு லெட்டர் ஹெட்டின் தாள்...''

''எப்படிச் சொல்கிறீர்கள் விவேக்...?''

''ஒரு கம்பெனியின் பெயரையோ - ஒரு தனிநபரின் பெயரையோ பொறித்திருந்த பகுதியை கிழித்துவிட்டு தாளில் வெள்ளைப் பகுதியில் - டைப் செய்திருக்கிறார்கள்... பார்த்தீர்களா...? ஓரத்தில் பிரிண்ட் செய்யப்பட்ட அந்த சிகப்புக் கோடு தெரிகிறது.''

ஆர்தரின் முகம் பிரகாசத்திற்கு போயிற்று.

விவேக் தொடர்ந்தான்.

''அதுமட்டுமில்லை ஸார்... இன்னொரு க்ளூவும் இந்த காகிதத்தில் தெரிகிறது... அதுவும் நிரம்பவும் உற்றுப் பார்த்தால்தான் தெரியும்.''

அதற்குள் கார் லிவர்பூர் போலீஸ் ஸ்டேஷனைத் தொட்டிருந்தது. இருவரும் இறங்கி - ஸ்டேஷன் படிகளில் ஏறி உள்ளே போனார்கள்.

காற்றில் ஆடின கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு - அறைக்குள் நுழைந்து எதிரும் புதிருமாய் உட்கார்ந்தார்கள்.

''சொல்லுங்கள் விவேக்... என்ன க்ளூ...?''

விவேக் கடிதத்தைக் காட்டினான். ''டைப் அடிக்கப்பட்ட இரண்டு வரிகளுக்கு மத்தியில் ஒரு இம்ப்ரஷன் தெரிகிறதே பார்த்தீர்களா...?''

ஆர்தர் உற்றுப் பார்த்துவிட்டு ''எஸ்'' என்றார்.

''அது... வெறும் இம்ப்ரஷன் மட்டுமில்லை ஸார்... இதற்கு முன்னால் கையால் எழுதப்பட்ட வேறொரு கடித்தின் - வாசகங்களின் அழுத்தம். பால்பாயிண்ட் பேனாவால் எழுதியிருக்கலாம். இல்லாவிட்டால் இந்த இம்ப்ரஷன் விழாது...''

இம்ப்ரஷன்களை உற்றுப் பார்த்த ஆர்தர் எழுந்து - விவேக்கின் கைகளைப் பற்றிக்கொண்டார்...

''அற்புதம்... மிஸ்டர் விவேக்... உங்கள் கண்டுபிடிப்பு ஸ்காட்லாண்ட் யார்டின் மெரிட் புத்தகத்தில் நிச்சயம் இடம் பெறும்.''

''தாங்க்யூ ஸார்... லெட்டரில் இருக்கும் அந்த இம்ப்ரஷன் எழுத்துக்கள் என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமே சார்...?''

''சுலபமாய் கண்டு பிடித்துவிடலாம்... மிஸ்டர் விவேக்... பேப்பரையும் பேனாவையும் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்...''

விவேக் பேப்பரும் போனாவுமாய் உட்கார -

ஆர்தர் - போலீஸ் அதிகாரியிடம் கை லென்ஸை வாங்கி - அதன் வழியே இம்ப்ரஷன்களைப் பார்த்தார்.

சொன்னார் :

"WE ARE IN WANT OF 96 WATTS OF STRONG BOW... AND...

அதற்கு மேல் படிக்க முடியாமல் திணறினார் ஆர்தர். மற்ற இம்ப்ரஷன்கள் ப்ரெஞ்ச் வார்த்தைகளின் டைப் தட்டலால் அடிப்பட்டுப் போயிருந்தன.

ஆர்தர் நிமிர்ந்தார்.

''விவேக்... '96 WATTS OF STRONG BOW' வார்த்தையோட அர்த்தம் உங்களுக்கு புரிகிறதா?''

''புரியவில்லை.''

''இந்த லெட்டர் வாசகம் ஒரு 'சைடர்' பாக்டரிக்கு எழுதப்பட்டது...''

''சைடர் பாக்டரி...?'' விவேக் குழப்பமாய் பார்க்க ஆர்தர் சொன்னார். ''சைடர் என்பது ஆப்பிள் ஜூஸை புளிக்க வைத்துத் தரப்படும் பானம். ஏராளமான லாரிகளில் கொண்டு வந்து கொட்டப்படுகிற ஆப்பிள்களை எந்திரங்களால் நசுக்கி - ஆறாக பெருகி ஓடும் ஆப்பிள் ஜூஸை மரக்குடுவைக்குள் சேமித்து புளிக்க வைப்பார்கள். ஒரு லட்சம் லிட்டர் ஜூஸ் அடங்கும் ஒரு மரக்குடுவையை ஒரு வாட் என்று சொல்வார்கள். சைடர் போதை தரும் பானம்... சைடர் வகைகளில் மிகவும் போதையான பானத்திற்குப் பெயர் ஸ்ட்ராங்போ... (STRONG BOW)''

''அப்படியானால் தொன்னூற்றி ஆறு வாட்ஸ் ஸ்ட்ராங்போ பானம் வேண்டுமென்று இவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள்...''

''எஸ்...''

''டூ அட்ரஸ் இம்ப்ரஷன் தெரிகிறதா ஸார்...?''

விவேக் கேட்க - லென்ஸை மேல் நோக்கி நகர்த்தினார் ஆர்தர். உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே சொன்னார்... "N... E... L... S..."

அதோடு நிறுத்திக் கொண்டார்.

''அதற்கு மேல் எதுவும் தெரியவில்லை... விவேக்...''

''நான் பார்க்கிறேன் ஸார்...'' - விவேக் லென்ஸை வாங்கிக் கடிதத்தின் மேல் ஓட்டிப் பார்த்தான். ஆர்தர் சொன்ன அதே எழுத்துக்களோடு அந்த இம்ப்ஷன் முடிந்துபோயிற்று...

ஆர்தர் உற்சாகத்தில் கொஞ்சம் சின்னதாய் தத்தளித்து சொன்னார். ''விவேக்... வீ ஆர் நியரிங் தெம்... நாம் அவர்களைத் தேடக்கூடிய வட்டம் சின்னதாகிக் கொண்டு வருகிறது. அந்த நான்கு பேரும் ஒரு சைடர் பேக்டரியோடு சம்பந்தப்பட்டிருக் கிறார்கள்... ஹெர்போர்ட் என்கிற பகுதியில்தான் சைடர் பாக்டரிகள்

அதிகம். NELS எழுத்துக்களில் ஆரம்பமாகிற ஒரு பேக்டரியை நாம் கண்டுபிடிக்க வேண்டும்... அந்த பாக்டரியில் நிச்சயமாய் இந்த லெட்டர் காபி இருக்கும்... எடுத்துப் பார்த்தால் யார் என்று சுலபமாய் தெரிந்துவிடும்...''

''சைடர் பாக்டரிகளுக்கென்று ஏதாவது அஸோஸியேஷன் உள்ளதா?''

''ஆமாம் உள்ளது...''

''அந்த சங்கத்தில் விசாரித்தால் NELS எழுத்துக்களில் ஆரம்பமாகிற கம்பெனியின் பெயர் தெரிந்துவிடும்... முயற்சித்துப் பார்க்கலாமா...?''

''வேண்டாம்... விவேக்... இந்த க்ளூ நமக்குள் ரகசியமாகவே இருக்கட்டும்... விசாரிக்க ஆரம்பித்தால் எதிரிகள் உஷாராகிவிடுவார்கள்... வேண்டுமானால் டெலிபோன் டைரக்டரியில் NELS வரிசையில் - சைடர் பாக்டரி இருக்கிறதா என்று பார்க்கலாம்'' சொல்லிக்கொண்டே பக்கத்து மேஜையின் மேலிருந்த டெலிபோன் டைரக்டரியை - கொண்டு வரச்செய்து புரட்டினார்.

NELS வரிசையில் நிறைய நெல்சன்கள் வந்தன. எல்லாமே வாட்ச் ஒர்க்ஸ்... ப்ரிக் பேக்டரி... நர்சரி... டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்...

அந்தப் பெயரில் சைடர் பாக்டரியைக் காணோம்.

ஆர்தர் டைரக்டரியை மூடினார். ''விவேக்! உங்களை ஒரு துணிச்சலான காரியத்தில் ஈடுபடுத்தப்போகிறேன்... கூடுதல் பொறுப்பு உள்ள பணி...''

''சொல்லுங்கள் ஸார்...''

''நீங்கள் ஹெர்போர்ட் புறப்பட வேண்டும். அங்கேதான் சைடர் பாக்டரிகள் அதிகம்... நீங்கள் பிறர்க்கு சந்தேகம் ஏற்படாத வகையில் NELS பாக்டரியைப் பற்றி விசாரிக்க வேண்டும். பாக்டரி கிடைத்ததும் என்னோடு தொடர்பு கொள்ளுங்கள்... நானும் இன்ஸ்பெக்டர் கானர்ஸும் இந்த மிரட்டல் கடிதத்திற்கு பயப்படுகிற மாதிரி பாவ்லா - செய்து - நிலைமையைச் சமாளித்துக்கொண்டிருக்கிறோம்...''

''எஸ்... ஸார்...''

''நானும், இன்ஸ்பெக்டர் கானர்ஸும் ஹெர்போர்ட் பகுதிக்கு நிரம்பவும் பரிச்சயமானவர்கள்... விசாரித்தால் சரியான தகவல்களை பயந்து கொண்டு சொல்ல மாட்டார்கள். ஆகவேதான் உங்களை அனுப்புகிறேன்... மாலை ஆறு மணிக்கு மேல் மதுபானக் கடைகளில் ஆட்கள் நிறைய பேர் கூடுவார்கள். அந்த நேரத்தில் நீங்கள் அங்கே இருப்பது உத்தமம்.

''எஸ்... ஸார்...''

''இந்த கடிதத்தையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்... ராத்திரி எட்டு மணிக்குள் - உற்சாகமான செய்தியோடு உங்களை எதிர்பார்க்கிறேன்...''

# 14

விவேக் ட்யூப் ரயிலில் பயணம் செய்து - ஹெர்போர்ட் போய்ச் சேர்ந்தபோது - சூரியன் மேற்கில் வழுக்கி விழுந்து - எழ முடியாமல் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். காற்றில் குளிர் கலக்க ஆரம்பித்திருந்தது. ஹெர்போர்ட்டின் சாலையோர மரங்கள் - நீலச் சாயத்தில் முக்கியெடுத்த மாதிரியான பூக்களை தன்

கிளைகளில் ஏராளமாய் வைத்திருந்து - காற்று மிரட்டிக்கேட்கிற சமயங்களில் - பூக்களை உதிர்த்துக் கொண்டிருந்தது.

விவேக் லண்டன்வாசிகள் அணியும் நீளமான கோட்டை அணிந்து - தலைக்கு சர்க்குலர் தொப்பி கொடுத்திருந்தான். கண்களில் குளிர் கண்ணாடி தொற்றியிருந்தது. மெதுவாய் பிளாட்பாரத்தில் நடந்தான். தெருவோர வேப்பர் விளக்குகள் மஞ்சள் வெளிச்சத்தைக் கொட்ட - ஆங்கிலேயர்கள் கொத்து கொத்தாய் போனார்கள்.

JUST SIP. A DELICIOUS DRINK - STRONG BOW

-இந்த வார்த்தைகளோடு நியான் அணைந்து அணைந்து கூப்பிட - 'மது சமுத்திரம்' என்று பிரெஞ்சு மொழியில் சொன்ன அந்த கடைக்குள் நுழைந்தான் விவேக்.

சொற்ப கூட்டம்.

ஜீரோ வாட்ஸ் வெளிச்சம் கொட்டும் இருட்டான மேஜைகள். ஹாலின் மையத்தில் உயரமாய் போட்ட மேடையில் ப்ளட் லைட் வெளிச்ச வட்டத்துக்குக் கீழே ஒரு பெண். மார்பிலும் இடுப்பிலும் மிட்டாய் ரோஸ் நிறத்தில் இரண்டு ரிப்பன்களை சுற்றியிருந்தாள். கூட்டம் வந்ததும் - அதையும் அவிழ்த்தெறிய காத்திருந்தாள். விவேக்கைப் பார்த்ததும் - கண்ணடித்து 'ஹேய்... இண்டியன்...'' என்றாள். ஒரு கெட்ட சைகையை காண்பித்துவிட்டு - அவளே சிரித்துக்கொண்டாள்.

விவேக் மூலையோர மேஜைக்குப் போனான்.

போய் உட்கார்ந்ததும் - வெயிட்டர் மஞ்சள் நிற யூனிபார்மில் இருட்டில் தோன்றி பக்கத்தில் வந்தான்.

''வாட்... டூ... யூ வாண்ட்... ஸார்?'' குனிந்து கேட்டான்.

'இது இந்திய ஆங்கிலமல்லவா?'

விவேக் நிமிர்ந்து அந்த வெயிட்டரைப் பார்த்தான். பிரிட்டிஷ் சிவப்பு தவறியிருந்த முகம். விவேக் கேட்டான்.

''இண்டியன்...?''

''நோ... பாகிஸ்தானி...?''

''உன்னுடைய பெயர்...?'' ஆங்கிலத்தில் தொடர்ந்து கேட்டான்.

''அதிக் அஹமது...''

''எத்தனை வருஷமாக இங்கே இருக்கிறாய்?''

''மூன்று வருஷமாய். உங்களுக்கு என்ன வேண்டும்...?''

''ஸ்ட்ராங்போ... ஒரு பெக்...''

அவன் நகர்ந்தான். விவேக் சுற்றும் முற்றும் பார்த்தான். அந்த மேடைப் பெண் ட்ரம் இசைக்கு தகுந்த மாதிரி இடுப்பை ஆட்டிக் கொண்டிருந்தாள். ரிப்பன்கள் அவிழ்ந்துவிடும் அபாயத்தில் இருந்தது. அவளுக்கு முன்புறமிருந்த மேஜைகளில் நான்கைந்து இளைஞர்கள் உட்கார்ந்து - சிரித்து அவள் மேல் சிகரெட் புகையை ஊதிக்கொண்டிருந்தார்கள்.

பாகிஸ்தானி வெயிட்டர் ஸ்ட்ராங்போவோடு வந்தான். கண்ணாடி டம்ளரையும் ஐஸ் பாக்ஸையும் வைத்துவிட்டு நகர முயன்றவனை விவேக் நிறுத்தினான்.

''ஒரு நிமிஷம்...''

அவன் நின்று ''எஸ்'' என்றான்.

''நீ பாகிஸ்தானி என்பதால் - அண்டை நாட்டவன் என்கிற உரிமையோடு ஒரு உதவி கேட்கலாமா...?''

''என்ன...?''

''நான் இந்த ஹெர்போர்ட்டுக்கு ஒரு நண்பனைத் தேடி வந்தேன்... அவனும் ஒரு இந்தியன்தான். பெயர் அஷோக். சைடர் பாக்டரி ஒன்றில் வேலை செய்கிறான்... அந்த பாக்டரி பெயரை மறந்துவிட்டேன்...''

அவன் சொல்லச் சொல்ல - பாகிஸ்தானி சிரித்தான். ''சைடர் பாக்டரி பெயரை மறந்துவிட்டீர்களா...? சரிதான்...''

''பாக்டரியின் முதல் நான்கெழுத்து பெயர் மட்டும் தெரியும்...''

''என்ன...?''

"NELS"

பாகிஸ்தானி கன்னத்தை தேய்த்துக்கொண்டே யோசித்தான். ''நெல்ஸ்... இந்த எழுத்துக்களில் ஆரம்பமாகும் சைடர் பாக்டரி இங்கு இல்லையே...?''

''அவசரமில்லை... யோசித்துச் சொல்...'' கோட்டுப் பையிலிருந்து ஐம்பது பவுண்ட் ரூபாய் நோட்டுகளை எடுத்து பாகிஸ்தானி கையில் திணிக்க - அவன் அவசர அவசரமாய் பற்களைக் காட்டினான். ''தேங்க்யூ ஸார்... உங்களுக்கு வேண்டிய தகவலோடு இரண்டு நிமிஷத்தில் வருகிறேன்...''

சொன்னமாதிரியே இரண்டு நிமிஷங்களில் - இன்னொரு வெயிட்டரோடு வந்தான். பழுப்புத்தலை ஆங்கிலேயன். பச்சை கண்கள்.

''ஸார்... இவன் ஒரு புதுத் தகவல் சொல்கிறான்...''

''என்ன...?''

''சொல்வதற்கு முன்னால் பணம் எதிர்பார்கிறான்.''

விவேக் கோட் பாக்கெட்டில் கையை நுழைத்து - ஐம்பது பவுண்ட் ரூபாய் நோட்டுகளை எடுத்து அந்த ஆங்கிலேயனின் கையில் திணித்தான்.

''சொல்லு...''

அவன் ரூபாய் நோட்டுக்களை பின் பாக்கெட்டில் சொருகிக் கொண்டே வேகமான ஆங்கிலத்தில் சொன்னான். ''நீங்கள் தேடி வந்த சைடர் பாக்டரி NEL SCOT சைடர் பாக்டரி. இரண்டு மாதங்களுக்கு முன்னால் புதிதாய் உருவான பேக்டரி. அதன் உரிமையாளரான நெல்சன் ஸ்காட்லாந்தை சேர்ந்தவர். அதனால் தன் பெயரில் பாதியும் - நாட்டின் பெயரில் பாதியும் சேர்த்து நெல் ஸ்காட் என்று பேக்டரிக்கு பெயர் வைத்தார்.''

''பேக்டரி எங்கே இருக்கிறது...?''

''மெட்ரோஹாம் ரோட்டில்...''

''அது எங்கே இருக்கிறது...?''

''இங்கிருந்து மேற்காக ஒரு கிலோ மீட்டர் தூரம் போக வேண்டும்... கோச் வண்டிகள் நிறைய இருக்கின்றன. ஒரு பவுண்ட் கொடுத்தால் போதும்... பேக்டரி வாசலிலேயே போய் இறங்கி கொள்ளலாம்.''

''தாங்க்யூ...'' விவேக் நாற்காலியை விட்டு எழுந்தான்.

''ஸார்... ஸ்ட்ராங்போ... சாப்பிடவில்லை?''

''எனக்கு வேண்டாம்... நீயே சாப்பிடு... நண்பனை பார்க்கப் போகிற சந்தோஷம் எனக்கு...'' சொல்லிக்கொண்டே விவேக் வாசலை நோக்கி போக - மேடையில் ஆடிக்கொண்டிருந்த பெண் - அவனை விசிலடித்து கூப்பிட்டாள். ''ஹேய்... இண்டியன்... ஹேண்ட்சம்... இந்த ரிப்பன்களை அவிழ்த்து விட்டுப்போ...''

விவேக் கண்டுகொள்ளாமல் - வெளியே வந்தான். தெரு பூராவும் ஆங்கிலேய ஜனம் ஜே... ஜே... என்று போய்க்கொண் டிருந்தார்கள். ப்ளோராஸெண்ட் வெளிச்சங்களுக்கு கீழே காலியான கோச் வண்டிகள் காத்திருந்தன.

ஒரு கோச்சை - வாடகை பேசி அமர்த்திக்கொண்டு நெல்ஸ்காட் சைடர் பாக்டரியை நோக்கிப் புறப்பட்டான் விவேக்.

கோச்சில் போகப் போக -

அந்த மேற்கு திசை ரோடு - ஆள் நடமாட்டம் இல்லாமல் - நெருக்கமாய் வீடுகள் இல்லாமல் - வெறிச்சோடிப் போயிருப்பதை உணர்ந்தான் விவேக். கோட்டுப் பாக்கெட்டில் இருந்த பிஸ்டலை ஒருமுறை தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

ஏறக்குறைய பதினைந்து நிமிஷப் பயணம்.

கோச் அந்த சிதிலமான காம்பௌண்ட் கேட்டுக்கு முன்னால் நின்றது. கோச்சோட்டி சொன்னான். ''இதுதான் நீங்கள் இறங்க வேண்டிய இடம்...''

விவேக் இறங்கினான்.

சுற்றுப்புறம் பூராவும் இருட்டு.

புளித்த ஆப்பிள் வாசம்.

தொலைவில் எங்கோ 'மினுக் மினுக்'கென்று எரியும் விளக்குகள். கோச்சோட்டியை அனுப்பிவிட்டு - காம்பௌண்ட் கேட் அருகே வந்தான்.

போர்டு தெரிந்தது. நெல்ஸ்காட் பேக்டரி.

.....

# 15

தங்க முலாம் பூசிய இருபது கிலோ இரும்புத்துண்டுகளை சூட்கேஸில் நிரப்பி - அதை லாக்செய்து சுவரோரமாய் வைத்தார் ஆர்தர்.

எதிரே கானர்ஸ் நின்று கொண்டிருந்தார். ''பழைய குற்றவாளிகளில் யாருடைய குரலிலும் - அந்த டெலிபோன் ஒத்து போகவில்லை ஸார்...''

''நோ... பிராப்ளம்... லண்டனில் ஊடுருவியிருக்கும் புதிய ஆசாமிகள் இவர்கள். கேரனை பால்ஹாம் போலீஸ் ஸ்டேஷனி லிருந்து கூட்டி வர ஏற்பாடு பண்ணிவிட்டீர்களா கானர்ஸ்...?''

''பண்ணியாயிற்று...''

''குட்...''

''அவளுடைய கார்...?''

''ஸ்டேஷனின் பின்பக்கம் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கேன்...''

''எல்லாமே தயார் நிலையில் இருக்கிறது. ஹெர்போர்ட் போன விவேக்கிடமிருந்து எந்த தகவலும் வரவில்லையே...?''

''நான் வேண்டுமானால் போய் பார்க்கட்டுமா...?''

''வேண்டாம்... கானர்ஸ்... கேரனைப் பின்தொடர வேண்டிய பணி உங்களுக்கு இருக்கிறது.''

''கேரனை நாம் பின்தொடர்வதாகத் தெரிந்தால் - அவர்கள் ஆத்மராமைக் கொன்று விடுவதாக சொல்லியிருக்கிறார்களே...?''

ஆர்தர் சிரித்தார்.

''ஆத்மராம் பொன் முட்டையிடும் வாத்து என்பது அவர்களுக்குத் தெரியும். அவ்வளவு சீக்கிரத்தில் கொன்றுவிட மாட்டார்கள். மேலும் கேரனை நீங்கள் பின் தொடர்வது அவர்களுக்குத் தெரியப்போவதில்லை.

''எப்படி ஸார்...?''

ஆர்தர் கண்ணாடிக் கதவு சாத்தியிருக்கிறதா வென்று - ஒரு முறை பார்த்துவிட்டு - மெல்லிய குரலில் சொன்னார்.

அவர் சொன்னதைக் கேட்டு - ஆச்சர்யமானார் கானர்ஸ்.

.....

# 16

நெல்ஸ்காட் பாக்டரியின் காம்பௌண்ட் கேட் திறந்திருக்க - அதற்குள் நுழைந்தான் விவேக். காம்பௌண்ட் கேட்டிலிருந்து ஐம்பதடி தூரம் தள்ளி - இருட்டில் ஒரு கட்டிடம் தெரிந்தது. கட்டிடத்தின் முகப்பு வாசலில் கார் ஒன்று நின்றிருந்தது.

விவேக் இருட்டில் - கொஞ்சம் தடுமாறிக்கொண்டு - அந்த கட்டிடத்தை நோக்கி நடந்தான்.

''ஹூ... ஈஸ்... தட்...?''

திடும்மென்று ஒரு குரல் - காம்பௌண்ட் கேட்டின் இடது பக்கத்திலிருந்து கேட்டது. குரலைத் தொடர்ந்து ஒரு டார்ச் லைட்டின் பளீர் வெளிச்சம் முகத்தின்மேல் வந்து விழுந்தது. விவேக் அப்படியே நின்றான். பித்தளை பட்டன்களின் பளபளப்போடு - காக்கியூனிபார்ம் அணிந்த அந்த செண்ட்ரி கார்டு கண்ணில் பட்டார். கன்னச் சதைகள் ஆடும் பெரிய முகம்.

''ஹூ... ஈஸ்... தட்?''

குரல் மறுபடியும் கேட்டது.

விவேக் ஆங்கிலத்தில் பேசினான். ''நான் போலீஸ்... ஸ்காட்லாண்ட் யார்டினால் அனுப்பப்பட்டவன்... மிஸ்டர் நெல்சனை நான் பார்க்க வேண்டும்...''

செண்ட்ரி கார்டு கொஞ்சம் தளர்ந்தான்.

''ஐடெண்டிடை கார்டு வைத்திருக்கிறீர்களா...?''

விவேக் டார்ச் வெளிச்சத்தில் தன் போலீஸ் அட்டையை எடுத்துக் காட்டினான். அதை வாங்கி பார்த்த செண்ட்ரி மெல்லிய குரலில் கேட்டான்.

''நீங்கள் என்ன விஷயமாய் மிஸ்டர் நெல்சனை பார்க்க வேண்டும்?''

''ஒரு விசாரணை...''

''நேரே போங்கள். கார் நிற்கிற இடத்தில்தான் அவருடைய அறை. வீட்டுக்குக் கிளம்புகிற நேரம்... சீக்கிரம் போங்கள்...''

அவன் சுட்டிக் காட்டிய திசையில் - விவேக் நடந்தான். மண்பாதை. மண்பாதையின் இரண்டு பக்கத்திலும் காய்ந்த சாகா கோரைப் புற்கள். கிச் கிச் என்று ஏதோ வண்டு சத்தங்கள்.

நின்றிருந்த கண்டேஸா கார்க்குப் பக்கத்தில் - மெலிதான வெளிச்சத்தோடு அந்த அறை தெரிய - அதை நோக்கிப் போனான் விவேக். புளித்த ஆப்பிள் ஜூஸின் நெடி இப்பொழுது சுவாசத்தையே அடைக்கிற மாதிரி இருந்தது.

அறையை நெருங்கி - சாத்தியிருந்த ப்ளஷ்டோரை மெல்ல சத்தப்படுத்தி தட்டினான். உள்ளேயிருந்து குரல் வந்தது.

''எஸ்... கம்... இன்...''

விவேக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான். பாக்ஸ் லைட் ஒன்று வெளிச்சத்தைப் பரப்பிக்கொண்டிருக்க - அந்தச் சிறிய அறை மேஜையில் உட்கார்ந்து - பைல்களை பரப்பி வைத்துக்கொண்டு எதையோ சரி பார்த்துக்கொண்டிருந்தார் அந்த நடுத்தர வயது ஆசாமி.

சிவப்பான - சதைப்பிடிப்பான உருண்டைமுகம். தலையில் 'யூ' வழுக்கை. கண்களில் சதுரக் கண்ணாடி. மேலுதட்டின் மேல் குப்பலாய் மீசை. மார்பில் வெஸ்ட் கோட். விவேக்கை பார்த்ததும் - திடும்மென்று எழுந்து - பிரெஞ்சு மொழியில் ''யார் வேண்டும்?'' என்று கேட்டான்.

''மிஸ்டர் நெல்சன்?''

''மை செல்ப்...''

''நான் உங்களைத்தான் பார்க்க வந்தேன்...'' ஆங்கிலத்தில் ஆரம்பித்தான் விவேக்.

''நீங்கள் யார்...?'' நெல்சன் நாற்காலியைக் காட்டிக்கொண்டே கேட்டார்.

''நான் விவேக்... க்ரைம் பிராஞ்ச்... ;ஸகாட்லாண்ட் யார்டின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன்...''

''என்ன விஷயம்...?''

''உங்களிடம் சின்ன விசாரணை...''

''எதைப்பற்றி...?''

''இந்த சைடர் பாக்டரிக்கு நீங்கள்தான் ப்ரொப்ரைட்டரா...?''

''ஆமாம்...''

மேஜை மேலிருந்த டெலிபோனைப் பார்த்துக்கொண்டே விவேக் கேட்டான். ''உங்களுக்கு டெலிபோன் இருக்கிறது. ஆனால் உங்கள் டெலிபோன் நெம்பரும் - அட்ரஸும் டைரக்டரியில் இல்லையே...?''

நெல்சன் புன்னகைத்தார். ''இருக்கிறது. ஆனால் நெல்ஸ்காட் பெயரில் போன் இருக்காது. இதற்கு முன்னால் இங்கே சாக் - பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை இருந்தது. இந்த பாக்டரி விலைக்கு வந்தபோது - நான் டெலிபோனையும் வாங்கிக்கொண்டேன். ரெயின்போ சாக்-பவுடர் கம்பெனி என்கிற பெயர்தான் டைரக்டரியில் இருக்கும்... நெல்ஸ்காட் பெயர்க்கு டெலிபோனை மாற்றச்சொல்லி - விண்ணப்பம் கொடுத்துள்ளேன்...''

''மிஸ்டர் நெல்சன்...''

''எஸ்...''

''உங்களிடமிருந்து சில உண்மையான தகவல்களை எதிர்பார்க்கிறேன்...''

''கேளுங்கள்...''

''உங்கள் பாக்டரியில் ஸ்ட்ராங்போ ஜூஸ் தயாரிக்கப்படுகிறதா...?''

''ஆமாம்...''

''யார் யார்க்கெல்லாம் சப்ளை செய்கிறீர்கள்?''

''இரண்டே இரண்டு பார்ட்டிக்கு மட்டும்...''

''பார்ட்டி யாரென்று சொல்ல முடியுமா...?''

''எதற்கு...?''

''கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள் மிஸ்டர் நெல்சன்... உங்கள் சந்தேகங்களுக்கு பிறகு நான் பதில் சொல்கிறேன்...''

நெல்சன் சொன்னார். ''இரண்டு பார்ட்டியில் ஒரு பார்ட்டியின் பெயர் ஸ்கை கோயர் சைடர் பாக்டரி... இன்னொரு பார்ட்டியின் பெயர் ஹெவன்லி டச்...''

''அந்த இரண்டு பார்ட்டிகளின் லெட்டர்ஹெட் தாளை நான் பார்க்க வேண்டும்... எடுத்துத் தருகிறீர்களா?''

''அவர்கள் ஏதாவது தப்பு செய்துவிட்டார்களா...?''

''அவர்கள் தப்பு செய்தார்களா... இல்லையா என்பதை... அந்த லெட்டர்ஹெட் தாள்களைப் பார்த்துத்தான் நான் சொல்ல வேண்டும்...''

நெல்சன் தன் சுழற்நாற்காலியில் சுழன்று - ஷெல்ப்பில் இருந்த பைலை உருவினார். டேக்கை அவிழ்த்து - பைலைப் புரட்டி - இரண்டு தாள்களை எடுத்து மேஜையின் மேல் போட்டார். விவேக் அதை எடுத்தான்.

பார்த்த மாத்திரத்திலேயே - ஸ்கைகோயர் லெட்டர் ஹெட் தாள் மனசை நிரடியது. விவேக் அதை எடுத்தான். தன் கோட் பாக்கெட்டிலிருந்த லெட்டர்தாளை உருவி அதனோடு ஒப்பிட்டான்.

துல்லியமாய் பொருந்தியது.

மிரட்டல் கடிதத்தில் அட்ரஸை மாத்திரம் கிழித்திருந்தார்கள்.

''மிஸ்டர் நெல்சன்...''

''எஸ்...''

''சமீபத்தில் இந்தக் கம்பெனியிடமிருந்து 96 வாட்ஸ் ஸ்ட்ராங்போ ஆப்பிள் ஜூஸுக்கு ஆர்டர் வந்ததா?...''

''ஆமாம்...''

''அந்த ஆர்டர் காப்பி உங்களிடம் இருக்கிறதா...?''

''இருக்கிறதே...''

''ப்ளீஸ் கொடுங்கள்...''

மேஜை டிராயரை இழுத்து - உள்ளே கையை நுழைத்து வெளியே எடுத்தார் நெல்சன்.

வலது கையின் ஐந்து விரல்களில் -

வசதியாய் உட்கார்ந்தபடி - அந்த பிஸ்டல் தெரிந்தது.

# 17

சூப்ரின்டெண்டண்ட் ஆர்தரும் இன்ஸ்பெக்டர் கானர்ஸும் - தங்களுக்கு எதிரே நின்றிருந்த கேரனைப் பார்த்தார்கள். அவள் அலட்சியமாய் உதட்டை சுழித்தபடி நின்றிருந்தாள்.

ஆர்தர் சொன்னார்.

''கேரன்! நீ சரியாய் பத்து மணிக்கு காரில் புறப்பட்டு போகிறாய். உன்னுடைய கூட்டாளிகள் கேட்ட தங்கம் காரின் டிக்கியில் வைக்கப்பட்டிருக்கும்... ஸ்காலர் ஆத்மராமை பத்திரமாய் எங்களிடம் கொண்டுவந்து சேர்ப்பிப்பது... உன்னுடைய பொறுப்பு...''

கேரன் சிரித்தாள். ''அவர்கள் நியாயமானவர்கள்... ஆத்மராம் சுண்டு விரல் சேதமாகாமல் வந்து சேருவார்...''

''உன்னுடைய கோஷ்டியில் மொத்தம் எத்தனைபேர்...?''

''நான் பதில் சொல்லக்கூடாத கேள்வி...''

''சரி... உன் கோட்டையில் இப்போது கொடி பறக்கிறது. இந்த ரவுண்டில் உன்னுடைய கோஷ்டி ஜெயிக்கலாம்... ஆனால் கடைசி ரவுண்டில் நாங்கள்தான் ஜெயிப்போம்.''

கேரன் ஆர்தரின் பேச்சை லட்சியம் பண்ணாமல் ''எனக்கு கொஞ்சம் கறுப்பு காப்பி கிடைக்குமா...? தலையை வலிக்கிறது'' என்றாள்.

''லாக்கப்புக்கு... போ... கறுப்புக் காப்பி கிடைக்கச் செய்கிறேன்...''

அவள் அறையை விட்டு நகர்ந்தாள். அவள் நகர்ந்து போனதும் ஆர்தர் கெட்ட வார்த்தையில் திட்டினார். ''வேசிப் பெண் பன்றிக்கு என்ன திமிர் பார்த்தீர்களா கானர்ஸ்? தலைவலிக்கு கறுப்புக் காப்பி கேட்கிறாள்.''

''அவளுக்கு இது நேரம்...''

''கானர்ஸ்... நீங்கள் செயல்படுவதில்தான் எல்லாம் இருக்கிறது.''

''ஸார்... உங்களுடைய திட்டப்படி நான் கேரனின் கார் டிக்கிக்குள் அரைமணி நேரத்துக்கு முன்பே அடைபட வேண்டும் இல்லையா...?''

''ஆமாம்...''

''டிக்கிக்குள் நான் இருப்பது எதிரிகளுக்கு தெரிந்து விட்டால்...?''

''தெரிகிற மாதிரியா நீங்கள் டிக்கிக்குள் அடைப்படப் போகிறீர்கள்? சரியாய் ஒன்பதரை மணிக்கு கார் கஸ்டம்ஸ் அலுவலகத்திற்குள் போகும்... அங்கேதான் நீங்கள் அடைபடுவீர்கள்...''

''கேரன் சந்தேகப்பட மாட்டாளா...?''

''அவள் சந்தேகப்படாதபடி போலீஸ் நடவடிக்கைகள் அமையும்...''

''சைடர் பாக்டரியைத் தேடிக்கொண்டு போன விவேக் என்ன ஆனார்...! அவரிடமிருந்து போன் வரும் என்று சொன்னீர்கள்...''

''அதைத்தான்... நானும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்...'' ஆர்தர் சொல்லி வாயை மூடவில்லை. டெலிபோன் கூப்பிட்டது.

ரிஸீவரை எடுத்தார். ''ஹலோ...''

''ஆர்தர்...?''

''எஸ்...''

''உங்களோடு... ஏற்கெனவே தொடர்புகொண்ட நான்கு பேர்களில் ஒருவன் பேசுகிறேன்... இந்த டெலிபோன் லைன் நாங்களே உருவாக்கிக்கொண்டது. கேபினில் இருந்து கம்பியை நீட்டி இணைப்பை ஏற்படுத்திக் கொண்டோம்... ஒவ்வொரு டெலிபோன் பூத்திலும் யூனிபார்ம் தரிக்காத ஸ்காட் போலீஸ் கழுகுக் கண்களோடு காத்திருக்கும்போது நாங்கள் வேறு என்னதான் செய்ய முடியும்...?''

ஆர்தர் எரிச்சலானார்.

''என்ன விஷயம்...?''

''தங்கம் ரெடியா...?''

''ரெடி...''

''இரும்பு துண்டுகளுக்கு தங்கமுலாம் பூசி - சூட்கேஸில் அடைத்து வைத்திருக்கிற அந்த சமாச்சாரம் எங்களுக்கு வேண்டாம் சூப்ரின்டெண்டண்ட் சார்...''

ஆர்தர் அதிர்ந்தார்.

''என்ன சொல்கிறீர்கள்... இரும்புத் துண்டா...?''

''இந்த நடிப்பெல்லாம் வேண்டாம்... ஸார்... எங்களுக்கு வேண்டியது கஸ்டம்ஸில் உள்ள உண்மையான தங்கம்...! எங்களை நீங்கள் ஏமாற்ற முடியாது...''

ஆர்தர் வியர்த்துப் போய் பேச்சு வராமல் திணறினார். டெலிபோனில் குரல் தொடர்ந்தது... ''அப்புறம்... இன்னொரு விஷயம்... காரில் கேரன் மட்டும்தான் இருக்க வேண்டும். இன்ஸ்பெக்டர் கானர்ஸை டிக்கியில் அடைத்து அனுப்புகிற வேலையெல்லாம் வேண்டாம்... நீங்கள் எங்களை ஏமாற்ற நினைத்தால் நீங்கள்தான் ஏமாந்து போவீர்கள்... ஆத்மராம் உங்களுக்கு உயிரோடு வேண்டுமென்றால் உண்மையாக செயல்படுங்கள்.''

''கேரனோடு யாரும் வர மாட்டார்கள்...'' - நெற்றி வியர்வையை ஒற்றினார் ஆர்தர்.

''தட்ஸ் குட்... நிஜ தங்கம்...?''

''அனுப்பி விடுகிறோம்...''

''குட்... குட்... அப்புறம் ஒரு சின்ன உதவி... கேரனை பேசச் சொல்லுங்கள். கேரன் பேசும்போது - நீங்களோ மற்றவர்களோ... வேறு டெலிபோன்களில் ஒட்டு கேட்கக் கூடாது...''

''கேட்கவில்லை...''

''உடனே கேரனை பேசச் சொல்லுங்கள்...''

ஆர்தர் இருண்ட முகத்தோடு - கானர்ஸிடம் விஷயத்தைச் சொல்ல - கானர்ஸ் சென்று கேரனைக் கூட்டிக்கொண்டு வந்தார்.

தன் பழுப்பு தலைமுடியை இரண்டு கைகளாலும் கோதிக் கொண்டே வந்த கேரன், ஆர்தர் கையிலிருந்த ரிஸீவரை அலட்சியமாய் வாங்கி ''ஹலோ'' என்றாள். ஆரம்பத்தில் 'உம்' கொட்டியவள் - தொடர்ந்து - சில சங்கேத வார்த்தைகளை உபயோகப்படுத்தி - அரை நிமிஷ நேரம் பேசிவிட்டு ரிஸீவரை த்த்தட்டென்று சாத்தினாள்.

ஆர்தரிடம் திரும்பினாள். உதட்டைச் சுழித்தாள்.

''கறுப்புக் காப்பி கேட்டேனே...?''

கேரனை சில விநாடி முறைத்துவிட்டு - ''அனுப்புகிறேன்...''

எரிச்சலில் கத்தினார் ஆர்தர். கேரன் அலட்சியமாய் கூந்தலைக் கோதிக்கொண்டு நடந்து - அறையை விட்டு வெளியேறினாள். அவள் வெளியேறினதும் - ஆர்தர் சைகையினால் - கானர்ஸை கதவைச் சாத்திவிட்டு வரச்சொன்னார்.

அவர் கதவை சாத்திவிட்டு வருவதற்குள் ஆர்தர் ஒரு வெள்ளை பேப்பரில் அந்த அவசர செய்தியை எழுதியிருந்தார்.

கானர்ஸை படிக்கும்படி சைகை செய்தார்.

கானர்ஸ் அந்தத் தாளிலிருந்த வாசகங்களைப் பார்த்தார்.

'நாம் இருக்கும் இந்த அறையில் - யாராலோ மைக்ரோ ரிஸீவர் பொருத்தப்பட்டுள்ளது. நாம் பேசுகிற விஷயம் - உடனுக்குடன் எதிரிகளுக்கு தெரிகிறது. 'டிவைஸ் டிடெக்டர்' கொண்டு வரச் செய்து - அதை கண்டு பிடிக்க வேண்டும். இது ரகசியமாக இருக்கட்டும்.'

கானர்ஸ் தலையசைத்து விட்டு - கதவைத் திறந்துகொண்டு வெளியே போனார். ஐந்து நிமிஷம் கழித்து - ட்ரான்ஸிஸ்டர் மாதிரியான அமைப்பில் இருந்த டிவைஸ் டிரெக்டரோடு வந்தார்.

ஒருத்தரோடு ஒருத்தர் பேசிக்கொள்ளாமல் - காரியத்தை ஆரம்பித்தார்கள். டிவைஸ் டிரெக்டரை அறையின் ஒவ்வொரு சதுர அடி பரப்பிலும் நிறுத்தி நிறுத்தி நகர்த்திக் கொண்டு போனார்கள்.

ஏறக்குறைய -

பதினைந்து நிஷம் கழித்து அந்த மர பீரோ அருகே வந்ததும் - டிவைஸ் டிடெக்டரின் முள் வேகமாய் ஆடியது.

ஆர்தரும் - கானர்ஸும் உஷாராகி - ஒரு மூச்சு சத்தம் காட்டாமல் பீரோவைத் தடவி - அதன் முதுகில் ஸ்டிக்கர் மாதிரி ஒட்டி வைக்கப்பட்டிருந்த - அந்த சிறிய மைக்ரோ ரிஸீவரை - கர்ச்சீப்பால் அழுத்தி எடுத்தார்கள்.

கானர்ஸ் அதை எடுத்துக்கொண்டு வெளியே போக - ஆர்தர் வாசலில் காவலிருந்த அந்த செண்ட்ரி போலீஸைக் கூப்பிட்டார்.

கான்ஸ்டபிள் விறைப்பாய் வந்து நின்றதும் கேட்டார்.

''காலையிலிருந்து - ஸ்டேஷனுக்குள் வந்த அந்நியர்கள் யார் - யாரென்று சொல்ல முடியுமா?''

கான்ஸ்டபிள் தன் பாக்கெட்டிலிருந்த - சிறிய நோட்புக்கை எடுத்து - பிரித்து வைத்துக்கொண்டு பார்த்தான்.

காலை 7.00 மணி லாயர் ஸ்டீப்ரோ.

காலை 9.30 மணி இன்ஸ்பெக்டர் வாட்ஸன்.

காலை 11.40 மணி லாயர் ரைடர்.

மதியம் 1.15 மணி இந்திய தூதர் - வித் - ட்ரைவர் ஹெட்டிக்.

மதியம் 3.20 மணி விசாரணைக் கைதி கேரன்.

கான்ஸ்டபிள் - பெயர்களை படித்துக்கொண்டே போக - ஆர்தர் தன் கொழுவிய மோவாயை - அழுத்தமாய் தேய்த்துக் கொண்டே யோசித்தார்.

.....

# 18

நெல்ஸனின் கையில் உட்கார்ந்திருந்த பிஸ்டலைப் பார்த்ததும் - ஒரு விநாடி திடுக்கிட்டுப் போன விவேக் அடுத்த விநாடியே - புன்னகைத்தான்.

''பிஸ்டல் புதுமாதிரியாய் இருக்கிறதே... ஜப்பான் மேக்கா...?''

''கெட் அப்... ஐ... ஸே...'' நெல்ஸன் உறுமினார்.

விவேக் எழுந்தான்.

''ஹேண்ட்ஸ் அப்... அண்ட் டோண்ட் மூவ்...

விவேக் கைகளை உயர்த்தினான். அசையாமல் நின்றான். நெல்ஸன் கொஞ்சம் கொஞ்சமாய் - விவேக்கை நெருங்கி - அவன் மார்புக்கு துப்பாக்கியைக் காட்டிக்கொண்டே கோட்டு பாக்கெட்டில் கையை நுழைத்து - பிஸ்டலை எடுத்துக்கொண்டார். சிரித்தார்.

''இந்திய நாய்களுக்கு மோப்பசக்தி அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்... அது நிஜம் என்பதை இன்றுதான் புரிந்துகொண்டேன்.''

''அது வாஸ்தவந்தான். பிரிட்டிஷ் திருடர்களை இந்திய நாய்கள் சீக்கிரமே கண்டுபிடித்துவிடும்...''

''அந்த இந்திய நாய் இப்போது குண்டடிபட்டு சாகப் போகிறது...'' நெல்ஸன் தன் மஞ்சளான கொட்டைப் பற்களால் சிரித்து - தன் வலது கையிலிருந்த பிஸ்டலை உயர்த்தினார். உயர்த்தியவர் மெல்ல தாழ்த்தினார்.

''என்னுடைய பிஸ்டலில் இருக்கிற தோட்டாவை வீணாக்கு வானேன்...? உன்னுடைய தற்காப்புக்காக நீ கொண்டுவந்த - உன்னுடைய பிஸ்டலினாலேயே சுடறேன்... செத்துப்போ...

விவேக்கின் பிஸ்டலை உயர்த்தினார் நெல்ஸன்.

''உன் பெயர் என்ன சொன்னாய்...? ஓ... விவேக்! ஸாரி... விவேக்... இந்த முன்னிரவு நேரத்தில் நேரப்போகிற - உன்னுடைய சாவுக்காக நான் நிரம்பவும் வருத்தப்படறேன்...''

சொல்லிக்கொண்டே - ட்டிரிக்கரை சுண்டினார்.

''ட்... ட்... டப்ப்ப்...'' என்று ஒரு சத்தம்.

அடுத்த விநாடி - நெல்ஸனின் நெஞ்சுப் பிரதேசம் ரத்தத்தில் நனைந்திருக்க, அவர் தளர்ந்து பின்னோக்கி சுருண்டார்.

விவேக் அவரருகே ஓடினான்.

அவர் கையினின்றும் சிதறி விழுந்த - இரண்டு பிஸ்டல் களையும் சுறுசுறுப்பாய் பொறுக்கிக்கொண்டான். நெஞ்சைப் பற்றிக்கொண்டு - மரண வாசலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த நெல்ஸனிடம் குனிந்தான்.

''இந்திய நாய்களுக்கு மோப்ப சக்தி மட்டும் அதிகமில்லை... நெல்ஸன். புத்திசாலித்தனமும் அதிகம். என்னோட பிஸ்டலில் ரிவர்ஸ் ஆக்ஷன் லீவர் இருக்கிறது. அந்த லீவரை ரிலீஸ் பண்ணினாத்தான் பிஸ்டல் எதிராளியைச் சுடும்... இல்லையென்றால் ட்ரிக்கரை சுண்டியவனின் மார்புக்கு தோட்டாவைத் தரும்... சில சமயங்களில் புத்திசாலியான எதிரிகள் எங்களுடைய பிஸ்டல்களை தட்டி பறித்துக்கொள்வார்கள்... அந்த மாதிரியான இக்கட்டான நேரங்களில் - பிஸ்டல் எங்களை இப்படித்தான் காப்பாற்றும் - எங்களை மாதிரியே இந்த பிஸ்டல்களும் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு நிரம்பவும் விசுவாசமானவை...''

நெல்ஸன் அடங்கிக் கொண்டிருக்க -

விவேக் டெலிபோனை அவசர கதியில் நெருங்கினான்.

ரிஸீவரை அள்ளி காதுக்குக் கொடுத்து - லிவர்பூல் போலீஸ் ஸ்டேஷனின் நெம்பர்களை நினைவுக்குக் கொண்டு வந்து டயலைச் சுழற்றினான்.

மறுமுனையில் ரிங் போய் - ரிஸீவர் எடுக்கப்பட்ட அதே விநாடி -

''ட்... ட்... டுமீல்...''

விவேக்கின் தலைக்குமேல் தோட்டா ஒன்று ராக்கெட் மாதிரி சீறிப்போக - அதிர்ச்சியில் ரிஸீவர் துள்ளி விழுந்து - டேபிளின் முனையில் ஊஞ்சலாடியது.

திரும்பினான் விவேக்.

அறை வாசலில் அந்த நான்குபேர் தெரிந்தார்கள். எல்லோருடைய இடது கைகளிலும் மேக்னம் - ஜயண்ட் ரிவால்வர்கள். மார்பில் குண்டு பாய்ந்தால் முதுகுச் சதையை அள்ளிக்கொண்டு

போகும் தோட்டாக்களை வயிற்றுக்குள் நிரப்பிக்கொண்டவை. நீளமான தொண்டையோடு கறுப்பு வாய்கள்.

நான்குபேரும் சொல்லி வைத்தமாதிரி - ஒரே விநாடியில் புன்னகைத்தார்கள். முதலாமவன் நடந்துவந்தான். சொன்னான்.

''உன்னுடைய கைகளில் இருக்கும் பிஸ்டல்களை எறிந்து விடு... விவேக்...''

விவேக் எறியாமல் - அவர்களையே முறைக்க -

இரண்டாமவன் சொன்னான்.

''ம்... கீழே... போடு...''

விவேக் பிஸ்டல்களோடு அப்படியே நின்றான்.

மூன்றாமவன் உறுமினான். ''இப்படிச் சொன்னால் நீ கேட்க மாட்டாய்'' என்று சொன்னவன் - அறைக்கு வெளியே எட்டிப் பார்த்து -

''ஹெட்டிக்...! அந்தக் கிழவனைத் தள்ளிக்கொண்டு வா...'' என்றான்.

அடுத்த விநாடி -

ஸ்காலர் ஆத்மராமைத் தள்ளிக்கொண்டு - ஹெட்டிக் உள்ளே நுழைந்தான். இடது கையில் ரிவால்வர்.

விவேக் வியப்புக்குப் போனான்.

'இவன் - இந்த - ஹெட்டிக் - இந்திய தூதரின் கார் டிரைவர் அல்லவா? இத்தனைக்கும் இவன்தானா சூத்திரதாரி...?'

.....

# 19

விவேக்கின் கைகளில் இருந்த இரண்டு பிஸ்டல்களும் தானாய் உதிர்ந்தன.

ஹெட்டிக் ஆத்மராமின் முதுகில் பிஸ்டலை திணித்திருக்க - ஆத்மராம் கலவர முகத்தோடு அழுக்காய் தெரிந்தார். கன்னங் களில் அடிபட்ட வீக்கம் தெரிந்தது.

ஹெட்டிக் இறந்து கிடந்த நெல்சனை சலனமில்லாமல் பார்த்துவிட்டு விவேக்கிடம் திரும்பினான்.

''லண்டனுக்கு வந்த நாளிலிருந்தே உனக்கு ஆயுள் கெட்டிதான். சில விநாடி வித்தியாசத்தில் நெல்சனை நாங்கள் இழந்துவிட்டோம்...''

விவேக் மெல்லிய குரலில் சொன்னான். ''ஹெட்டிக்... நான் உன்னை எதிர்பார்க்கலை... இந்திய தூதரின் டிரைவரான நீ இப்படியொரு புல்லுருவியாய் இருப்பாய் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை...''

ஹெட்டிக் சிரித்தான்.

''லண்டனில் குற்றங்கள் கொள்ளை மலிவு... விவேக்... இங்கு நேர்மையாய் சம்பாதித்தால் பணக்காரனாக முடியாது... இருபது கிலோ தங்கத்தைக் கடத்தினோம்... கஸ்டம்ஸில் எங்கள் ஆட்கள் மாட்டிக்கொண்டார்கள். போலீஸ் கண்ணில் பட்டு தப்பி வந்த எங்கள் ஆட்களை நாங்களே சுட்டுக்கொன்றோம்... அந்த தங்கத்தை மீட்க என்ன வழி என்று யோசித்தோம்... ஸ்காலர் ஆத்மராமின் வருகை எங்களுக்கு உதவியது. இந்திய தூதர் பெரிதும் என்னை நம்புகிறவர்... நான் எதிரே இருப்பதை

பொருட்படுத்தாமல் - எந்த விஷயத்தை வேண்டுமானாலும் டெலிபோனில் பேசுவார்... அப்போதுதான் நீ இந்தியாவிலிருந்து ஆத்மராமை பாதுகாக்க வரப்போவதாக அறிந்தேன். உன்னை - லண்டன் வந்து இறங்கியதுமே - மேத்யூ மூலமாய் கடத்திவந்து - தீர்த்துக்கட்ட நினைத்தேன்... தப்பித்துக்கொண்டாய். ஆத்மராமை தீர்த்துக்கட்டும் முயற்சியில் - இன்னொரு கோஷ்டி ஈடுபட - நீ அவரை காப்பாற்ற முயற்சிக்க - நான் இந்திய தூதரின் காரிலேயே - அவரை கடத்த தீர்மானித்து - புஷ்ஹெரின் செமினார் ஹாலிலிருந்து ஒரு நாடகத்தை நடத்தினேன். அந்த நாடகத்தின் ஒரேயொரு நிஜமான காட்சி ஏஞ்சலாவோட கற்பழிப்பும் மரணமும்தான்... என்னை நான்குபேர் தாக்கிவிட்டு - ஆத்மராமை ட்ரை வீலர் டயோட்டா வேனில் கடத்திப் போனதா பொய் சொன்னேன்... நீயும் ஸ்காட்லாண்ட் போலீஸும் நம்பினீங்க...''

விவேக்கிற்கு - ஹெட்டிக்கின் திட்டம் மலைப்பாய் இருந்தது.

ஹெட்டிக் தொடர்ந்தான். ''எங்களுக்கு வேண்டியது அந்த தங்கம்... அது எங்க கைக்கு வந்ததுமே - ஆத்மராம் சேதமில்லாமே - போலீஸுக்கு கிடைப்பார்... சூப்ரின்டெண்டன்ட் ஆர்தரும், இன்ஸ்பெக்டர் கானர்ஸும் எங்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். இந்திய தூதர் ஆர்தரை பார்ப்பதற்காக - லிவர்பூல் போலீஸ் ஸ்டேஷனுக்குள் சென்றபோது - நானும் உடன் போனேன். அவர்கள் குற்றவாளிகளைப் பார்ப்பதற்காக - லாக் - அப்பிற்கு போன நிமிஷத்தை பயன்படுத்திக்கொண்டு - ஸ்டிக்கிங் மைக்ரோ ரிஸீவரை - மர பீரோவின் முதுகில் பொருத்தினேன்...''

ஹெட்டிக் பேசப் பேச -

நான்கு பேரில் ஒருவன் சீறினான் ''ஹெட்டிக் அவனிடம் என்ன கதை பேசிக் கொண்டிருக்கிறாய்...? ஆரம்பத்தில் இருந்தே இவனால் பெரும் இடைஞ்சல். நம் தொழிலுக்கு வலதுகரமாய்

இருந்து கொண்டிருந்த - நெல்சன் இறக்க காரணமே இவன்தான்... சுட்டுத்தள்ளு...''

ஹெட்டிக் சிரித்தான்.

''நம் இந்திய நண்பரை அப்படியெல்லாம் சுலபமாய் செத்துப் போக விடக்கூடாது... நண்பரை சைடர் பாக்டரிக்குள் கொண்டுபோவோம்... இத்தனை நாளும் ஆப்பிள்களையே நசுக்கி சாறு கொடுத்துக்கொண்டிருந்த - க்ரஷ்ஷிங் மெஷின் ஒன்றுக்கு - இந்த இந்திய துப்பறியும் புலியின் உடம்பைக் கொடுப்போம்... எலும்புகளும், தலையும் சடசடவென்று - முறிய - உடல் உறுப்புகள் நசுங்கி - ரத்தம் பெருகி - பிளாஸ்டிக் பக்கெட்களில் நிறைவதை பார்ப்போம்...''

ஹெட்டிக் விகார இளிப்போடு சொல்ல - அந்த நான்கு பேரும் பிஸ்டல்களின் நுனிகளால் - விவேக்கைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்கள்.

ஹெட்டிக் ஆத்மராமை தள்ளிக் கொண்டு நடந்தான்.

விவேக் சுற்றும் முற்றும் பார்த்தான். மெலிதான வெளிச்சம் பரவியிருந்த - பாக்டரியின் உள்ளே சுவரோரமாய் - ஏராளமான மரக்குடுவைகள். குடுவைகளுக்குள்ளே 'பெர்மன்டேஷன்' ஆகியிருந்த ஆப்பிள் ஜூஸ் - விரும்பத்தகாத ஒரு புளித்த வாடையை வீசியது. கூர் கூரான பல் சக்கரங்களோடு ராட்சச மெஷின்கள்.

விவேக்கின் நெஞ்சில் - பனிக்கட்டியாய் -

ஒரு பய சிலிர்ப்பு.

ஹோட்டலில் தனக்காக காத்திருக்கும் ரூபலாவின் ஞாபகம் வந்தது.

'எப்படி தப்பிக்கப் போகிறேன்?'

'முதுகுக்குப் பின்னால் - நான்குபேரும் ஒரு சின்ன சுவர் மாதிரி - கைகளில் பிஸ்டலோடு வருகிறார்கள்.'

'ஓட முடியாது.'

'நிச்சயமாய் ஓடி தப்பிக்க முடியாது.'

யோசனையாய் நடந்து கொண்டிருக்கும்போதே - ஹெட்டிக் குரல் கொடுத்தான். ''நம்ம நண்பரை இந்த மாக்னிபீஷியண்ட் க்ரஷ்ஷிங் மெஷினிலேயே சாறு பிழிவோம்.''

எல்லோரும் நின்றார்கள்.

ராட்சஷ மெஷினின் - பெரிய இரும்பு உருளைகளுக்கு மத்தியில் ஆப்பிள் பழ சக்கைகள் மெல்லிய வெளிச்சத்தில் தெரிந்தன.

விவேக் பார்வையை மெல்ல ஓட்டினான்.

பத்தடி தள்ளி -

இருட்டு கொஞ்சம் அடர்த்தியாய் தெரிய - அந்த இருட்டில் நிறைய மரக் குடுவைகள் ஆறடி உயரத்தில் அணிவகுத்திருந்தன.

விவேக்கின் மூளை நரம்பில் - ஒன்று -

'அந்த இருட்டுக்கு ஓடு' என்று சொல்ல -

பாய்ந்தான்.

ஒரு மரக்குடுவைக்குப் பின்னால் போய் - தொப்பென்று விழுந்து உருண்டு போக - துப்பாக்கி தோட்டா ஒன்று மரக்குடுவையை பதம் பார்த்தது.

''சுடுங்கள்'' ஹெட்டிக் அசுரக் கத்தல் போட்டான்.

நான்கு பேரும் தபதபவென்று ஓடிவந்தார்கள்.

விவேக் அடுத்த குடுவையின் மறைவுக்கு பாய்ந்தான்.

துப்பாக்கி தோட்டா ஒன்று அவன் தலைக்கு மேலே - ஆறங்குல உயரத்தில் - 'சிரஞ்சீவி பவ' என்று வாழ்த்திக் கொண்டே போயிற்று.

'இது வீணாகிப் போன ரெண்டாவது தோட்டா.'

விவேக் கணக்கு போட்டான்.

ஐந்து பேரிடமும் ஐந்து பிஸ்டல் இருக்கிறது. ஒரு பிஸ்டலுக்கு ஆறு தோட்டா. மொத்தம் முப்பது தோட்டாக்கள். இரண்டுக்கு ஆயுள் முடிந்துவிட்டது.

இருப்பது இருபத்தெட்டு தோட்டாக்கள்.

சீக்கிரமே வீணாக்க வேண்டும்.

குடுவைகளுக்கு மத்தியில் - ஒரு நிமிஷம் மறைந்து - அடுத்த நிமிஷம் இன்னொரு குடுவைக்கு தாவினான்.

''ட்டுமீல்...?

குண்டடி வாங்கி குடுவைகள் - ஆப்பிள் ஜூஸாய் கண்ணீர் விட்டன. புளித்த வாசம் மூக்கை அடைத்தது.

ஹெட்டிக் கத்திக் கொண்டிருந்தான்.

''அவனை விடாதீர்கள்... சுட்டுத்தள்ளுங்கள்...''

கைகளில் - பிஸ்டல்களோடு - நான்கு பேர்களும் -புயலாய் மூச்சிறைத்துக்கொண்டு ஓடி வர - வந்தவர்களில் ஒருவன் ஆப்பிள் ரசத்தில் காலை வைத்து - சர்ர்ர்ரென்று வழுக்கி - நிற்க முயன்று முடியாமல் -

தலைகுப்புற விழுந்தான். மண்டையில் அபார ரத்தப்பெருக்கு.

அவன் கையில் இருந்த - பிஸ்டல் எகிறி விழுந்து - தரையில் நீந்தி - 'இந்தா... எடுத்துக்கோ' என்கிற தினுசில் மரக்குடுவைக்குப் பின்னால் ஒளிந்திருந்த விவேக்கிற்கு அருகே வந்து வேகம் குறைந்து நின்றது.

விவேக் அள்ளிக்கொண்டான்.

ஓடி வருகிற மூன்று பேர்களில் - ஒருவனின் முழங்காலுக்கு தோட்டாவை சம்பந்தம் பேசி அனுப்பினான்.

''ட்டுமீல்...''

ப்ரெஞ்சு மொழியில் அம்மாவை கூப்பிட்டுக்கொண்டே விழுந்தான்.

ஓடிவந்து கொண்டிருந்த மீதி இரண்டுபேர் பயமாய் அப்படியே நின்றார்கள். ஒருத்தருக்கொருத்தர் எச்சரித்துக் கொண்டார்கள்.

விவேக் மறுபடியும் பாய்ச்சல் காட்டி - ஒரு மரக்குடுவைக்குப் பின்னால் போய் விழுந்தான். இப்போது இரண்டு பேரில் ஒருவன் பார்வைக்கு கிடைக்க - அவனுடைய முழங்காலுக்கு ஒரு தோட்டாவை அனுப்பி வைத்தான்.

அவன் போட்ட அலறல் பாக்டரியையே கலக்கியது.

எஞ்சிய நாலாவது பேர்வழி - பயத்தோடு பின்வாங்கி - மெதுவாய் ஹெட்டிக் இருந்த பக்கமாய் ஓட விவேக் அவனுடைய கெண்டைக்கால் பகுதிக்கு மூன்றாவது தோட்டாவை அனுப்பினான். ''ட்டுமீல்...''

அவன் இருட்டில் மல்லாந்து விழுவது தெரிந்தது.

விவேக் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

சின்னச் சின்ன முனகல் சத்தம்; மூச்சிறைக்கும் சத்தம் தவிர - மற்றபடி எந்த சத்தமும் இல்லாத பாக்டரியில் - விநாடிகள் நொண்டின. விவேக்கின் இருதயம் பி.டி. உஷாவாய் மாறியது.

நிசப்தம். பாக்டரி முழுக்க நிசப்தம்.

'ஹெட்டிக் என்ன செய்கிறான்?' - 'முன்னால் போய் பார்க்கலாமா?' மனசுக்குள் தீர்மானித்துக்கொண்டு - ஒவ்வொரு குடுவைக்குப் பின்னாலும் - மெதுவாய் நகர ஆரம்பித்தான் விவேக். ஷூக்களை சத்தம் எழுப்ப விடாமல் நடந்து - மூன்றாவது குடுவைக்கு வந்தபோது -

பின்னங் கழுத்தில் சிலீரென்று எதுவோ தொட்டது.

திரும்பினான். கழுத்தில் பிஸ்டலின் வாய் பதிந்திருக்க -

மிக பக்கத்தில் -

ஹெட்டிக் நின்றிருந்தான். வெள்ளையாய் பற்கள் தெரிய இளித்தான்.

.....

# 20

''பிஸ்டலை அப்படி வீசியெறி விவேக்...'' ஹெட்டிக் உறுமினான்.

விவேக் வீசியெறிந்தான்.

''முன்னால் நட...''

நடந்தான்.

முன்னால் இருபதடி தூரம் வந்தபோது - ஆத்மராம் அந்த தூணில் கட்டிப்போடப்பட்டிருப்பது தெரிந்தது. தலையைத் தொங்க போட்டு அவர் தளர்ந்திருந்தார். உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது.

''போய் அப்படி நில்லு...''

விவேக்கைப் பிடித்து தள்ளிவிட்டான் ஹெட்டிக். விவேக் வியர்த்து வழிய தள்ளி நின்றான். ஹெட்டிக் பிஸ்டலை உயர்த்தினான். விவேக்கின் மார்புக்கு குறி வைத்தான்.

''விவேக்... நீ புத்திசாலி... நிமிஷ நேரம்கூட உன்னை விட்டு வைக்கக் கூடாது...'' ட்டிரிக்கரில் விரலை வளைத்தான் ஹெட்டிக். ''நீ உயிரோடு இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எனக்குதான் ஆபத்து...'' சுண்டினான்.

''ட்...டுமீல்...'' - எங்கிருந்தோ ஒரு தோட்டா சீற -

ஹெட்டிக் மணிக்கட்டை உதறிக்கொண்டு திரும்பிப் பார்த்தான். ஹால் வாசலில் - ஆர்தர்.

பக்கத்தில் இன்ஸ்பெக்டர் கானர்ஸ்.

அவர்களுக்குப் பின்னால் - கருநீல யூனிபார்மில் கான்ஸ்டபிள் கும்பல் ஒன்று பிரகாசமான டார்ச் லைட்களோடு பரவினார்கள். கீழே கிடந்த ஆசாமிகளை பொறுக்க ஆரம்பித்தார்கள்.

ஆத்மராமை கானர்ஸ் விடுவிக்க -

ஆர்தர் விவேக்கை நெருங்கி கைகளைப் பற்றிக்கொண்டார். விவேக் ஆச்சர்ய தொனியில் கேட்டான்.

''ஸார்... நீங்கள்... எப்படி... இங்கே... இவ்வளவு சரியாய்...?''

ஆர்தர் புன்னகைத்தார்.

''எல்லாம் நீங்கள் செய்த டெலிபோன்தான்...''

''டெலிபோனா...?''

''எஸ்... நீங்கள் டயல் செய்து - நான் ரிஸீவரை எடுத்த அதே நிமிஷம் - ரிஸீவர் விழுகிற சத்தமும் - தோட்டா வெடிக்கும் சத்தமும் கேட்டது... தொடர்ந்து ரிஸீவரின் வழியே உங்கள் பேச்சுக் குரலும் - வேறு சில பேச்சுக் குரல்களும் கேட்டது. ஊசலாடும் ரிஸீவரை யாருமே கவனிக்கலை போலிருக்கிறது. நான் உடனே டெலிபோன் எக்சேஞ்சில் தொடர்பு கொண்டு - உயிரோடு இருக்கும் இந்த டெலிபோன் நெம்பரைக் கேட்டேன். சொன்னார்கள். அட்ரஸ் கேட்டு விசாரித்துக்கொண்டு - ஜீப்பில் காற்றாய் பறந்து வந்தோம்...''

''தாங்க்யூ ஸார்...''

''நோ... நோ... நீங்கள் தாங்க்ஸ் சொல்ல வேண்டியது - மேஜை முனையில் ஊசலாடும் அந்த டெலிபோன் ரிஸீவர்க்குத்தான்...''

விவேக் சிரித்துக்கொண்டே ஆர்தரோடு ஜீப்பில் வந்து உட்கார்ந்தான். மனசுக்குள் ரூபலாவின் ஞாபகம் கனமாய் வந்து மோதியது. ஹோட்டல் அறையில் ஜன்னலோரமாய் கவலையாய் காத்திருப்பாள்.

'வர்றேன் ரூபலா...'

- முற்றும் -



ராஜேஷ்குமார்

திரு. ராஜேஷ்குமார் அவர்கள் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்து எழுத்தாளராக மாறியவர். இவருடைய முதல் நாவல் 1980ல் மாலைமதியில் வெளிவந்தது. இவர் 18 வருஷ காலத்தில் 1000 நாவல்கள் எழுதியது ஒரு சாதனை. இவரது ஆயிரமாவது நாவல் டைனமைட்-98.

1970ல் இலக்கிய சாதனை விருதும், 1990ல் வாசகர் பேரவையின் சார்பில் சிறந்த எழுத்தாளர் விருதும், 1991ல் யுவரத்னா விருது, அவுட் ஸ்டேண்டிங் யங் பர்சன் அவார்ட் ஆகிய விருதுகளை பெற்றுள்ளார்.

மதுரை பல்கலைக்கழகத்திலும், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் சில மாணவர்கள் இவருடைய நாவல்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் வாங்கியுள்ளார்கள். தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் இவருடைய நாவல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**பூம்புகார் பதிப்பகம்**

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே),

சென்னை - 600 108.

தொலைபேசி : 044-25267543